
கல்கி
KALKI
11.2.1962
30
காசு



பரிசீலனைக்குப் பின் விநியோகம்

மோட்டார் உறுப்புகள் உற்பத்தியாளர் நம் நாட்டில் பலர். உறுப்புகள் விநியோகத்தை மேற்கொள்ளுமுன், நாங்கள் ஒவ்வொரு உறுப்பையும் தரம், நயம், உழைப்பு முதலியவற்றிற்கு பரிசீலனை செய்து, பின்புதான் ஏற்றுக்கொள்கிறோம். இக்காரணத்தினால்தான், "டிவிஎஸ் விநியோகிக்கும் உறுப்பு, உழைப்பில் சிறந்தது" என்பது பழமொழிபோல் உலவுகிறது.

நாங்கள் விற்பனை செய்யும் இந்தியாவில் தயாரித்த உறுப்புகளில் சில:

'ஸ்டாண்டர்ட்' பாட்டரி; 'அல்லைட்' பல்புகள்; 'பெரோடோ' பிரேக் லைனிங்; 'பென்னர்' பான் பெல்டுகள்; 'டபிள் லைப்' சேஸிஸ் பாகங்கள்; 'எச் அண்ட் டி' பிரேக் டிரம்கள்; 'மைகோ' பியூயல் இஞ்செக்ஷன் பாகங்கள்: 'டிரான்கோ' (இந்தியன்) வால்வுகள்; 'கானரா' ஸ்பிரிங், லீவுகள்; QHL - RANE டை ராடு எண்டுகள் ; 'ஹெல்லா' ஹாரன்கள் (இந்தியன்)

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட்.

மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்

மதராஸ்-பெங்களூர்-செகந்திராபாத்

TVS

மதராஸ் ஆட்டோ சர்விஸ் பிரைவேட் லிமிடெட்

மதராஸ்-பெங்களூர்


JWT/TVS-1499

கல்கி

பிலவ, தை 29 — பிப்ரவரி 11, 1962

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



ஆந்திரத்திலுள்ள குண்டூர், கிருஷ்ணா, கிழக்கு கோதாவரி, மேற்கு கோதாவரி ஜில்லாக்களின் கரு நிறத் தளிர் மண்ணும் மழைப் பாங்கான நிலைமையும் வர்ஜீனியா புகையிலை பயிரிடுவதற்கு உகந்தவை. ஆகவே, ஆந்திரம் நம் நாட்டுப் புகையிலையின் மொத்த உற்பத்தியில் 40 சத விகிதத்தையும், இந்திய வர்ஜீனியா புகையிலையின் 90 சத விகிதத்தையும் சாகுபடி செய்து முன்னணி வகிக்கிறது.

புகையிலையின் வரலாறு... 4



பனமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT.704 TM

Greens' Advtg



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 28

மூர்க்கரை ஆதரிக்காதீர்கள்!

எல்லா மதத்தினர், எல்லா ஜாதியினர், எல்லாக் கட்சியினர் - பாரத மக்கள் அனைவருக்கும் உரித்தான மூவர்ணக் கொடியைத் தனதே என்று காட்டிக் கொண்டு மக்களை ஏய்க்கும் காங்கிரஸ் கட்சிக்காரர்கள் வோட்டுக் கேட்க வரும்போது மக்கள் அவர்களைச் சில கேள்விகள் கேட்க வேண்டுமென விரும்புகிறோம். பதினைந்தாண்டுகளாக நாட்டில் ஆட்சி செலுத்தி, இன்னமும் ஐந்தாண்டுகளுக்கு அதிகாரத்தைப் புதுப்பித்துக் கொள்ள ஆசைப்படும் காங்கிரஸ் இந்தக் கேள்விகளுக்குப் பதில் கூறக் கடமைப்பட்டிருக்கிறது. இந்தப் பரீட்சையில் தேறாவிட்டால் காங்கிரஸைத் தோல்வியுறச் செய்ய வேண்டியது மக்களின் கடமையாகும்.

முதலாவதாக, மக்களின் முதல் தேவையான உணவு விஷயத்தில் காங்கிரஸ் கடைப்பிடித்திருக்கும் கொள்கை பற்றிக் கேளுங்கள்: உற்பத்தியைப் பெருக்குவதற்குத் தேவையான முதல் போடக்கூடிய நிலங்களை ஏன் துண்டு போடுகிறீர்கள்? இன்று நில விநியோகத்தைவிட உற்பத்தி உயர்வே உடனடி அவசியமாகும் என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. உபரி நிலங்களை உழவர் யாவருக்கும் பிரித்து விநியோகமும் செய்ய இயலாது என்னும்போது உச்சவரம்புச் சட்டம் செய்வதன் நோக்கம் என்ன? மக்கள் தரும் வரிகளைக் கொண்டு விவசாயத்துக்கு வேண்டிய முதலீடு செய்யப்போனால் எவ்வளவுக்கு வரிகள் உயரும் என்பதைக் கவனித்தீர்களா? இன்று நிலச் சொந்தக்காரர்கள் செய்யும் செலவையெல்லாம் அரசாங்கமே ஏற்று, இறுதியில் அதை மக்களின் தலையில் வரிப் பணமாகச் சுமத்த வேண்டிய அவசியமென்ன?

'உபரி நிலத்தையெல்லாம் சிறு சிறு உடைமைகளாக்க மாட்டோம் கூட்டுறவுப் பண்ணையாக நடத்தி நிறைய முதல் போட்டு நிச்சயம் உற்பத்தியை உயர்த்துவோம்' என்று காங்கிரஸ் மூர்க்கர்கள் சொல்லக்கூடும். 'அப்படியானால் சம விநியோகத்துக்காக நிலவரம்பு விதிப்பதாகப் பேசியதேன்?' என்று கேளுங்கள். கூட்டுறவுப் பண்ணை, விவசாயத்தைப் பாழ் செய்யும் என்பது யாவரும் அறிந்த உண்மை. உற்பத்தி எப்படியானாலும் தாங்கள் என்னவோ தவறாமல் தங்கள் சம்பளத்தைப் பெறலாம் என்று கருதும் அதிகாரிகள் அல்லவா இந்தக் கூட்டுறவுகளை நிர்வகிக்கப் போகிறார்கள்? உழவர்களும் தனியாரிடம் வேலை செய்ததற்குப் பதில் சர்க்காரின் அடிமைகளாகத்தானே இருக்கப் போகிறார்கள்? அக்கறையில்லாமல் நடத்தும் விவசாயத்தில் உற்பத்தி எப்படிப் பெருகும்? 'சம விநியோகம் என்ற சோஷலிஸமும் அல்ல; உற்பத்தி உயர்வுக்கும் உறுதி கிடையாது - இந்த நிலக் கொள்கையை ஏன் ஆதரிக்க வேண்டும்?' என்று கேளுங்கள்.

உரிய நஷ்ட ஈடு கொடுக்காமல் நிலங்களைப் பறிப்பது பகல் கொள்ளைக்கு ஒப்பே அல்லவா? நியாயமான ஓர் உடைமையை இன்று வெளியில் விற்றால் என்ன கிடைக்குமோ அதனையும், விருப்பு வெறுப்பைப் பாராமலே பலவந்தமாகப் பறிமுதல் செய்வதற்காகக் கூடுதலாக ஒரு தொகையையும் அளிக்க வேண்டியது போக நஷ்ட ஈடு என்ற பெயரில் மனம் போனபடி ஒரு தொகையை நிர்ணயித்து அதைப்பற்றி நீதி ஸ்தலத்திலும் வழக்காட முடியாமல் செய்திருப்பது எந்த நீதியைச் சேர்ந்தது? வகுப்புத் துவேஷத் தீயை மூட்டி அதில் ஏழை மக்களைப் பூச்சிகள்போல் விழச் செய்வதால், சூதும், வாதும், பொய்

யும் தர்மமாகி விடாது. யோக்கியமான முறையில் ஈட்டிய சொத்துக்களை—நேர்மையான முறையில் நிர்வகித்து வரும் சொத்துக்களை—பராமரிக்கும் உரிமையை மக்களிடமிருந்து பறிப்பதற்கு எந்த விதத்திலும் சமாதானம் சொல்லவே முடியாது. 'வேலி பயிரை மேய்வது நியாயம்தான்' என்று காங்கிரஸ் நிரூபித்துக் காட்டினாலன்றி அதற்கு நீங்கள் வோட்டளிக்கலாகாது.

அடுத்தபடியாக, பண வீக்கம் என்பதன் மூலம் பெருங் கொள்ளை நடைபெற்று வருகிறது. உடனடித் தேவைகளைத் தூரத் தள்ளிவிட்டு, என்றைக்கோ பயன் தரப்போவதாகக் கருதப்படும் டம்பாச்சாரித் திட்டங்களுக்காகச் சர்க்கார் நூறு நூறு கோடிகளாகச் செலவிட வேண்டியிருக்கிறதல்லவா? இந்தச் செலவுகளைச் செய்வதற்கு நம்முடைய வரிப் பணமும், அயல்நாடுகள் போடும் பிச்சையும் போதாததால் சர்க்காரின் அச்சகம் நோட்டுக்களைக் கத்தை கத்தையாக அடித்துத் தள்ளுகிறது. இவற்றைக் கண்ட்ராக்டர்களுக்கும், ஊழியர்களுக்கும் கொடுத்து நாட்டில் புழங்க விடுகிறது அரசாங்கம். இதனாலேதான் விலைவாசிகள் உயருகின்றன. விலைகள் உயர்கின்றன என்றால் நம்முடைய கையிலுள்ள நாணயத்தின் மதிப்புக் குறைகிறது என்று பொருள். இன்று நம்முடைய ஒரு ரூபாயைக் கொண்டு முன்பு நாலணாவுக்கு வாங்கிய பண்டங்களைத்தான் வாங்க முடிகிறது. காரணம் உடனே செலவிடக் கூடிய பண்டங்களின் உற்பத்தி உயர்வைக் கருத்தில் கொள்ளாமலே காகிதப் பணத்தைக் காங்கிரஸ் அச்சடித்துத் தள்ளுவதுதான். அதாவது நம்முடைய கையிருப்பில் எல்லாம் முக்கால் பங்கினைத் திருடி வருகிறது காங்கிரஸ் ஆட்சி. இந்தக் கதை சீக்கிரத்தில் முடிகிற வழியாகவும் தெரியவில்லை. ஏனெனில் மூன்றும் திட்டத்தில் மேலும் ரூபாய்களை அச்சிட்டுப் புழக்கத்தில் விடப் போகிறோம் என்று வெட்ட வெளிச்சமாகச் சொல்லுகிறார்கள். விலைவாசிகள் இன்னமும் உயரும் என்பதனைத் திட்டக் கமிஷனும், காங்கிரஸின் தேர்தல் அறிக்கையும் ஒப்புக் கொண்டிருக்கின்றன. இது குறித்து, உங்கள் வோட்டை நாடி வரும் காங்கிரஸ்காரர்களிடம் கேளுங்கள்:

"உற்பத்திப் பெருக்கம் பற்றிப் பேசுகிறீர்களே. விலைவாசிகள் எல்லாம் ஏறிக் கொண்டே வரும்போது—மக்களுடைய ஊதியம் உயர்வதற்கு ஓர் அறிகுறியும் தென்படாதபோது—உங்களுடைய கனவில் காணும் உற்பத்தி உயர்வினால் என்ன பிரயோஜனம்?"


பண-விழுங்கிப் பகாசுரத் திட்டங்களை நீக்கினால் அன்றி இந்தப் பண வீக்கம் ஒருகாலும் குறையாது. கண்ட்ராக்டர்களும் இறக்குமதியாளர்களும் அடங்கிய ஒரு சலுகை ஜாதியை சிருஷ்டித்துக் கொள்ளப் பெருவாய்ப்பு நல்கும் இந்தத் திட்டங்களைக் காங்கிரஸ் கட்சியானது நிறைவேற்ற முனைந்திருக்கிறது. இதைப் புரிந்து கொண்டு நாட்டுக்குகந்த நல்ல சிறு திட்டங்கள் வகுக்கும் கட்சியையே மக்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்.

திட்ட ராட்சதனின் பசிக்கு நாசிக் அச்சகம் மட்டும் உணவு படைத்து மாளாது என்பதால் அந்நிய நாடுகளிலிருந்தெல்லாம் கடன் வாங்கி வருகிறது காங்கிரஸ். மூன்றாவது திட்ட இறுதியில் இந்த அந்நியக் கடன்கள் ஐயாயிரம் கோடி ரூபாயாக இருக்கும். 'இவ்வளவு கடனையும் அடைக்க என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்கள்?' என்று உங்கள் ஆதரவைக் கோரி வரும் காங்கிரஸ்காரரைக் கேளுங்கள். ராஜாஜி கேட்டுக் கேட்டுச் சலித்துப் போனார்; பதில் இல்லை.


அந்நிய நாடுகளில் நம்முடைய நாணயம் செல்லாதாகையால் நாம் பொருட்களை அவற்றுக்கு ஏற்றுமதி செய்துதான் இந்தப் பெருங் கடனைத் தீர்க்க வேண்டும். ஆலைப் பண்ட உற்பத்தியில் நம்மை விடப் பல படிகள் மேலே சென்றுள்ள மேல் நாடுகளுக்கு நாம் எந்தப் பொருட்களை உற்பத்தி செய்து இவ்வளவு பெருமளவில் ஏற்றுமதி செய்ய முடியும்? நாட்டில் எழுபது சத விகிதத்தினர் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தும் நாம் தானிய வகைகளை ஏற்றுமதி செய்யக் கையாலாகாத நிலையில் இருப்பதை அமெரிக்காவிலிருந்து நாளுக்கு ஒரு கப்பலாகக் கோதுமை இறக்குமதி செய்வதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். எனவே, அசல் ஐயாயிரம் கோடி ரூபாயையும், வருஷாந்திர வட்டி இருநூறு கோடி ரூபாயையும் எப்படித்தான் நாம் செலுத்தப் போகிறோம்? திருப்பி அடைப்பது பற்றியே எண்ணமிடாமல் கடன் வாங்குவதென்பது உண்டா? கடனைத் திருப்பித் தரா

குடியானவர்களே! நிலத்துக்குக் கிஸ்திக் கட்டணத்தை ஒழித்துவிட முன்வந்திருக்கிறது சுதந்திரக் கட்சி. அந்தக் கட்சியை ஆதரியுங்கள்!

திரும்பிப் பாருங்கள்!



எல்லாத் தாக்குதலும் சுதந்திரக் கட்சிக்கே!



மற் போனால் இந்தியாவுக்கு உலகத்தில் என்ன மதிப்பு இருக்கும்?

நம் நேர்மையையும், மானத்தையும் அடகு வைத்துக் கடன் வாங்குகிறார்கள். உலக வல்லரசுகள் இரு கூறுகப் பகுக்கப்பட்டிருப்பதால் இரண்டுமே இந்தியா எதிராளியிடம் செல்லக் கூடாது என்பதற்காக இந்தக் கடன்களை அள்ளி வீசுகின்றன. நேருசர்க்காரும் பனிப்போரை நம்பி இரு கோஷ்டிகளிடமும் இச்சகம் பாடி 'உதவி' பெற்று வருகிறது. சமயத்துக்குத் தகுந்தாற்போல் அமெரிக்காவையும் ருஷ்யாவையும் ஆதரித்து இரு குரல்களில் பேசி வருகிறது. ஆனால் பனிப்போர் அசல் போரானால் அப்போது இந்த வேஷமும் பலிக்காமல் போய் விடுமே! இந்தியாவின் முன்னேற்றத்தில் அப்போது எந்த நாடு அக்கறை காட்டும்? அப்போது காங்கிரஸின் திட்டங்கள் என்ன ஆவது? இறக்குமதி ஆகவேண்டிய பண்டங்கள் இறக்குமதியாகா. இதற்கெல்லாம் காங்கிரஸ் விளக்கம் கூற முடியுமா?

இன்னொரு முக்கியமான கேள்வியும் காங்கிரஸிடம் கேட்க வேண்டும். அதிகாரத்திலிருக்கும் வாய்ப்பைக் கொண்டு கட்சிக்கு வளம் சேர்ப்பதையும், காங்கிரஸ் கட்சியின் வஞ்சகப் பிரசாரத்தையும் அம்பலமாக்கும் கேள்வி இது. 'எல்லா எதிர்க்கட்சிகளும் அரசியல் கட்சிகளுக்குக் கம்பெனிகள் நன்கொடை தரலாகாது என்று பாராளு மன்றத்தில் கூறிய போது காங்கிரஸ் கட்சி மட்டும் ஏன் அதனை எதிர்த்து முறியடித்தது?' என்று விசாரியுங்கள். மற்றக் கட்சிகளைவிடத் தங்களுக்குத்தான் கம்பெனிகளை நெரித்து நிதி திரட்ட வசதியிருந்தது என்று ஒப்புக் கொள்வதைத் தவிர, இதற்குக் காங்கிரஸ்காரர்கள் ஏதும் பதில் கூற முடியாது. பதவி பலத்தால் பயமுறுத்துவது மட்டுமின்றிப் பணபலத்தாலும் மக்களைப் பணிய வைத்து வோட்டு வாங்குவதற்குத்தான் இந்த ஏற்பாடு என்பது வெளிப்படை. 'ஜனநாயகத்தின் தனிப் பெரும் உரிமையாகிய தேர்தல்களை விற்பனை செய்ய முன் வர மாட்டோம்' என்று மக்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும். 'நாங்கள் விடுக்கும் கேள்விகளுக்கு நியாயமாக, தர்மமாக, சத்தியமாக விடை கூறினுலொழிய உங்களுக்கு வோட்டு கிடையாது' என்று கூற வேண்டும்.

முன்னேற்றம் என்றால் என்ன?

ஒரு அதிபுத்திசாலித்தனமான வாதம் நம் பார்வைக்கு வந்துள்ளது. முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடும் சுதந்திரக் கட்சியை ஓர் எதிர்க்கட்சியாகவே மதிக்க இடமில்லை என்று அபத்த வாதம் செய்துள்ள அந்த பிருகஸ்பதிகளின் பார்வைக்குச் சுதந்திரக்கட்சியின் தேர்தல் அறிக்கையில் சில பகுதிகளைக் கொண்டு வருகிறோம்:

11. தனி மனிதனுக்கு உணவும், உடையும் இருப்பிடமும் அளிப்பதுதான் அரசாங்கத்தின் தலையாய கடமை என சுதந்திரக்கட்சி கருதுகிறது. வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பது, உணவு தானிய விளைச்சலில் பெருக்கம் காண்பது, மேலும் பல சிறிய நீர்ப் பாசனத் திட்டங்கள் நிறுவுவது, பள்ளிகள் கட்டுவது, பொது மக்கள் உபயோகிக்கும் பண்டங்களை உற்பத்தி செய்யும் சிறு தொழில்களை வளர்ப்பது—இவற்றுக்காகவே ஏற்பட்டது சுதந்திரக் கட்சி.

12. கிராமப்புறங்களில் சுத்தமான குடிநீர் வழங்குவதிலும், பட்டணங்கள், அவற்றின் சுற்றுப்புறங்கள் இவை போல கிராமப்புறங்களிலும் வீட்டு வசதி அளிப்பதிலும் சுதந்திரக் கட்சி முதல் கவனம் செலுத்தும்.

13. சாலைகள், வாய்க்கால்கள், பாலங்கள், சாலைப் போக்கு வரவு, உள்நாட்டு நீர் மார்க்கப் போக்கு வரவு ஆகியவை எவ்வளவு முக்கியம் வாய்ந்தவை என்பதை இக்கட்சி உணர்ந்துள்ளது.

14. வசதிகள் படைத்த வைத்திய நிலையங்களின் சிகிச்சையைக் கிராம மக்களும் எளிதில் காலதாமதமின்றிப் பெறுமாறு ஆம்புலன்ஸ் வண்டி வசதியை இக்கட்சி விஸ்தரிக்கும்.

15. இப்போதுள்ள பிரம்மாண்டப் படாடோபத் திட்டங்கள் மக்களின் உடனடித் தேவைகளைக்கருதாதவை. அல்லது அப்படிக் கருதினாலும் அத்திட்டங்களைக் காரியமாக்கும் போது செலவிடும் தொகையில் பெரும் பகுதி பயனற்ற இனங்களில் வீணாகி விடுகிறது. இந்தத் தொகையைச் சரியானபடி செலவிட்டால் சுதந்திரக் கட்சியின் நோக்கங்களை மிகவும் சுலபமாக நிறைவேற்றி விடலாம். தனிகால இயந்திர வசதிபெற்ற சிறு தொழில்களை ஊக்குவதற்கும், மலிவான துணி வகைகளைத் தயாரிப்பதற்கும் இந்தத் தொகையைச் செலவிட்டால் குறைந்த மூலதனச் செலவிலேயே ஏராளமான தொழிலாளி மக்களுக்கு லாபகரமான ஊதியம் அளிக்க முடியும். இதனால் நாட்டிலுள்ள இடாத்திரமான மக்கள் யாவரும் வேலைபெறுவது சாத்தியமாகும்.

21. விவசாயிக்கு நீரும், உரமும், விதையும், கருவியும், கடனும், தொழில் நுணுக்க அறிவும் அளித்து, அவனது நிலவளம் முழுதும் பயனுக்கு வருமாறு தீவிர சாகு

படிக்கான வசதிகளைச் செய்து தர வேண்டுமென்பது சுதந்திரக்கட்சியின் கொள்கை.

27. சுதந்திரக் கட்சியானது.

(i) கிராமப் பகுதிகளில் விரைவாக மின்சாரம் வழங்குவதற்கான ஏற்பாடுகளில் விசேஷ கவனம் செலுத்தும்.

(ii) உபரியாகவுள்ள உழவுத் தொழிலாளரை இதர துறைகளில் ஈடுபடுத்துவதற்காகச் சிறிய அளவில் அமைந்த நவீன இயந்திரத் தொழிலகங்களை நிறுவும்.

(iii) விவசாயக் கருவிகளையும் இதர கருவிகளையும் சீரான முறையில் வைத்திருப்பதற்காகத் தொழில் நுணுக்கக் கல்வி அளிக்கும். பல பட்டறைகளையும் அமைத்து அவற்றின் சேவையால் மக்கள் பயனடைய வழி வகுக்கும்.

29. சுதந்திரக் கட்சியானது முதலீட்டுச் சங்கங்கள், டிரஸ்டுகள், ஆகியவற்றை நிறுவி அதிகம் பணம் படைத்திராதவர்களுக்கும் சிறு முதலீடுகள் செய்ய வாய்ப்பு அளிக்கும். தொழில் துறை ஊழியர்கள் தங்கள் தொழிற்சாலைகளில் பங்குதாரராக ஆவதற்கு அது வசதி அளிக்கும்.

30. அபிவிருத்தி அடைந்து வரும் ஒரு நாட்டில் சர்க்கார் செய்யக் கூடியது எவ்வளவோ உண்டு; சாலைகள் முதலியபோக்குவரத்துச் சாதனங்களை அபிவிருத்தி செய்வது, மக்கள் ஒருவரோடொருவர் தொடர்பு கொள்ளும் இதர சாதனங்களை வளர்ப்பது, மலிவாக மின்சாரம் கிடைக்கச் செய்வது— இவை சர்க்காரின் காரியமாகும்.

31. மூலதனப் பொருள்களைத் தயாரிக்கும் ஆலைத் தொழில், மக்கள் உபயோகப்படுத்தும் பொருட்களை உற்பத்தி செய்யும் தொழில்கள், விவசாயப்பொருட்களைப் பதப்படுத்திக் கிராம மக்களுக்குத் துணைத்தொழிலாக அமையும் தொழில்கள் ஆகியவை ஒன்றோடொன்று இணைந்தமுறையில் சீராக அபிவிருத்தி அடைய வேண்டும் என்பது சுதந்திரக் கட்சியின் கொள்கை. நமக்குள்ள வசதிகளுக்கு ஏற்பக் கனரகத் தொழில்களையும், ஆதாரத் தொழில்களையும் அபிவிருத்தி செய்வதற்கு அது ஆட்சேபிக்கவில்லை. குறைந்த வருமானமுள்ளவர்களின் வாழ்க்கையை மகிழ்ச்சிகரமாக்கும் விவசாயத்தையும், குடிசைத் தொழில்களையும் மக்கள் உபயோகிக்கும் பண்டங்களை உற்பத்தி செய்யும் தொழில்களையும் அசட்டை செய்து, இணக்கமற்ற முறையில் கனரகத் தொழிற்சாலைகளுக்கு மட்டுமே பிரதான இடமளிப்பதைச் சுதந்திரக் கட்சி எதிர்க்கிறது.

33. தனி மனிதர்கள் முதலீடு செய்வதற்கு ஊக்கமளிப்பதே சுதந்திரக் கட்சியின் நோக்கம். தேவைப்படுமானால் இதற்காகக் கடன்களும், உதவிகளும் அளிக்கும். அக் கட்சி கிராமப் புறங்களில் பொதுத் துறை மராமத்துகளைப் பரவலாக அமைத்து எல்லாப் பகுதிகளில் வாழ்பவர்களுக்கும் வேலை கிடைக்கச் செய்யும்.

41. இந்தியா அதன் ஏற்றுமதிகளைப் பெருக்க வேண்டியது மிகவும் அவசிய


சத்குரு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் நூற்றுப் பதினைந்தாவது ஆராதனை உத்ஸவம் ஜனவரி 25-ந் தேதியன்று திருவையாற்றில் பக்தி மணம் கமழும் சூழலில் விமரிசையாக நடந்தேறியது. 25, 26, 27 தேதிகளில் காலை எட்டு மணியிலிருந்து இரவு பன்னிரண்டு மணி வரை ஏராளமான வித்வான்கள் சத்குருவுக்கு இசைபாடி அஞ்சலி செலுத்தினர். மக்களும் திரண்டு வந்திருந்து நாதயோகியின் நினைவுக்கு மரியாதை செலுத்தினார்கள்.



மாகும் என்பதைச் சுதந்திரக் கட்சி தயங்காமல் ஒப்புக்கொள்கிறது. ஆனால் உள் நாட்டுக்குத் தேவைப்படும் பண்டங்களை நிர்ப்பந்தத்தின் மீது ஏற்றுமதி செய்து, வசதிக் குறைவையும் இன்னலையும் விளைவிக்கும் கொள்கையை அது எதிர்க்கிறது. உற்பத்தித் திறன் அதிகரித்து குறைந்த செலவிலேயே நிறைவாக உற்பத்தி செய்தால்தான் நம்முடைய பொருள்கள் உலகச் சந்தைகளில் போட்டியிட முடியும். சுதந்திரக் கட்சி இதற்கேற்ற கொள்கையை கடைப்பிடித்து ஏற்றுமதியைப் பெருக்கும்.

'இதெல்லாம் முன்னேற்றம் ஆகாது; நம்முடைய சக்திக்கு மீறி விரல் உரலாக வீங்கித் தலை தெறிக்கக் கம்யூனிஸ்டுப் பாதையில் செல்வதே முன்னேற்றம்; நாட்டு மக்களை அரசாங்கத்தின் அடிமைகளாக்கி, உலக அரங்கில் நம் மானத்தை இழக்கச் செய்யும் காங்கிரஸின் திட்டம் தான் முன்னேற்றம் அளிக்கும்' என்று சில சாமர்த்தியசாலிகள் கருதினால் அவர்களுக்காகப் பரிதாபப் படுவது தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை.

சுதந்திரக் கட்சியின் கொள்கை பிடிக்காதிருக்கலாம். ஆனால் இதற்கு எதிர் கட்சி அந்தஸ்தே கொடுக்க முடியாது என்பது விந்தையான விதண்டா வாதம். சுதந்திரக்கட்சி ஒன்றுதான் ஆளும் இடதுசாரிக் கட்சியின் சாயல்களில் ஒடுங்காமல் தனித்துவம் பெற்று விளங்குகிற ஒரே வலதுசாரிக் கட்சி — அதாவது ஒரே உண்மையான எதிர்க் கட்சி என்று ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் போன்ற அறிஞர்கள் கூறியிருக்கின்றனர். அரசியல் தத்துவங்களையோ, ஜனநாயக பார்லிமெண்டரி முறையையோ அறியமனமில்லாதவர்கள் தங்களுடைய ஞான சூனியத்தை இவ்வளவு வெளிச்சம் போட்டு வெளிப்படுத்திக் கொள்ள வேண்டாம்.



தர்மத்தை யழிக்கும் கட்சி
பெர்மிட்டு லைசென்ஸ் கட்சி
காற்று மூட்டைக் கட்சி
தோற்றுப் போவது திண்ணம்

தர்மத்தின் எடை


"**சு**தந்திரக் கட்சியானது சட்டசபை ஸ்தானங்களில் பாதிக்குக்கூட அபேட்சகர்களை நிறுத்தி வைக்க வில்லை; எனவே அது எப்படி சர்க்கார் அமைக்க முடியும்? ஆனபடியால் எங்களுக்கே வோட்டுப் போடுங்கள்" என்று தமிழ் நாட்டில் காங்கிரஸ் பிரசாரம் நடக்கிறதாம்.

எதிர்க் கட்சி ஒன்று இருந்தால்தான் ஆளும் கட்சி தவறான வழியில் செல்லாதபடி ஒரு கண்காணிப்புக் கிடைக்கும் என்ற பிரக்ஞை இல்லாததால் எழுந்த பேச்சே இது. அதோடு எந்த ஒரு பிரச்னைக்கும் இரு பக்கங்கள் உண்டு; மாற்றுப் பக்கத்தின் சார்பில் கூறப்படுவதையும் அறிந்து பயன்பெற எதிர்க் கட்சி மிகவும் அவசியமாகும். சில சமயங்களில் எதிர்க் கட்சி வாதங்களின் சிறப்புக் காரணமாக ஆளும் கட்சி அவற்றை ஏற்பதுகூட உண்டு. சுதந்திரக் கட்சியே இப்போப்பட்ட அதிசயத்தைச் சாதித்திருக்கிறது.

அயல்நாட்டுச் சர்க்கார்களிடம் கடன் பெறுவதைவிட அந்நாட்டுத் தொழிலதிபர்கள் சுயமாக மனமுவந்து நம் நாட்டுத் தொழில்களில் கூட்டுறைப்பு தர வாய்ப்புக்கள் அளிப்பது சிறப்பான வழியாகும் என்று சுதந்திரக் கட்சித் தலைவர் ராஜாஜி கூறினார். அதன்பின் இது விஷயத்தில் இந்திய சர்க்கார் உண்மையிலேயே சிறிது சிரத்தை காட்டியது.

இப்போது சுதந்திரக் கட்சி நில வரியை ரத்து செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகிறதல்லவா? இதைக் கண்ட ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் — பல்லாண்டுகளாக இவ்விஷயமாக வாயையே திறந்திராதவர் —'ஏன், நான் கூடத்தான் நில வரியை ஒழிக்க வேண்டுமென்று வெகு காலத்துக்கு முன்னரே கருதியதுண்டு' என்று கூறி நில வரி ஒழிப்புக்கு 'ஸ்விகாரத் தந்தை' யாகியிருக்கிறார்.

நில வரியை ரத்து செய்யவேண்டும் என்று யார் முதலில் கூறினார்கள் என்பது பிரச்னையில்லை. அதை 'மறந்தே' போயிருந்தவர்களும், சுதந்திரக் கட்சி விருதா பனத்தைக் கண்ட பின் அதனை அமுலாக்கத் தலைப்படுகிறார்கள் என்பதே கவனிக்க வேண்டிய விஷயம். இதுவே அறத்தின் பலமாகும்.


ஜாதிப்பற்று வைத்து
வோட் கேட்கலாகாது!
அது இருக்கட்டும்...
ஜாதித்துவேஷத்தை வைத்து
தேர்தல் நடத்தலாமோ
இல்லையா!.......


வடக்கு
தெற்கு

சேரிகளை ஒழித்து விட்டுப் புது இடங்களில் வீடு கட்டிக் கொடுப்பதால் அவற்றில் வாழும் மக்கள் தங்களுடைய பழைய அலுவல் இடத்துக்கு வந்து போவதற்கு மிகவும் அவதிப்படுவார்கள்; எனவே இப்போது சேரிகள் உள்ள இடத்திலேயேதான் புது குடியிருப்புகள் அமைத்துத் தர வேண்டும் என்று ராஜாஜி கூறி வருகிறாரல்லவா? இந்த யோசனையையும் தமதாக்கிக் கொண்டிருக்கிறார் ஸ்ரீ டி.டி. கே.

மூர்த்தி சிறிதானாலும் கீர்த்தி பெரிது என்பார்களே, அதைப் போல தர்ம பலம் பெற்றவர்கள் எண்ணிக்கையில் சிறுபான்மையாக இருந்தாலும் அவர்களுடைய கருத்தின் நிறை பெரிது. அது பெரும்பான்மையினரின் கருத்தையும் கூட மாற்றவல்லது. தர்மத்துக்கு அடி பணியாவிட்டாலும் வாக்காளரின் வோட்டுச் சீட்டைப் பெறவாவது இத்தக் கருத்துக்களை ஆளும் கட்சி ஏற்கும்; ஏற்றும் இருக்கிறது. எனவே, காங்கிரஸின் மடமை நிறைந்த பிரசாரத்துக்கு மக்கள் செவி சாய்க்கலாகாது.

இன்னொரு விஷயம். சுதந்திரக் கட்சி எல்லா இடங்களுக்கும் போட்டியிடவில்லை என்று கூறி யிருப்பதன் மூலம் 'அது பணக்காரக் கட்சி' என்ற தங்கள் பழைய குற்றச்சாட்டைக் காங்கிரஸ் ரத்து செய்து கொண்டிருக்கிறது. காங்கிரஸின் பண பலத்துக்கு ஈடாகப் பொருள் செலவிட்டு அபேட்சகர்களை நிறுத்தி வைக்கச் சுதந்திரக் கட்சியிடம் திரவிய பலம் இல்லை. இந்த உண்மை வெளிப்படுவதற்கு உதவிய காங்கிரஸ் பிரசாரகர்களுக்கு நமது நன்றி.

காங்கிரஸ் ஆட்சியில்.....

காங்கிரஸ் சர்க்கார் இந்த நாட்டுக்கு அளித்துள்ள சாபக்கேடுகளில் மிகப் பெரியது திட்டக் கமிஷன். சோஷலிஸம் என்ற மூக்காட்டில் மறைந்துள்ள இன்றைய காங்கிரஸின் கம்யூனிஸ இதயத்தை அப்பட்டமாகப் புலப்படுத்துவது இந்த திட்டக் கமிஷன்தான். கம்யூனிஸ நாடுகள் தவிர உலகின் எந்தச் சுதந்திர நாட்டிலும் தேசிய திட்டக் கமிஷன்களோ, ஐந்தாண்டுத் திட்டங்களோ கிடையாது. போலந்திலிருந்து வரவழைக்கப்பட்ட ஒரு கம்யூனிஸ்ட் பேராசிரியரும், ருஷியா மனமுவந்து அனுப்பி வைத்த திட்ட நிபுணர்களுமாகக் கல்கத்தாவிலுள்ள இந்திய புள்ளி விவர நிலையத்தில் ஒன்று கூடித்தான் நமது திட்டங்களின் அமைப்பை உருவாக்கினார்கள் என்பதை மக்கள் அறியவேண்டும்.

ஆட்சியாளர்கள் தங்கள் சாதனைகளை உலகுக்குக் காட்டுவதற்காக பிரம்மாண்டமான அணு உலைகளையும், விமானக் கப்பல் தளங்களையும் நிர்மாணித்து மக்களின் அன்றாட உபயோகப் பொருட்களின் உற்பத்தியைத் தடை செய்ய இந்தத் திட்டங்கள் தாம் பெருதவி புரிகின்றன. ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை பொதுத் தேர்தல் நடப்பதற்கிசைய, ஐந்தாண்டுக்கு ஒரு படாடோபத் திட்டமாகத் தீட்டி அதன் ஒளியால் மக்களின் சிந்தனை சக்தியைக் கூசச் செய்து 'நாங்களே இதன் கர்த்தாக்கள்' என்று காங்கிரஸ்காரர்கள் வோட்டு வேட்டையாட வசதி தருவதும் திட்டங்கள்தாம்.

திட்டக்கமிஷன் அங்கத்தினர்கள் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அல்ல; திட்டக் கமிஷனுக்கு அரசியல் நிர்ணயச் சட்டத்தின் அங்கீகாரமும் கிடையாது. ஆனாலும் நமது 'ஜனநாயக'த்தில் இந்தத் திட்டக் கமிஷன்தான் இன்று ராஜ்ய, மத்திய சர்க்கார்களுக்கும் மேற்பட்ட மகா சர்க்காராக இருக்கிறது. நாட்டுப் பொருளாதாரத்தை நிர்ணயிப்பதும், நிதிப் பங்கீடு செய்வதும் அதன் பொறுப்பாகி விட்டன. மந்திரிமார்கள் எல்லாம் தங்கள் துறைக்கு இவ்வளவு தொகை ஒதுக்க வேண்டும் என்று இந்த மகா சர்க்காரிடம் கெஞ்ச வேண்டியிருக்கின்றன.

அதோடு நிற்கவில்லை திட்டக்கமிஷன். சட்ட சபையில் நிறைவேறும் மசோதாக்களைக் கூட நிறுத்தி வைக்க அது அதிகாரம் பெற்றிருக்கிறது. ஆந்திரா சட்ட சபையில், ரூ. 5400 வருஷ வருமானத்துக்கு மேல் அளிக்கும் நில உடைமைகளுக்கு வரம்பு விதிக்க வேண்டும் என்று ராஜ்ய சர்க்கார் மசோதா கொண்டு வந்த போது வரம்பை ரூ. 3600 வருமானமாகக் குறைக்க வேண்டும் என்று திட்டக்கமிஷன் கட்டளை இட்டது. 'மைசூர் நிலவரம்புச் சட்டம் திட்டக் கமிஷனுக்குத் திருப்திகரமாக இல்லா விட்டால் ஜனாதிபதி அதற்கு அங்கீகாரம் அளிக்க முடியாதபடி தடை செய்வோம்' என்று சமீபத்தில் கமிஷன் அங்கத்தினர் ஸ்ரீ ஸ்ரீமன் நாராயண் ஒளிவு மறைவு இன்றிக் கூறினார்.

மக்களின் வாக்குரிமையைக் கொண்டு அமைக்கப்படாத திட்டக் கமிஷனின் ஆட்சியில் நாடு இருக்கும் போது இதனை எப்படி ஜனநாயகம் என்பது? பார்லிமென்டுக்கு விளக்கம் தர வேண்டிய பொறுப்பும் இல்லாத திட்டக்கமிஷன் இன்னதான் செய்யாது என்று யார் சொல்ல முடியும்? ஆளும் கட்சியின் ஆட்சியை வேருன்றவே பயனாகும் இந்த திட்டக் கமிஷனை ஒழிக்க விரும்பும் சுதந்திரக் கட்சியை ஆதரிக்க வேண்டியது ஜனநாயகத்தில் பற்றுள்ளவர்களின் கடமையாகும்.


பேராசிரியர் பிரிவு

'சுதேச மித்திரன்' ஆசிரியர் ஸ்ரீ சி. ஆர். ஸ்ரீநிவாசன் அவர்கள் மறைவில் தமிழகம் பத்திரிகை உலக ஜாம்பவான் ஒருவரை இழந்து விட்டது. அரை நூற்றாண்டு காலமாகத் தமிழ்ப் பத்திரிகைத் துறைக்கு அரிய பணி ஆற்றியவர் ஸ்ரீ ஸ்ரீநிவாசன். அந்நிய ஆட்சியின் கொடுமைகளுக்கும், தணிக்கைகளுக்கும் ஏடுகள் இலக்கான ஒரு காலத்தில் துணிவுடன் தேசிய உணர்வைத் தமது தினத்தாள் மூலம் பரப்பியவர் அவர்.

1915-ம் ஆண்டு 'மித்திரன்' மானேஜராகப் பணி தொடங்கியதிலிருந்து 1928-ல் அதன் ஆசிரியராகவும், 1934-ல் நிர்வாக டைரக்டராகவும் உயர்ந்து 1955-ம் ஆண்டு ஓய்வு பெறும் வரையில் அந்தப் பத்திரிகையையும், அதனோடு தமிழ் நாட்டு அரசியல் வாழ்வையும் சிறப்புறச் செய்தார் அவர். காலமாகும் வரையில் கௌரவ ஆசிரியர் என்ற முறையில் 'மித்திர'னுடன் இணைந்திருந்தார்.

ஸ்ரீ ஸ்ரீநிவாசனின் சிறந்த கல்வியும், நாட்டுப் பற்றும் அவரது எளிய தமிழ் நடையில் பிரதிபலித்துக் கருத்துக்களை உருவாக்கின. சர்வ தேசப் பத்திரிகைக் கழகம் உட்படப் பல சங்கங்களில் இடம் பெற்றிருந்த ஸ்ரீ ஸ்ரீநிவாசன் தமிழ்நாட்டுப் பத்திரிகைத் தொழிலுக்கு உலக அரங்கில் புகழ் தேடித் தந்தார்.

'தராசு' என்ற பெயரில் நாம் அறிந்த பிரமுகர்களை எடை போட்டு அவர் எழுதியுள்ள தமிழ் நூலும், விவசாயம், பாங்கு முறை, வர்த்தகம் இவை பற்றி



'ஏ. பி. ஸி. பேச்சுக்கள்' என்ற தலைப்பில் எழுதியுள்ள ஆங்கில நூலும் இவ்விரு மொழிகளிலும் அவருக்குள்ள புலமையையும், லாகவமான நடையையும், தெளிவான நோக்கத்தையும் புலப்படுத்தும். ஸ்ரீ சி. ஆர். எஸ். தேர்ந்த பேச்சாளரும் ஆவார்.

பொருளாதாரத் துறையிலும் பெரும்புள்ளியாக விளங்கியவர் ஸ்ரீ சி. ஆர். எஸ். அவர்கள். பாரி கம்பெனி, டெக்கான் ஷுகர் கம்பெனி, இந்தியன் ஸ்டீல் ரோலிங் மில்ஸ், காவிரி ஸ்பின்னிங் மில்ஸ், கிர்லோஸ்கர் எலெக்ட்ரிக் கம்பெனி ஆகியவற்றுக்குத் தலைவர் என்ற முறையில் சர்க்கரை, இரும்பு, நூற்பு, மின்சாரத் தொழில்களில் தமது திறமையை நிரூபித்துக் காட்டியவர். ரிஸர்வ் பாங்கு டைரக்டராகவும் பணி புரிந்தவர்.

ஸ்ரீ ஸ்ரீநிவாசனின் தமிழன்பு மிகப் பெரியது. 'மித்திரன்' ஆசிரியர் குழாத்தில் பணியாற்றிய பாரதியாருக்கு பேராசிரியர் கல்கி ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நினைவுச் சின்னம் எழுப்பியதற்குப் பிரதிபோல் கல்கி அவர்கள் நினைவை நிலை நாட்ட நிதி திரட்டினார் ஸ்ரீ ஸ்ரீநிவாசன்.

ஸ்ரீ சி. ஆர். எஸ். உழைப்பாலும், ஊக்கத்தாலும் தாமாகவே உயர்ந்தவர். ஏட்டுக்கொரு ஆசிரியராக மட்டுமின்றி நாட்டுக்கொரு நண்பராக — சுதேச மித்திரராக—இருந்த அந்தப் பெரியாரை இன்று நாம் இழந்து விட்டோம்.

இன்று 'மித்திரன்' பத்திரிகையை தந்தையார் வகுத்த முறையிலேயே நிர்வகித்துவரும் ஸ்ரீ சி.எஸ். நரசிம்மன் அவர்களுக்கும், ஸ்ரீமதி சி. ஆர். ஸ்ரீநிவாசன் அவர்களுக்கும் நம் அநுதாபங்கள்.



ஸ்ரீமதி பத்மஜா நாயுடு
(பத்ம விபூஷண்)




ஸ்ரீ எச் வி. ஆர். அய்யங்கார்
(பத்ம விபூஷண்)



ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்
(பத்ம விபூஷண்)



ஸ்ரீமதி ஸௌந்தரம்
ராமச்சந்திரன்
(பத்ம பூஷண்)





டாக்டர் வே. ராகவன்
(பத்ம பூஷண்)



ஸ்ரீ சத்யநாராயணா
(பத்ம பூஷண்)




படேகுலாம் அலிகான்
(பத்ம பூஷண்)



ஸ்ரீ வி. பி. அப்பாத்துரை
(பத்மஸ்ரீ)



ஸ்ரீ ராமசுவாமி அய்யர்
(பத்மஸ்ரீ)



ஸ்ரீ ஆர். கிருஷ்ணன்
(பத்மஸ்ரீ)

ஜனாதிபதி விருது பெற்ற பிரமுகர்கள்

வழக்கம் போலவே இந்தக் குடியரசு தினத்தன்றும் கலை, சமூக சேவை, விஞ்ஞானம், நிர்வாகம் முதலியவற்றில் புகழ் பெற்றுள்ள பலருக்கு ஜனாதிபதி விருதுகள் அளிக்கப்பட்டிருக்கின்றன; இவர்களில் பலர் தமிழ் நாட்டவர்கள் ஆவர்; அல்லது தமிழகத்திலேயே நீண்டகாலம் வசித்தவர்களாவர்.

சமூக சேவகி ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் பத்மபூஷண் விருது பெற்றிருக்கிறார். சென்னைப் பல்கலைக் கழக சம்ஸ்கிருதப் பேராசிரியரும், சிறந்த கலைஞரும், ரசிக சிகாமணியுமான டாக்டர் வே. ராகவன் அவர்களையும் பத்ம பூஷண் விருது சென்றடைந்திருக்கிறது. மருத்துவ நிபுணர்கள் கர்னல் ஆர். டி. அய்யரவர்களும் கர்னல் எம். என். ராவ் அவர்களும் இந்த விருதைப் பெற்றுள்ளனர். தமிழ்நாட்டிலேயே நீண்டகாலமாக வாழ்ந்து இந்தியைப் பரப்பி வரும் ஸ்ரீ மோட்டூரி சத்திய நாராயணா அவர்களும் பத்ம பூஷண் பட்டம் பெற்றவர்களுள் ஒருவர்.

தமிழக மின்சாரத் துறை பிரதம என்ஜினீயராக அரும்பணி புரிந்து நாட்டுக்கு ஒளி படைத்து வரும் ஸ்ரீ வி. பி. அப்பாத்துரை அவர்களும், சமூக சேவையில் பெயரெடுத்துள்ள திருச்சி ஸ்ரீ ராமசுவாமி அய்யரவர்களும், பத்மஸ்ரீ விருது பெற்றிருக்கிறார்கள்.

இவ்வாண்டு ஜனாதிபதி கௌரவத்தைப் பெற்றவர்களில் விளையாட்டுக் கலை மன்னர்கள் பலர் இடம் பெற்றிருப்பதைக் குறிப்பிட வேண்டும். பொது மக்களுக்குக் களிப்பூட்டுவதோடு தேக திடத்துக்கும் வழிகாட்டும் விளையாட்டுக்களை விளையாட்டாகத் தள்ளிவிடுவதற்கில்லை அல்லவா? எனவே அகில உலக விளையாட்டரங்கில் தமிழகத்தின் பெருமையை நிலைநாட்டியுள்ள டென்னிஸ் மாவீரர் ஸ்ரீ ஆர். கிருஷ்ணன் அவர்களும், கிரிக்கெட் சரித்திரத்தில் பாரதத்தின் பெருமையைப் பொன்னெழுத்தில் பொறித்துள்ள ஸ்ரீ கண்ட்ராக்டர், ஸ்ரீ உம்ரீகர் ஆகியோரும் இந்தத் தேசிய கௌரவம் பெற்றிருப்பதில் மகிழ்கிறோம்.



கண்ட்ராக்டர்
(பத்மஸ்ரீ)



உம்ரீகர்
(பத்மஸ்ரீ)



அசோக்குமார்
(பத்மஸ்ரீ)

நாட்டுக்குச் சிறப்பு நட்சத்திரச் சின்னம்

நமது நிருபர்

சென்றமாதம் தமிழகத்தில் ஒன்பது நாட்களில் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட ஊர்களுக்குச் சென்று மாபெரும் பொதுக் கூட்டங்களில் பேசியிருக்கிறார் தலைவர் ராஜாஜி. இதைத் தவிர பல ஊழியர் கூட்டங்களிலும் கலந்துகொண்டிருக்கிறார். இடையே சுதந்திரக் கட்சி சம்பந்தமான வேறு பல அலுவல்களையும் கவனித்து வந்திருக்கிறார். 'எண்பத்தைந்து வயதில் ராஜாஜி அவர்கள் எப்படி இத்தனை சிரமங்களையும் தாங்குகிறார்? எவ்வாறு எல்லாக் காரியங்களையும் சற்றும் காலதாமதமின்றிக் கவனிக்கிறார்?' என்ற வியப்பு கொப்புளிக்கும் கேள்விக்கு ராஜாஜியே அளித்த பதில் இதுதான்:

"இந்த வயதில் எப்படி இத்தனை காரியங்களையும் செய்கிறேன் என்று யோசியாதீர்கள்! ஏன் செய்கிறேன் என்று சிந்தியுங்கள்!"

இந்தச் சுற்றுப் பிரயாணத்தின் போது ராஜாஜி முதலில் சென்றது பெங்களூருக்கு. அரசாங்கமும் மக்களும் சமுதாயத்திலெப்படி இயங்க வேண்டும் என்பதை அற்புதமான ஓர் உவமை மூலம் விளக்கினார் அங்கே. "அரசாங்கம் என்பது மக்களின் பாதுகாப்புக்காக ஏற்பட்ட ஒன்று. வேலியாக அமைந்து பயிரைக் காப்பது போல் அது மக்களைக் காப்பாற்ற வேண்டும். வேலியாக நாம் நட்ட நாகதாளி அல்லது சப்பாத்திக் கள்ளி கழனியெல்லாம் பரவி வளரத் தொடங்கினால் நாம் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கலாமா? பயிர் அழிந்தல்லவா போகும்? இன்று காங்கிரஸ் ஆட்சியும் இப்படித்தான் எல்லா விவகாரங்களிலும் தலையிடுகிறது. விவசாயம், வியாபாரம், தொழில் எல்லாவற்றிலும் சர்க்கார் பிரவேசித்து நடத்த ஆரம்பித்தால் தனி மனிதன் என்ற பயிர் அழிந்து போகும்."

பெங்களூர் நகர சுதந்திரக் கட்சிப் பிரமுகர்களான ஸ்ரீ வி. டி. ஸ்ரீனிவாசன், ஸ்ரீ வி. பி. மேனன், ஸ்ரீ பி.வி. நாராயண ரெட்டி, ஸ்ரீ எம். ஏ. ஸ்ரீனிவாசன் ஆகியோரெல்லாம் மேடையில் பிரசன்னமாகியிருந்தார்கள். தேர்தலில் போட்டியிடும் சுதந்திரக் கட்சி அபேட்சகர்களை மக்களுக்குத் தாம் சென்ற விடங்களிலெல்லாம் அறிமுகப்படுத்தி வைத்தார் ராஜாஜி. பெங்களூரைப் பொறுத்த வரை எல்லா சுதந்திரக் கட்சி அபேட்சகர்களுக்குமே மக்களிடம் செல்வாக்கு உள்ளது என்றாலும் ஸ்ரீ வி. டி. ஸ்ரீனிவாசன், ஸ்ரீமதி நீலவேணி இருவரும், மக்கள் சபைக்கு திரு வி. எஸ். நடராஜன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்படுவது உறுதி என்று பேசிக்கொண்டார்கள்.

நில வரிகளை ரத்து செய்து விட வேண்டும் என்ற சுதந்திரக் கட்சியின் கொள்கையைப் பற்றி மேட்டுப்பாளையத்தில் விளக்கினார் தலைவர் ராஜாஜி. "விவசாயிகள் உழைத்துப் பாடுபட்டு நாட்டிலுள்ளோர்களுக்கெல்லாம் உணவளிக்கிறார்கள். நம்மெல்லோருக்கும் சாப்பாடு போடும் விவசாயிகளுக்கு வரி போடுவது பாலூட்டி வளர்த்த தாய்க்கு மகன் வரி போடுவதற்குச் சமானமாகும்!" என்றார்.

நிதி அமைச்சர் திரு சி. சுப்பிரமணியம் கோவையில் டில்லி சட்ட சபைக்காக சுதந்திரக் கட்சி சார்பில் அபேட்சகராய் நிற்கும் திரு ஜி. கே. சுந்தரம் அவர்களை கன்னிரும்பு என்றும் காங்கிரஸ் அபேட்சகரை வெண்ணெய் என்றும் குறிப்பிட்டுப் பேசியிருந்தாராம். இது குறித்து கோயமுத்தூரில் சிலர் ரொம்பவும் கோபப்பட்டார்கள். ராஜாஜி அவர்களோ, "கவலையே வேண்டாம்! கன்னிரும்புதான் உறுதியானது; எளிதில் அது வெண்ணெயைப் போல உருகி விடாது என்பது மக்களுக்கு நன்றாய்த் தெரியும்" என்று கூறிக் காங்கிரஸ் வட்டாரம் வாய் திறக்க முடியாதபடி செய்து விட்டார்!

"இத்தனை வருஷங்களாக நீங்கள் காங்கிரஸில் இருந்து வந்தீர்களே, இப்போது அதை விட்டுப் பிரிந்து வேறு கட்சி ஆரம்பித்து நடத்துவது துரோகமாகாதா?" என்று தம்மைப் பற்றிக் கேட்கும் சிலருக்குச் சரியான பதிலளித்தார் ராஜாஜி ராமாயணத்தை நினைவூட்டி. "விபீஷணன் தமையனை விட்டுப் பிரிந்து ராமபிரானிடம் வந்தான். அது துரோகமாகுமா? லங்காபுரியில் அநீதியும் அக்கிரமும் தாண்டவமாடுவது கண்டு சகியாமல் விபீஷணன் வெளியேற வேண்டியதாயிற்று. அதே போலத்தான் காங்கிரஸிலிருந்து பிரிந்து வந்துள்ளேன். எவ்வளவோ புத்திமதிகள் சொல்லிப் பார்த்தும் ஒன்றும் பிரயோசனப்படாது போகவேதான் விபீஷணன் ராவண ராஜ்யத்திலிருந்து கிளம்பி வந்தான். நானும் அப்படித்தான்!" என்றார்.

சிவகங்கையில் சென்ற முறை காங்கிரஸை முறியடித்த முன்னாள் சிவகங்கை மன்னர் திரு சுப்பிரமணிய ராஜா அதே காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்து இம்முறை சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்டார். ஆனால் கடைசி நேரத்தில் உடல்நிலை சரியில்லாததாகக் காரணம் காட்டி இவர் வாபஸ் பெற்றது சுதந்திரக் கட்சிக்கு ஒரு நஷ்டமெனச் சிலர் கருதினார்கள். நஷ்டத்தை லாபமாக்குவதற்காக சுயேச்சை அபேட்சகர் திரு காளிலிங்கம் பல எதிர்ப்புக்களிருந்தும் சுதந்திரக் கட்சி அபேட்சகரானார். இவர் காங்கிரஸ் அபேட்சகருக்கு உறவினராயிருந்தும் சத்தியத்துக்காகப் போராட முன் வந்தது பாராட்டுக்குரியது.

"தாமிரபரணி ஆற்றிலே நான் கண்டெடுத்த தங்கக் கட்டி" என்று நெல்லை மாவட்ட சுதந்திரக் கட்சித் தலைவர் திரு ராமசாமிக் கோனாரைப் பற்றி முன்பொரு முறை ராஜாஜி அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். திருநெல்வேலி அசெம்பிளி தொகுதிக்கு அவர் அபேட்சகராய் நிற்கிறார். இன்று வரை எந்தவிதமான பதவிக்கும் ஆசைப்


படாமல் தொண்டராகவே காலமெல்லாம் வாழ்ந்து வந்திருக்கும் திரு வெங்கடகிருஷ்ணன் தேசத்துக்கு மேலும் அதிகமாகத் தொண்டு செய்யும் நோக்கத்தோடு சுதந்திரக் கட்சியின் சார்பில் ராஜாஜி அவர்களுடைய பூரண ஆசியுடன் தூத்துக்குடியிலே நிற்கிறார்.

ராஜாஜி அவர்கள் திருநெல்வேலியிலே இருக்கும் போதுதான் திருச்செந்தூர் விவகாரம் அவர் காதுக்கு எட்டியது. இது சம்பந்தமாக அவர் விடுத்துள்ள அறிக்கையை நேயர்கள் பத்திரிகைகளில் படித்திருப்பார்கள். பின்னுல் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் ஸ்ரீ டி. டி. கே. அவர்களுடைய 'வெற்றி'யைப் பற்றி கனைபடச் சொன்னார் ராஜாஜி. ''குஸ்தி போட வேண்டிய இருவருள் ஒருவரைக் கொண்டு போய் ஓர் அறையில் அடைத்துப் பூட்டிவிட்டு மற்றொருவர் மட்டும் கோதாவுக்குள் நுழைந்து, 'நான்தான் ஜெயித்தேன்' என்று சொன்னால் அது வெற்றியாகுமா?'' என்று கேட்டார் அவர்!

சாத்தூரில் திரு காமராஜை எதிர்த்து நிற்கிறார் இளைஞர் ராமமூர்த்தி. இரண்டே நிமிஷம் பேசினாலும் மக்களின் கவனத்தை வெகுவாகக் கவர்ந்து விட்டார் அவர். '' 'நீ சிறுவன் தானே, உன்னால் என்ன செய்துவிட முடியும்? எதற்கு முதல் மந்திரியை எதிர்த்துப் போட்டி விடுகிறாய்?' என்று கேட்கிறார்கள். சிறு பிராயத்தினனாயிருந்த ராமனை அழைத்துப் போய் அபார சாதனைகளைப் புரிய வைத்தார் தவ சிரேஷ்டர் விசுவாமித்திரர். நானும் இன்று ராஜாஜி அவர்களுடைய ஆசிர்வாதத்துடன்தான் கிளம்பி யிருக்கிறேன்!'' என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறிய ஸ்ரீ ராமமூர்த்திக்கு நல்ல எதிர்காலம் இருக்கிறதென்பதில் சந்தேகமென்ன?

அந்நிய நாடுகளிலிருந்து கண் மூடித்தனமாகக் கடன் வாங்குவதைக் கண்டித்த ராஜாஜி காங்கிரஸ்காரர்கள் கூறும் ஆகாய விமான உதாரணத்தைக் குறிப்பிட்டுப் பேசினார்.

''இப்போது நாட்டில் இவர்கள் அமைக்கும் தொழிற்கூடங்களெல்லாம் நன்ருக இயங்கி ரொம்ப நாளைக்கப்புறம் லாபகரமாகச் செயல்பட்டு அந்த லாபத்தைக் கொண்டு இந்தக் கடன்களைத் திருப்பித் தரவேண்டும் என்பது காங்கிரஸ்காரர்களின் யோசனை. 'உடனடியாக எல்லாம் நடக்குமா? ஆகாய விமானம் சிறிது தூரம் தரையில் ஓடிப் பிறகு தானே மேலே எழும்ப வேண்டும்?' என்கிறார்கள். நான் கேட்கிறேன், 'உங்கள் விமானம் தரையில் ஓடி முடிவதற்குள்ளாகவே பெட்ரோலெல்லாம் தீர்ந்து விடும் போலிருக்கே, விமானத்தின் இஞ்சின் பழுதாகிக் கிடக்கிறதே. அப்படி இருக்க உங்கள் ஏரோப்ளேன் எப்படி மேலே ஏறப் போகிறது!' என்று!''



காந்தி பேரைச் சொல்லி
ஓட்டுக் கேட்கும் கட்சி
காந்தி சொன்ன வழியைக்
காற்றில் விட்ட கட்சி

அருப்புக்கோட்டை பார்லிமென்ட் தொகுதிக்கு சுதந்திரக் கட்சியின் அபேட்சகர் திரு முத்துராமலிங்கத் தேவர் அவர்கள். தேவர் என்ற சொல்லைக் கேட்டதுமே கடவுளைக் கண்டது போலக் களிப்பு மிகைப்பட்டுக் கரகோஷம் செய்யும் மக்கள் அவரது தேர்தல் சின்னமாகிய சிங்கத்தைப் போலவே எதிர்ப்பவரை மிக எளிதில் அவர் வென்று விட உதவத்தான் போகிறார்கள்!

சாத்தூர் விருதுநகர் கூட்டங்களை யெல்லாம் முடித்துக் கொண்டு திண்டுக்கல் வந்து சேர்ந்தார் ராஜாஜி அவர்கள். திண்டுக்கல் பார்லிமென்ட் தொகுதிக்கு காங்கிரஸ் அபேட்சகரான ஸ்ரீமதி சௌந்தரம் ராமசந்திரன் தலைவியாக இருந்து நடத்தி வரும் காந்திக் கிராமத்துக்கு எதிர்த்தாற் போல சுதந்திரக் கட்சியின் மாபெரும் கூட்டம் நடைபெற்றது. இதில் வேடிக்கை என்னவென்றால் ராஜாஜி அவர்களுடைய நெடுநாள் நண்பரும், காங்கிரஸ் அபேட்சகரின் கணவருமான ஸ்ரீ ராமச்சந்திரன் அவர்களே மேடையில் பிரசன்னமாகி ராஜாஜி அவர்களுக்குப் பக்கத்தில் அமர்ந்து கொண்டிருந்தார்! ராஜாஜி பேசிய போது சுதந்திரக் கட்சியை ஆரம்பித்த புதிதில் தாம் ஸ்ரீ ராமச்சந்திரன் அவர்களுக்குக் கடிதம் எழுத எண்ணியிருந்ததையும் பிறகு மனத்துக்குள் ஏதோ தடை தோன்றவே எழுதாமல் இருந்து விட்டதையும் மனம் விட்டுச் சொல்லி அந்தத் தம்பதியிடம் தமக்குள்ள நன்மதிப்பை வெளியிட்டார். அடுத்தாற்போல், ''ஸ்ரீமதி சௌந்தரம் ராமச்சந்திரன் அவர்கள் இப்போது காந்திக் கிராமத்தின் தலைவியாக இருந்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்கள் பாராளுமன்றத்துக்குப் போனால் இந்த நல்ல காரியமெல்லாம் கெட்டுப் போகும்! ஆகவே அவருக்கு யாருமே ஓட்டுப் போட வேண்டாம்! சுதந்திரக் கட்சி அபேட்சகர் ஸ்ரீமதி சகுந்தலா அம்மாளுக்கு ஓட்டுப்போடுங்கள்'' என்றாரே பார்க்கலாம்!

தேவகோட்டையிலும் காரைக்குடியிலும் ஸ்ரீ சா. கணேசன் அவர்களுடைய கர்ஜனையைக் கேட்டுவிட்டுக் கிளம்பினோம். பொன்அமராவதியில் ஒரு பொன்னான உவமை மூலம் சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கையை விளக்கினார் ராஜாஜி.

''ஒரு பலாப்பழத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதிலுள்ள சுளைகளெல்லாம் தனி மனிதர்கள். அதைப் பாதுகாப்பது போல் அமைந்துள்ள சடைப் பகுதி அரசாங்க உத்தியோகஸ்தர்கள். மேலே முள்ளுடன் கூடிய தோல் ஆளும் கட்சி.

''நான் உங்களைக் கேட்பது, பலாச் சுளை வேணுமா அல்லது அதைச் சுற்றியுள்ள சடை மட்டுமிருந்தால் போதுமா என்று.

பயிர்களை நன்றாகப் பருத்து செழித்துவளர்ந்திருக்க வேண்டும் என்பது சுதந்திரக் கட்சியின் கொள்கை. ஆனால் காங்கிரஸ் கட்சியோ இந்தக் களையே வேண்டாம், சடையே பயிராய்ப் பழுத்தில் நிறைந்திருக்கட்டும் என்கிறது. அதிகார வர்க்கத்தைப் பெருக்கி எல்லாக் காரியங்களையும் சர்க்கார் உத்யோகஸ்தர்கள் மூலமாகவே நடத்த வேண்டும் என்பது சோஷலிஸக் கொள்கை. இதனால் எப்படி நாம் முன்னேற்றம் காண முடியும்? களை நன்றாக இருந்தால்தானே விதையும்இருக்கும்? முன்னேற்றத்துக்கான வித்து தனி மனிதன் சுதந்திரத்திலல்லவோ அடங்கிக்கிடக்கிறது?''

ஸ்ரீரங்கத்தில் எல்லாரும் ஓட்டுப் போட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார் ராஜாஜி. ''பெண்ணைப் பெற்றவர்கள் மாப்பிள்ளையைத் தேடிச் செல்வது போலத் தேர்தல் தினத்தன்று அக்கறையுடன் எல்லாரும் ஓட்டுச் சாவடியைத் தேடிப் போக வேண்டும். எல்லாரும்தான் போகிறார்களே! நான் ஒருவன் போகாவிட்டால் என்ன என்று வீட்டிலேயே இருந்தால் அது ஊரார் பால் ஊற்றிய கதையாகத்தான் முடியும்!'' என்றார்.

கும்பகோணத்தில் ஒருபொதுக்கூட்டத்தை முடித்துக் கொண்டு தஞ்சைக்கு வந்தார் ராஜாஜி. அங்கே டில்லி மக்கள் சபைக்கு சுதந்திரக் கட்சி அபேட்சகர் ஸ்ரீ வையம்பிரகாசம் அவர்களையும் அசெம்பிளிக்குத் தி.மு.க. அபேட்சகர் ஸ்ரீ கருணாநிதியையும் ஆதரிக்குமாறு கேட்டுக் கொண்டார். ''பாம்பை அடிப்பது என்று தீர்மானித்த பிறகு அதை யார் அடிக்க வேண்டும், எப்படி அடிக்கவேண்டும் என்பதில் நமக்குள் சண்டை சச்சரவுகள் போட்டுக் கொண்டே இருந்தோமானால் பாம்பு எல்லாரையும் தீண்டி விட்டுப் போய் விடும்'' என்று எச்சரித்தார். ''ஆகவே காங்கிரஸுக்கு நிச்சயம் ஓட்டுப் போடாதீர்கள்! கம்யூனிஸ்டுகளைக் கண்ணெடுத்தும் பாராதீர்கள்! சுதந்திரக் கட்சி அபேட்சகர்களை நிறுத்தி வைக்காத இடங்களில் தி. மு. க. அபேட்சகருக்கு ஓட்டுப் போடுங்கள்!'' என்றார்.

செம்பொன்னார் கோவில், கடலூர் ஆகிய இடங்களிலும் பேசி விட்டுக் கடைசியாக திண்டிவனத்துக்கு வந்து சேர்ந்தார் ராஜாஜி. எதிர்ப்பது மட்டுமல்லாமல் நல்லவையும் அத்யாவசியமானவையுமான காரியங்களில் ஆளும் கட்சியினரை ஈடுபடுத்துவதிலும் எதிர்க்கட்சிக்குப் பெரும் பங்கு உண்டு என்ற உண்மையை அன்றைய பிரசங்கத்தில் ராஜாஜி தெளிவுபடுத்தினார். ''அதோடு காங்கிரஸை ஒரு முறை பதவியிலிருந்து இறக்கி விட்டோமானால் அவர்கள் அகங்காரம் ஒழியும். 'இது ஜனநாயகம். நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்' என்று அவர்கள் உணர்வார்கள்'' என்று கூறினார்.

காங்கிரஸுக்கு ஓட்டுப் போடுவதில்லை என்று கங்கணம் கட்டிக் கொள்வதன் மூலம், நாட்டுக்குச் சிறப்பு நல்கும் நட்சத்திரச் சின்னத்துக்கு வாக்கு அளிப்பதன் மூலம், 'இது ஜனநாயகம். ஜாக்கிரதையாக இருங்கள்!' என்று காங்கிரஸுக்கு எச்சரிக்கை விடுப்பதுடன், 'பண நாயகத்துக்கு நாங்கள் பணிந்து விட மாட்டோம்' என்பதையும் உறுதிப்படுத்தப் போகிறார்கள் பாரத மக்கள்.

சுதந்திர நிதி

[28-1-62 லிருந்து 3-2-62 வரை]

பி. ஜி. கோவிந்தசாமி நாயுடு	51	00
பழனி அன்பர்	51	00
சாத்தூர் தொகுதி பேராபி கிராம நன்கொடை	10	06
விருதுநகர் பொதுக்கூட்டம்	2	00
தேவகோட்டை நகர சுதந்திரக் கமிட்டி அளித்த பண முடிப்பு	1018	00
பி. கே. சீனிவாச ராவ்	51	00
பி. ராம ராவ்	51	00
எஸ். கிருஷ்ணமாச்சாரி	2	00
திண்டிவனம் பொது மக்கள்	2001	00
கூத்தாநல்லூர் வாசிகள்	1000	00
புதுக்கோட்டை பொதுக்கூட்டம்	46	60
கும்பகோணம் சோலையப்பன் தெரு சுதந்திர இளைஞர்கள்	7	00
பட்டீசுவரம் சுதந்திரக் கட்சி	3	00
குன்னம் கிருஷ்ணமூர்த்தி ஐயர்	50	00
ஆனதாண்டவபுரம் பொதுமக்கள்	555	00
சோதியகுடி மகாதேவய்யர்	100	00
நெகனூர் கிராம ஜனங்கள்	5	00
திண்டிவனம் பொதுக்கூட்டம்	10	00
ஆர். அய்யாதுரை	250	00
மிருகசீர்ஷம்	5000	00
ஓர் அன்பர்	500	00

தியாகராயநகர் பொதுக்கூட்டம்	10	00
எஸ். நடராஜன்	5	00
டி. குப்புசாமி	10	00
டாக்டர் ஆர். வி. கிருஷ்ணமூர்த்தி	25	00
வி. எஸ். ரங்காச்சாரி	10	00
ஓர் அன்பர்	25	00
பெங்களூர் அன்பர்	100	00
கே. கிருஷ்ண ராவ்	25	00
ஆர். பாஸ்கரன்	50	00
உடுப்பி சுதிவாஸ்	51	00
நாராயண அய்யங்கார்	600	00
எஸ். விஜயராகவன்	5	00
ஜே. நடராஜன்	10	00
எஸ். வேங்கடராமய்யர்	10	00
எம். சுப்பராயன்	25	00
எஸ். நடராஜன்	25	00
எஸ். தியாகராஜன்	25	00
எஸ். பசுபதி	25	00
டாக்டர் எம். சுப்பிரமணியம்	100	00
10-1-61 லிருந்து 27-1-62 வரை	21638	36
மொத்த வரவு	33538	02

சுதந்திரக் கட்சிக்காகப் பண உதவி செய்கிறவர்கள் ஸ்ரீ ராஜாஜி c/o கல்கி காரியாலயம், சென்னை - 10 என்ற விலாசத்துக்கு அனுப்பலாம்.

சென்னை வாக்காளர்களுக்கு



திரு எம். சிவராமன்

சென்னை நகர மக்கள் ல்ல அரசியல் ஞானம் டைத்தவர்கள். ஒரே ட்சிக்காரர்கள் பதவியி ருப்பதன் ஆபத்தை ணர்ந்து மாநகராட்சி ன்றத்தில் ஒருமாறுதலைத் ணிவுடன் புகுத்திக் ாட்டியவர்கள். எனவே, றப்பான கொள்கை டைத்த சுதந்திரக் கட்சி ன்று உருவாகித் தனது பேட்சகர்களைப் பொதுத் தர்தலுக்கு நிறுத்திவைத் ருக்கும்போது சட்ட பைக்கும், லோக சபைக் ம் அந்தக் கட்சியைத் ான் அனுப்பி வைக்க வேண்டுமென்று வர்களே முடிவு செய்திருப்பார்கள். ட்சிக் கொள்கைக்காக மட்டுமின்றி தன் அபேட்சகர்களின் யோக்கியதாம் த்தைக் கொண்டும் சென்னை ாக்காளர்கள் சுதந்திரக் கட்சி ின் சார்பில் போட்டியிடுபவர் ளையே தேர்ந்தெடுக்கவேண்டு மென நாமும் கேட்டுக் கொள் றோம். அபேட்சகர்களையும் கிழ்வுடன் அறிமுகப் டுத்துகிறோம்.



சுதந்திரக் கட்சியின் தேர்தல் சின்னம்

எஞ்ஜினியர் ஸ்ரீ எம். சிவ ாமன் அவர்கள் மயிலாப்பூர் ட்ட சபைத் தொகுதியில் சுதந்திரக் ட்சியின் அபேட்சகராகப் போட்டியிடு றார். சிவராமன் அவர்கள் சென்னை கரசபையில் நீண்ட காலம் பல பொறி யல் துறைகளில் பெரும் தவிகளைத் திறம்பட கித்து 1959ல் ஓய்வு பெற் வர். சுத்திகரிப்பு, சுகா ாரப் பராமரிப்பு இவற் ல் அளவற்ற ஈடுபாடு காண்டிருந்த ஸ்ரீ சிவ ாமன் அவர்களைப் பிரிட் ஷ் கௌன்சிலானது ங்கிலாந்துக்கு அனுப்பி வத்தது. அங்கும்ஐரோப் ாவின்இதர நாடுகளிலும் ள்ள பொதுச் சுகாதார சவை முறைகளை யெல் ாம் நன்கு பயின்று ரும்பினார் அவர்.

சென்னை மாநகருக்கு வண்டிய குடி தண்ணீரை இயந்திரத்தின்மூலம் விரை வாக வடிகட்டி வழங்கு வதற்கு வித்திட்டவர்க ளில் ஒருவர் ஸ்ரீ சிவராமன். கழிவுத் தொட்டிகளி லிருந்து நீரை அப்புறப் படுத்துவதற்காக ஸ்ரீ சிவ ராமன் கண்டுபிடித்த கரு விகள் குறைந்த செலவி லேயே இறக்குமதி இயந் திரங்களின் தேவையைப் பூர்த்தி செய்தன. நகர சபைத் தொழிலாளர் ஆறு யிரம் பேர்களிடம் அன் பும், பரிவும் காட்டிச் சமூக நிலையில் வைத்திருந்து தமது நிர்வாகத் திறனைப் புலப்படுத்தியவர் ஸ்ரீ சிவராமன். பட்டுக் கத்திரித்தாற்போல் நல்ல முடிவுகளை விரைவில் செய்பவர் அவர். கடைசி நிமி ஷத்தில் அவரை அபேட்சகராக நிறுத்த உத்தேசித்த உடனேயே அதை ஏற்றுக்கொண்டு இன்று மயி லைத் தொகுதியினரின் வாக் கைக் கோரி நிற்கிறார். சட்ட சபையில் சர்க்காரின் திட்டங் களைப் பற்றி ஆதார பூர்வ மாகப் பேசவும்தான் நமக்கு ஒரு பிரதிநிதி வேண்டாமோ?

வியாபாரத்திலேயே ஒரு தனிச் சுவையும் மணமும் பெற்றதல்லவா சிற்றுண்டிச்சாலைத் தொழில்? தியாகராயநகரிலுள்ள மக்கள் நல்ல ரசிகர்களாயிற்றே! எனவே ஸ்ரீ தேவி விலாஸ் உரிமையாளர் ஸ்ரீ வி. தாமோதரன் அவர்களை அந்தத் தொகுதியின் அபேட்சகராக சுதந்திரக் கட்சி நிறுத்தி வைத்திருக் கிறது. பகட்டை அறியாத ஸ்ரீ தாமோதரன் சமூக சேவையில் பல நாட்களாக ஈடுபட்டிருப்பவர். 1940 லிருந்து 1955 வரை காங் கிரஸில் ஸ்ரீ என். ராம கிருஷ்ண அய்யர் அவர்க ளுடன் தொண்டு புரிந் திருக்கிறார். காங்கிரஸின் போக்கில் அதிருப்தி கொண்டதால் அதனை விட்டு வெளியேறிய பின் னும் சமூக சேவை செய்து வருகிறார். சுதந்திரக்



திரு வி. தாமோதரன்

கட்சிக் கொள்கைகளை நன்கு புரிந்து கொண்டுள்ள இந்தக் கேரள நாட்டவரின் தமிழை நாமும் புரிந்துகொள்ள முடியும் என்பது சமீபத்தில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் தெரிய வந்தது. சட்டசபை விவாதத்துக்கு ருசி கூட்ட ஸ்ரீ தேவி விலாஸ் தாமோதரன் அவர்களைத் தியாகராயநகர்வாசிகள் தயங்காது அனுப்பி வைக்கலாம்.

வர்த்தகம், என்ஜினியரிங் துறைகளைச் சேர்ந்த அபேட்சகர்களைக் கண்டோம். விவசாயக் குடியிற் பிறந்து, அரசாங்க ஊழியம் செய்துள்ள ஸ்ரீ சி. எம். பாலுசாமி அவர்கள் ஆயிரம் விளக்குத் தொகுதியில் சுதந்திரக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடுகிறார். இவர் முப்பத்திரண்டே பிராயத்தவர் தாம். ஹரிஜன வகுப்பைச் சேர்ந்த ஸ்ரீ சி. எம். பாலுசாமி பள்ளி ஆசிரியராக எட்டாண்டு பணி ஆற்றிய பின் சர்க்காரில் குமாஸ்தாவாக வேலை செய்தவர். நாட்டு அரசியலில் நீண்டநாளாக அக்கறை கொண்டவர்; காந்தீயத்தில் பெருநம்பிக்கை படைத்தவர். பொருள் வசதி சிறிதும் படைத்திராதவர். சுதந்திரக் கட்சி பணக்காரர் கட்சி; பணக்காரர் நலனையே கருதும் கட்சி என்ற இரு குற்றச்சாட்டுகளையும் தகர்க்கும் ஒரு சின்னமாகக் கருதக்கூடியவர் ஸ்ரீ சி. எம். பாலுசாமி. ஏழைகளோடு ஏழையாக வாழ்ந்து அவர்களது இன்னலைத் தாமே அநுபவித்துள்ள இந்த ஹரிஜன இளைஞர் பொருளாதாரத்திலும் சமூக அந்தஸ்திலும் பின்தங்கியவர்களின் தேவைகளைச் சட்டசபையில் உள்ளது உள்ளவாறு எடுத்துக் கூறுவார் என்று உறுதியாக நம்பலாம்.



திரு சி. எம். பாலுசாமி

பல துறைகளையும் குறித்துச் சர்க்கார் சட்டம் இயற்றுவதால் அவற்றைப்பற்றி யோசனைகள் தெரிவிக்க எல்லாத் துறையினரும் சட்டசபையில் இடம் பெற வேண்டியது அவசியமாகும். சட்டம் இயற்றுவது குறித்தே தரமான கருத்தைத் தெரிவிக்கக் கூடிய இரு சட்டப் பட்டதாரிகளும் சென்னைநகரின் வேறு இரு தொகுதிகளில் சுதந்திரக் கட்சிக்காகப் போட்டியிடுகிறார்கள்.

எழும்பூர் தொகுதியில் போட்டியிடும் ஸ்ரீ கே. நாராயணசாமி முதலியார் அவர்கள் எம். ஏ., பி. எல். பட்டங்கள் பெற்றவர். 1938-ம் ஆண்டு சட்டத் தொழில் தொடங்கியவர். அன்றிலிருந்து அத்தொழிலில் நாளும் சிறப்புற்று இன்று ஒரு பிரபல வழக்கறிஞராக இருக்கிறார். அரசியல் முக்கியத்துவம் பெற்ற பல சுவாரஸ்யமான வழக்குகளில் ஆணித்தரமாக வாதாடிய பெருமை ஸ்ரீ நாராயணசுவாமி முதலியாருக்கு உண்டு. வழக்கறிஞர் மன்ற (பார்கௌன்சில்) அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஸ்ரீ நாராயணசாமி முதலியார் ஐம்பது வயதிலும் இளமைத் துடிப்பும் ஊக்கமும் நிறைந்தவராக இருக்கிறார். சுதந்திரக் கட்சியின் தனி நபர் சுதந்திரக் கொள்கையை உளமாற வரவேற்றதாலேயே அரசியல் வாழ்வில் புதிதாக இறங்கியிருக்கிறார் அவர். அரசியலை ஜீவனோபாயமாகக் கொள்ளாமல் நாட்டுக்கு நன்மை செய்யவே சுதந்திரக் கட்சியில் சேர்ந்திருக்கிறார். திட்டங்களைப் பற்றி நல்லறிவு கூற ஸ்ரீ சிவராமனை மயிலை தேர்ந்தெடுத்தால் சட்டங்களைப் பற்றிச் சிறப்பான யோசனைகள் தெரிவிக்க ஸ்ரீ முதலியாரைத் தேர்ந்தெடுத்து எழும்பூரும் பெருமை கொள்ளலாம்.



திரு நாராயணசாமி முதலியார்

திருவல்லிக்கேணித் தொகுதியில் சுதந்திரக் கட்சி அபேட்சகராக நிற்கும் ஸ்ரீ என். எஸ். வரதாச்சாரி அவர்களும் ஒரு எம். ஏ., பி. எல். ஆனால் சட்டமன்றங்களைப் பகிஷ்கரிக்க வேண்டும் என்ற நாகபுரிக் காங்கிரஸ் தீர்மானத்துக்கு முன்னரே—1920-ம் ஆண்டிலேயே வக்கீல் தொழிலை விட்டு வெளியேறியவர் இவர். அதிலிருந்து தியாகமும், சேவையும், சிறைவாசமும் இவரது சரிதையாயிற்று.

ராஜாஜியும், காலஞ்சென்ற ஸ்ரீ பிரகாசம் அவர்களும் தொடங்கிய பழைய 'ஸ்வராஜ்யா' தினசரியின் உதவி ஆசிரியராக இருந்திருக்கிறார். 1923-ல் நாகபுரி கொடி சத்தியாக்கிரகத்தின் முதல் கோஷ்டிக்குத் தலைமை தாங்கிச் சிறை புகுந்தவர் ஸ்ரீ வரதாச்சாரியார். பிறகு மகாத்மா காந்திஜியின் நேரடிப் பார்வையில் அகில இந்திய நூற்பாளர் சங்க உதவிக் காரியதரிசியாக இருந்தார். பின் வேதாரண்யம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார் ஸ்ரீ வரதாச்சாரியார். 1933-ல் சென்னையில் தனிநபர் சத்தியாக்கிரகம் செய்தார். 1936-ல் குண்டர்களின் தாக்குதலுக்கு இலக்காகி மரணத்தின் வாயில் வரை சென்றும் பிடிவாதமாகப் போட்டியிட்டு இதே திருவல்லிக்கேணி சட்டசபை அங்கத்தினராக வெற்றி பெற்றார். ராஜாஜியின் முதலாவது மந்திரி சபையில் பார்லிமெண்டரிக் காரியதரிசியாக இருந்தார் இவர். 1940-ல் மீண்டும் தனி நபர் சத்தியாக்கிரகம் செய்தார். காந்தியடிகளின் 'வெள்ளையனே, வெளியேறு!' இயக்கத்தில் குதித்தார். அதன் விளைவாக



திரு என். எஸ். வரதாச்சாரி

இரண்டரை ஆண்டு சிறைவாசம் அநுபவித்தார். 1946லிருந்து 1951 வரை இரண்டாம் முறையாகத் திருவல்லிக்கேணி சட்டசபைத் தொகுதி அங்கத்தினராக இருந்தார். இந்திய சர்க்கார் நியமித்த அகில இந்திய மதுவிலக்குக் கமிட்டியின் காரியதரிசி-அங்கத்தினராக இருந்திருக்கிறார் ஸ்ரீ வரதாச்சாரியார். மூன்றும் முறையாகத் திருவல்லிக்கேணி சட்டசபை ஸ்தானத்துக்கு நிற்கும் ஸ்ரீ வரதாச்சாரியார் அவர்கள் முன்னிலும் சிறப்பாக வெற்றி பெற்று நாட்டுக்கு நல்ல பணி புரியுமாறு ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் அருள் புரிவாராக.



திரு பி. எம். லிங்கேசன்

வண்ணாரப்பேட்டை சுதந்திரக் கட்சி அபேட்சகர் ஸ்ரீ பி. எம். லிங்கேசன் பி. ஏ. அவர்கள் நகரசபை அநுபவம் பெற்றவர். அவர் வட சென்னைக்கு உருப்படியான பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறார். ஐம்பது லட்சம் ரூபாய் செலவில் வட சென்னையில் நிரந்தரக் குடிதண்ணீர் விநியோகத்துக்காகக் குழாய் மெயின் அமைக்கப்பட்டிருப்பதில் இவருக்கு 'மெயின் பார்ட்' உண்டு. வண்டித் தொழிலாளர்கள் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவராக இருந்து நகரில் பல போக்குவரவு நெரிசல்களை நீக்க உதவியிருக்கிறார். சமீபத்தில் துறைமுகத்தில் டிரக் வண்டி நடமாட்டத்தைக் குறைக்கலாகாது என்று ஆட்சேபித்து ஓராண்டுக்கு அத் திட்டத்தை நிறுத்தி வைப்பதில் வெற்றியும் பெற்றவர்.

இந்திய சர்க்கார் அமைத்துள்ள கப்பல் பிரயாணிகள் நலக் கமிட்டி அங்கத்தினர் என்ற முறையில் இந்திய சர்க்காருக்கு நீண்டதொரு யாதாஸ்து சமர்ப்பித்தார். அவற்றில் கண்டிருந்த பல சிபாரிசுகள் இன்று அமுலாகியுள்ளன.

சேவா சங்கங்கள் பலவற்றின் தலைவரான ஸ்ரீ லிங்கேசன் அவர்கள் மயிலை திருவள்ளுவர் ஆலயம், திருக்குறள் அறக் கட்டளை நிலையம் இவைகளின் நிர்வாக தர்மகர்த்தராக ஐந்தாண்டுகள் பணி புரிந்தபோது திருக்குறள் நூல்களை வெளியிட்டுத் தமிழுக்கும் தொண்டு புரிந்திருக்கிறார்.

1934ம் ஆண்டிலிருந்தே, அதாவது மாணவப் பருவத்திலிருந்தே நீலன் சத்தியாக்கிரகம், உப்பு சத்தியாக்கிரகம், சட்ட மறுப்பு, விதேசத் துணி பகிஷ்காரம் முதலிய தேச சுதந்திரப் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கிறார். மண்டல, மாவட்ட, பிரதேச காங்கிரஸ் குழுக்களில் அங்கம் வகித்த ஸ்ரீ லிங்கேசன் சென்னை மகாஜன சபைத் தலைவர், காரியதரிசி பதவிகளையும் வகித்திருக்கிறார்; மாகாண கௌரவ மாஜிஸ்திரேட்டாகவும் இருந்திருக்கிறார். இவர் பத்திரிகை அநுபவமும் பெற்றவர். பட்டதாரியாக இருந்தாலும் தானிய வியாபாரத்தில் துணிச்சலுடன் ஈடுபட்டிருப்பவர். அவரை நன்கறிந்த வண்ணாரப்

பேட்டை வாக்காளருக்கு நாம் விசேஷமாகச் சிபாரிசு செய்யத் தேவையில்லை.



திரு வி. எஸ். கண்ணன்

பேஸின் பிரிட்ஜின் சுதந்திரக் கட்சி அபேட்சகர் முப்பத்திரண்டு வயது இளைஞரும் இந்த இளமையிலேயே வியாபாரத் துறையில் தமது செயல் திறனை நிரூபித்து வருபவருமான ஸ்ரீ வி. எஸ். கண்ணன் அவர்கள். இவர் கீதா ஏஜன்ஸீஸ் ஸ்தாபனத்தின் உரிமையாளர். இந்தியாவிலுள்ள பல ஸ்டேஷனரி தயாரிப்பாளர்களின் பிரத்தியேக ஏஜன்ஸி பெற்றது இந்தக் கம்பெனி. தென் இந்திய வர்த்தக சங்கம், ஆந்திர வர்த்தக சங்கம், சென்னை வியாபாரிகள் சங்கம் ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் ஸ்தாபனம் இது. வாலிபர் கண்ணன் இன்று சென்னை வியாபாரிகள் சங்கத்தின் பொதுக் காரியதரிசி என்பது அவர் வியாபாரத் திறனோடு, நிர்வாக சாமர்த்தியமும் படைத்தவர் என்பதையே எடுத்துக் கூறுகிறது. ஸ்ரீ கண்ணன் இறக்குமதி ஒழுங்குப்பாட்டுக் குழுவிலும், ஆந்திர வர்த்தக சபையிலும் அங்கத்தினராவார். நல்ல பெயர் வாங்கியுள்ள விற்பனைக் கேந்திரங்கள் பலவற்றை இணைத்து நிர்வகித்து வரும் ஸ்ரீ கண்ணன் சுதந்திரத் தொழிலுரிமையை நிலைநாட்டச் சட்டசபையில் சிறப்பாகச் சேவை செய்யக் கூடியவர்.




திரு பி. கிருஷ்ணமூர்த்தி

முப்பத்திரண்டு வயதுள்ள இன்னொரு அபேட்சகரை ஹார்பர் தொகுதிக்குச் சுதந்திரக் கட்சி அளித்திருக்கிறது. ஸ்ரீ பி. கிருஷ்ணமூர்த்தி அவர்களும் வியாபாரிதான். நகை, ஜவுளி வியாபாரம் செய்யும் இவர் பதினெட்டாம் பிராயத்திலிருந்தே பொதுஜன சேவையில் ஈடுபட்டவராவார். தென் இந்திய வைசிய சங்கக் காரியதரிசியாக இருக்கிறார் இவர். சென்னை மாநகராட்சி மன்றக் கவுன்சிலராகவும் நிரந்தர சுகாதாரக் கமிட்டிக்குத் தலைவராகவும் நற்பணி புரிந்து நகர நலனைக் காத்து வருகிறார். சௌகார்பேட்டை நகர சபைத் தொகுதியில் காங்கிரஸ் அபேட்சகரைத் தோல்வியுறச் செய்து கௌன்ஸிலரான இவர் இப்போது சட்ட சபைக்குப் 'பிரமோஷன்' பெற வேண்டியது நியாயமே. தலைநகரின் தனிப்பட்ட குறைகளைச் சட்டசபையில் விளக்கிக் கூறவல்ல ஓர் அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை ஹார்பர் தொகுதி மக்கள் பயன் செய்து கொள்ள வேண்டும்.



திரு எம். கணபதி

தென் சென்னை லோகசபை ஸ்தானத்துக்குச் சுயேச்சையாகப் போட்டியிடும் பொறி இயல் மேதை ஸ்ரீ எம். கணபதி அவர்களைத்தான் சுதந்திரக் கட்சி ஆதரிக்கிறது என்பது நேயர்களுக்குத் தெரியும். அவருடைய அருமை பெருமைகளையும் ஜனவரி 28-ந் தேதி கல்கி இதழ் வாயிலாக அறிந்திருப்பார்கள். ஸ்ரீ கணபதி அவர்களின் தேர்தல் சின்னம் சிங்கமாகும். பல்லவர்கள் காளைச் சின்னத்திலிருந்து சிங்கச் சின்னத்துக்கு மாறியது பழைய சரித்திரம். தென்சென்னை வாசிகளும் லோக சபை ஸ்தானத்தைப் பொறுத்த மட்டும் காளைச் சின்னத்திலிருந்து சிங்கத்துக்கு மாறிப் புதுச் சரித்திரத்தை உண்டாக்க வேண்டும்.



திரு கணபதியின்
தேர்தல் சின்னம்



காலண்டர் ஒருமைப்பாடு

திருப்பழனம் ஸ்ரீனிவாசன்

தேசிய ஒருமைப்பாடு மகாநாட்டுக்குச் சென்று, தாமதமாகத் திரும்பியதின் பயனாக ஹோட்டலில் சாப்பாடு இழந்து அறைக்கு வந்துகொண்டிருந்தேன். எதிரே இரண்டு காலண்டர்களை இடுக்கிக் கொண்டு சென்ற குப்புஸ்வாமி என்னைக் கண்டதும் 'கைக்கு எட்டிய காலண்டர் தன் வீட்டுச் சுவர் ஆணிக்கு எட்டாதோ' என்ற பயத்துடன் நழுவினார். அவர் அச்சமுறுவதற்குக் காரணமே இல்லை. வருஷா வருஷம் லண்டனிலிருந்து எனது நண்பர் ராமன் அனுப்பும் வண்ணக் காலண்டர் ஒன்றுதான் எனது அறையை அலங்கரிக்கும்; மற்றவற்றை 'யான் பெற்ற காலண்டர் பெறுக இவ்வையாத நண்பர்கள்' என்று தானம் செய்து விடுவது வழக்கம்.

அறையை அடைந்ததும் பசி தலையைச் சுற்றக் கட்டிலில் சாய்ந்தேன்.

கலாசார மந்திரி கனம் ஏகாம்பரம் சட்ட சபையில் 'காலண்டர் ஒருமைப்பாடு மசோதா'வை வாசித்துக் கொண்டிருந்தார்.

''முதல் முதல் காலண்டர் வெளியிடுகையில் கால ஓட்டத்தைக் கணக்கிடும் கருவியாகத்தான் அறிமுகப் படுத்தப்பட்டது. அதற்குப் பிறகு நாளையும் கோளையும் விழாக்களையும் நினைவுபடுத்தும் குறிப்புத் தாளாக அமைந்தது. நாள் குறிப்பு ஏடு பற்பொடி கட்டிக்கொள்ள உதவியது. இப்படி ஆரம்பித்த வழக்கம் இப்போது சமூகத்தைப் பாதிக்கும் வகையில் மிகப் பயங்கரமாக வளர்ந்து விட்டது. சர்க்கார் கண்களைத் தீட்டிக் கொண்டு இந்த நடவடிக்கைகளைக் கவனித்து வருகிறது. ஆயினும் அதன் தீய விளைவுகள் குறைந்தபாடில்லையாதலால், சர்க்கார் தலையிட்டுச் சீர் திருத்தவேண்டிய சந்தர்ப்பம்வந்துவிட்டது.''

''காலண்டர் ஒரு விளம்பர சாதனம். இதனால் என்ன தீமை விளைந்து விட்டது? இனி நிழல்களைக் கண்டு பயப்பட்டு நாளை 'நிழல்கள் நீக்கு மசோதா' கூடப் பிரேரேபிக்கப்படலாம்!''

''அப்படி ஒரு கருத்து இருக்கும் பக்ஷத்தில் அங்கத்தினரது உதவியை நிச்சயம் ஆட்சியாளர்கள் கோருவார்கள். .....டிசம்பர் மாதம் பிறக்கும் முன்பே 'காலண்டர் சேகரிப்பு' என்ற தொத்து வியாதி பலரிடம் பரவுகிறது. காரியாலயச் சிப்பந்திகள் பலர் வருகிற காலண்டரை 'அபேஸ்' செய்து விடுகின்றனர். பொதுவாக நாணயக் குறைவு ஏற்படக் காலண்டர் காரணமாக இருக்கிறது.

''தபால் இலாகாவின் பொறுப்பில் காணாமற்போன காலண்டர்கள் எத்தனை என்பதைக் கனம் மந்திரி விளக்குவாரா?''

''அவகாசம் தேவைப்படும் இக் கேள்விக்குச் சம்பந்தப்பட்ட மந்திரி பதில் கூறுவார். பொதுவாக, விளம்பரத்துக்கும் பெண்மணிக்கும் என்ன தொடர்பு என்றே புரியவில்லை. பார்க்கும் காலண்டர்களிலெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் பெண்ணே....''

''இந்த அபிப்பிராய வெளியீட்டை ஸ்திரீ அங்கத்தினராகிய என்னால் ஆட்சேபிக்காமல் இருக்க முடியாது.''

''சகோதரி என் கருத்தைப் புரிந்துகொள்ளவில்லை. நான் குறிப்பிடுவது ஆபாசமான காலண்டர் சித்திரங்களை. ஏராளமாகக் காலண்டர்கள் சேகரித்து மாட்டுவதின் மூலம் சுவரெங்கும் ஆணி அறையப்படுகிறது. வீட்டுக்காரர் மனம் நோவதுடன், சுவர்கள் பாழ் அடைகின்றன. ஆணிகளின் விலை ஏற்றம். இந்தத் தேசியப் பொருள் நஷ்டத்தைத் தவிர்க்கச் சர்க்கார் உடனடியாக.....''

''பெருந்தனக்கார வீட்டுச் சொந்தக்காரர்களைத் திருப்தி செய்ய இந்த மசோதா இணைக்கப்படுகிறது என்று இதை நம்பலாமா?''

''இந்தக் குயுக்தியான யோசனைக்கு வருந்துகிறேன். இந்த மசோதாவின் முக்கிய நோக்கம் 'காலண்டர் ஒருமைப்பாடு' தவிர 'ஒன்றே காலண்டர்; ஒரே சித்திரம் 'என்ற முறையில் வருஷந்தோறும் சர்க்கார் ஒரு வகைக் காலண்டரைத்தான் வெளியிட அனுமதிக்கும். வீட்டுக்கொரு காலண்டர்; அதுவும் ஒரே விதம்: இதனால் ஒருவரே ஒன்றுக்கு மேற்பட்டகாலண்டர் சேகரிக்க முயல மாட்டார். காலண்டர் பஞ்சமில்லை; ஏழை பணக்காரன் – எல்லோர் இல்லத்திலும் ஒருவகை காலண்டர் என்பதனால் சோஷலிஸத் தத்துவம் நிறைவேறுகிறது. ஆணிகள் மிச்சம்: ஓட்டைகள் குறைவு; மூட்டைப் பூச்சிகள் ஒழிவு; சுவர்கள் பாழ்படா; காலண்டர் திருட்டு இல்லை. இந்த ஒரேவகைப் பிரசுரம் மூலம் பாரதமெங்கும் நூல் பிடித்தாற் போல ஓர் ஒருமைப்பாடு ஏற்படத் தூண்டுகிறது. இதன் மூலம் காகிதச் சிக்கனம்; அச்சு உபகரணங்கள் தேய்விலின்று காப்பாற்றப்படுகின்றன....''

''இப்படி நாட்டுக்கொரு நல்ல காலண்டரைப் பிரசுரிக்கும் முயற்சி பாராட்டத்தக்கது

தான். இதனைப் பிரசுர காலண்டராகட் விடுவதில் 'காலண்டர் ஊழல்' ஏற்படாமலிருக்கச் சர்க்கார் என்ன முன்னேற்பாடுகள்...?''

''இதற்காகச் சர்க்கார் முன்பே முடிவு செய்து வைத்திருக்கிறது. கேந்திரப் பிரதேசத்தில் சென்ற தேர்தலுக்கு முன்பு ஜனங்களைத் திருப்திப்படுத்தத் திடுதிப்பென்று திட்டமில்லாமல் ஆரம்பிக்கப்பட்ட சர்க்கார் அச்சுக்கூடம் போதுமான வேலை இல்லாமல் இருக்கிறது. அதனிடம் இந்தத் தயாரிப்புப் பிரச்னை விடப்படும்!''

''வெளி வருவது பிரச்னையாகி விடப் போகிறது. சிவப்பு நாடா முறையில் நடைபெற்றால்! இந்த வருஷத்துக் காலண்டர் இவ்வாண்டு முடிவுக்குள்ளாவது வெளிவரும் என்று சர்க்கார் உத்தரவாதம் அளிக்க முடியுமா?''

''அங்கத்தினர் பதவிக்கால முடிவைக் காணக் காலண்டர் தேவைப்படாது என நம்புகிறேன். காலண்டரும் கடிகாரமும் இல்லாவிட்டாலும் காலம் ஓடும்.''

''சர்க்கார் காலண்டர் வெளியிட்டால் தொடர்ந்து 'பிழைத் திருத்தங்கள்' வெளியிட வேண்டி இருக்குமே?''

''தேசியக் காலண்டரில் நிச்சயம் ஆட்சித் தலைவர்களது படம் புகுத்தப்பட மாட்டாது எனத் திடமாக நம்பலாமா?''

''நம்பலாம்; அங்கத்தினரது கவர்ச்சியான பிம்பத்தைப் பிரசுரிக்கும் எண்ணமும் இல்லை. இது சம்பந்தமாக அகில பாரத ஓவியப் போட்டி ஒன்று நிகழ்த்தி, சிறந்த படத்தை ஆய்வுக் குழு தேர்ந்தெடுத்துப் பரிசு அளிக்கும். அப்படம் சகல மாகாணத்தாரும் ஏற்றுக் கொள்ளும் வகையில், இந்தியப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் விதத்தில் ....''

''தயவு செய்து அக்காலண்டரில் பால் கணக்கு எழுத இடமுண்டு என உறுதி அளிக்கும்படி கனம் மந்திரியாரை எனது சகதர்மிணி சார்பில் கேட்டுக் கொள்கிறேன்!''

''தங்கள் ஆலோசனைகளை — இது சம்பந்தமாக நிறுவப்பட இருக்கும் தேசிய காலண்டர் பிரசுர ஆலோசனைக் கமிட்டியிடம் சமர்ப்பிக்க வேண்டுகிறேன்....''

''அவ்வளவு சிரமப்பட வேண்டியதில்லை. இதைவிடத் தேதியிட்ட கடிகாரத்தை மலிவான விலையில் எல்லோருக்கும் கிடைக்கும்படி செய்தால் அதுவே சிறந்த காலண்டர் ஒருமைப்பாடு!''

''அங்கத்தினரது மணியான யோசனையை அவரது மாமனாருக்குச் சிபாரிசு செய்ய விரும்புகிறேன்.''

மணி அடித்தது; நானும் விழித்துக் கொண்டேன். சுவரில் இருந்த காலண்டர் காற்றில் படபடத்தது.

காங்கிரஸ் ஆட்சியில் ...

காங்கிரஸ் திட்டங்களை யெல்லாம் ஆராய்ந்துள்ள ஒரு கட்சிச் சார்பற்ற பொருளாதார நிபுணர் கடந்த பத்தாண்டுகளில் அது மொத்தத்தில் குறைந்தபட்சம் ஐந்நூறு கோடி ரூபாய் விரயமாக்கி இருக்கிறது என்று கூறுகிறார். இந்தத் தண்டச் செலவுகளுக்கு ஒரே ஒரு உதாரணம் காட்டினால் போதும்:

வெள்ளி கலந்துள்ள நாணயங்களை உருக்கி அவற்றிலிருந்து கிடைக்கும் வெள்ளியை அமெரிக்காவுக்கு அனுப்பி நாம் பட்டுள்ள கடனைத் தீர்ப்பதென 1948-ல் இந்தியா சர்க்கார் முடிவு செய்தது. கலப்புலோக நாணயங்களை உருக்கி வெள்ளியைப் பெறுவதற்காக ஒரு ஆலை நிறுவுவதெனவும் தீர்மானமாயிற்று. இதற்காக ஆலோசனைக் குழு அமைக்கவே இரண்டாண்டுகள் பிடித்தன. டெண்டர்கள் கோர மேலும் மூன்றாண்டுகள் பிடித்தன. அதற்கப்புறம் ஆறாண்டுகளுக்குப் பின் தான் ஆலை அமைக்கப்பட்டது. வேலை தொடங்கலாம் என்று உத்தேசித்தபோது, அதாவது 1959-ம் ஆண்டு, இந்த ஆலையின் ஊது உலை மிகவும் பழுது பட்டிருப்பது தெரிந்தது. அது வரை பன்னிரண்டு லட்சம் ரூபாய் செலவிட்டும் ஒரு பயனும் இல்லை என்று தெரிகிறது. பிறகுதான் ஒரு விசித்திரம் நடந்தது. இந்த விசித்திரத்துக்கு மக்கள் தந்த விலை பன்னிரண்டு லட்சம் ரூபாய்? அமெரிக்காவுக்குப் பட்டிருந்த கடனைச் செலுத்த வேண்டிய தவணை வந்து விட்டதால் வெள்ளி கலந்த நாணயங்களையே அமெரிக்காவுக்கு அனுப்பிவைத்து, அவர்களையே அதிலிருந்து வெள்ளியைப் பிரித்தெடுத்துக் கொள்ளச் சொல்லலாம்; இதுவே சிக்கனமாகக்கூடயிருக்கும் என்று சர்க்காருக்கு ஞானோதயமாயிற்று.

இது குறித்து விசாரணை செய்யப்பட வேண்டும் என்று மதிப்பீட்டுக் கமிட்டி தனது அறிக்கையில் கூறியுள்ளது. ஆனால் இன்று வரை என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை ஆண்டவனே அறிவார்.

சுதந்திரக் கட்சி கூறுவது போல் நிலவரியை ரத்து செய்தால் சர்க்காரின் வருமானமே ஒரேயடியாகக் குன்றி விடும் என்று காங்கிரஸ் கூறுவதைக் கேட்டு மயங்காதீர்கள் என்பதற்கே இந்தத் தண்டச் செலவுகளை நினைவூட்டுகிறோம். நிலவரி என்பது மத்திய–ராஜ்ய சர்க்கார்களின் மொத்த வருமானத்தில் மூன்று சதவிகிதம் தான். இன்று காணும் வீண் செலவுகளைத் தவிர்த்தாலே இந்த நிலவரி வருமானங்களை விட அதிகத் தொகை கிடைக்கும்.

மணிபல்லவம்

24. ஏழாற்றுப் பிரிவு



சான்றாண்மை வீரம் என்று இளங்குமரன் எதைச் சொல்லிப் பெருமைப்பட்டானோ அதை அவனிடமே மீண்டும் மீண்டும் மறுத்துப் பேசினார் வீர சோழிய வளநாடுடையார்.

"தம்பீ! உன்னுடைய சொற்கள் என்னால் மறுக்கமுடியாதவையாயிருக்கின்றன. ஆனால்நான் இந்த உலக வாழ்க்கையில் உன்னைவிட மூத்தவன். அதிக அநுபவங்களை உடையவன். நீ உடல் வலிமையைப் பயன்படுத்திப் போரிட வேண்டிய சந்தர்ப்பம் மீண்டும் உன் வாழ்வில் வரலாமென்றே எனக்குத் தோன்றுகிறது—"

இதைக் கேட்டு இளங்குமரன் மறுமொழி கூறாமல் சிரித்தான். அவனுடைய இந்தச் சிரிப்பினால் வளநாடுடையாரின் நெஞ்சில் ஆத்திரம் பொங்குவதை அவருடைய முகமும் கண்களும் காட்டின. மறுபடி அவர் அவனிடம் பேசிய சொற்களிலும் ஆத்திரம்தான் தொனித்தது.

"எனக்கென்ன வந்தது? இந்தத் தள்ளாத வயதில் இப்படியெல்லாம் கடலிலும், கப்பலிலும் உன்னை வற்புறுத்தி அழைத்துக்கொண்டு நான் அலைவதை நீயே விரும்பவில்லையானால் இந்தக் கணமே என் முயற்சிகளை நான் கை விட்டு விடலாம். ஆனால் இப்படிச் செய்வதாக வேறொருவருக்கு வாக்குக் கொடுத்து விட்டதன் காரணமாக இதை நான் செய்தாக வேண்டியிருக்கிறது. நீயோ என் வார்த்தைகளைச் செவியேற்றுக் கொள்ளாமலே என்னைப் பார்த்துச் சிரிக்கிறாய்."

கேட்கிறவர் பரிதாபம் கொள்ளத் தக்க சொற்களில் அவர் இப்படிக் கூறிய போது இதைக் கேட்ட இளங்குமரனுக்கும் வருத்தமாகத்தான் இருந்தது. காரணமின்றி அந்த முதியவருடைய மனத்தைப் புண்படுத்தும் சொற்களைத் தான் பேசி விடலாகாது என்று எண்ணிக் கொண்டே பரிவுடன் அவரருகிற் சென்று மறுமொழி கூறினான் அவன்:—

"உங்களோடு பயணம் புறப்பட்டு வந்ததற்காகவோ, அலைவதற்காகவோ நான் வருந்துவதாக நீங்கள் எண்ணிக்

நா. பார்த்தசாரதி

கொள்ளக் கூடாது ஐயா! வலிமை என்று நீங்கள் கூறினீர்களே. அதைப் பற்றி மட்டும் தான் நான் உங்களோடு கருத்து வேறுபாடு கொண்டு சிரித்தேன். கொன்று குவிப்பதையும், பிறரை அழித்தொழிப்பதையும் தான் வலிமை என்று நீங்கள் கருதிப் பேசியதாகத் தோன்றியது. நான் அவற்றை வலிமையாகக் கருதாததனால் தான் சிரித்தேன். தன் காலடியில் அடைக்கலம் என்று வந்து விழுந்த புறாவைத் துரத்திக் கொண்டு தொடர்ந்த வேடனைத் தன் உடல் வலிமையாலும் ஆட்சியின் படை வலிமையாலும் தானே ஓட ஓட விரட்ட முடியும் என்று தெரிந்திருந்தும், அந்த வேடன் அப்போது எதைத் தன்னுரிமையாக முன் நிறுத்தி வாதிட்டானோ அந்தக் கருத்தின் வலிமையை மறுக்க முடியாமல் உடம்பிலிருந்து சதையை அரிந்து கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியின் வலிமை மெய்யான வீரம் அல்லவா? போரிடுவதும், எதிர்ப்பதும், அழிப்பதும்தான் மனிதனுடைய வலிமை என்று நீங்கள் சொல்கிறீர்கள். தன்னுடைய உயிரையும், உடம்பையும் காத்துக்கொள்ள வேண்டுமென்று கருதிப் பிறருடைய உயிரையும் உடம்பையும் அழிப்பதையே வலிமை என்று சொல்லிப் புகழுவீர்களானால் பிறருடைய உயிரையும் உடம்பையும் காப்பதைக் கருதித் தங்களுடைய உயிரையும், உடம்பையும் அழித்துக் கொள்வதற்குக் கூடத் துணிகிற சிபி போன்றவர்களை இன்னும் அதிகமான ஆற்றலுள்ள வார்த்தையால் அல்லவா புகழ வேண்டும்? நான் அதை எண்ணித்தான் சிரித்தேன்.....''

''சிரிப்பாய் தம்பீ! சிரிப்பாய். நீ ஏன் சிரிக்க மாட்டாய்? இப்படிப் பேசுவதைத் தவிர வேறெதையும் திருநாங்கூரில் போய் நீ கற்றுக்கொண்டு வரவில்லை போலிருக்கிறது? நல்ல பிள்ளையாயிருந்து என் சொற்படி கேட்டு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் உன்னை நான் திருநாங்கூரில் வந்து முதல் முறை அழைத்தபோதே என்னோடு இந்தத் தீவுக்குப் புறப்பட்டு வந்திருந்தால் உன்னுடைய வாழ்க்கையில் இதற்குள் எவ்வளவோ நல்ல மாறுதல்கள் எல்லாம் ஏற்பட்டிருக்கும்.''—

''என்னென்ன நல்ல மாறுதல்கள் எல்லாம் ஏற்பட வேண்டும் என்று நான் ஆசைப் பட்டேனோ; அவை எல்லாம் என் வாழ்வில் இப்போதே நிறைந்த அளவில் ஏற்பட்டு விட்டன ஐயா! என் மனம் நிறைய எல்லையற்ற கருணை எப்போதும் பெருகி நிற்கும்படி நான் வாழ வேண்டும். அந்தக் கருணைதான் வீரம் என்று எனக்குத் தோன்றுகிறது. அறிவின் முடிந்த பயன் எல்லா உயிர்களையும் சமமாகப் பாவித்துக் கொண்டு எல்லா உயிர்களுக்கும் எப்போதும் எங்கும் மகிழ்ச்சி ஏற்பட வேண்டும் என்று நினைப்பதுதான். அவ்வாறு நினைக்கும் வலிமைதான் இப்போது என்னிடம் மீதமிருக்கிறது. மற்ற வலிமைகளை எல்லாம் 'இவற்றை இனி இழந்து விடத்தான் வேண்டும்' என்று திட்டமிட்டுக் கொண்டு இழந்தாற் போல நானே படிப்படியாய் இழந்து விட்டேன். இப்படி அவற்றை யெல்லாம் இழந்து விட்டு வெறும் கருணை மறவனாக நிற்கும் என்னிடம் வந்து, 'மறுபடி உடல் வலிமையைக் காட்டிப் போரிட வேண்டிய காலம் உன் வாழ்வில் வரலாம்'—என்று நீங்கள் கூறிய வார்த்தைகளே எனக்குச் சிரிப்பு மூட்டின.''—

இவ்வாறு இளங்குமரன் வளநாடுடையாருக்கு மறுமொழி கூறிக் கொண்டிருந்த போது கப்பல் தலைவனுடைய எச்சரிக்கைக் குரல் குறுக்கிட்டுப் பெரிதாக ஒலித்தது. அலைகளின் நெருக்கமும் குமுறலும் அதிகமா யிருப்பதனால் எல்லாரும் கீழ்த்தளத்துக்கு வந்து பாதுகாப்பா யிருக்க வேண்டுமென்று கப்பல் தலைவன் உரத்த குரலில் கட்டளையிட்டான். குடை சுற்றி ஆடுவது போல் மரக்கலம் இரண்டு பக்கமும் சாய்ந்து சாய்ந்து நிமிரத் தொடங்கியிருந்தது. கப்பல் தலைவன் அவர்களருகே வந்து மேலும் விளக்கமாகக் கூறினான்: ''ஐயா! இந்த இடத்திலிருந்து இன்னும் சிறிது தொலைவு வரை இது ஒரு பெரிய நீர்ச் சந்தி. நாக நாட்டுப் பெருந் தீவின் ஆட்சிக்கு அடங்கிய ஏழு சிறு தீவுகளை ஊடறுத்துக் கொண்டு கடல் ஒன்று சேருகிற இடம் இது. ஏழாற்றுப் பிரிவு என்றும் ஏழாற்றுக் கடவு என்றும் சொல்லிச் சொல்லிக் கப்பல்காரர்கள் பயந்து கொண்டே பயணம் செய்து கடக்க வேண்டிய பகுதியில் இப்போது நாமும் நுழைந்து விட்டோம். மிகவும் கவனமாக இந்த ஏழாற்றுத் துறையைக் கடந்து விட்டால் நாகநாட்டுப் பெருந்தீவகத்தின் நுனியை அடையலாம். பெருந்தீவகத்தின் நுனியில் மேற்குக் கரையைச் சார்ந்த சங்குவேலி என்னும் அழகிய துறைமுகத்தில் இறங்கி மிக அருகிலுள்ள மணிநாகபுரத்தில் சில நாழிகை தங்குவது புத்த பூர்ணிமைக்கு யாத்திரை செய்பவர்கள் எல்லாரும் அநுசரிக்க வேண்டிய வழக்கம் ஆகும்.

* மணிநாகபுரம் நாகநாட்டுத் தலைநகர். * அது இரத்தினங்களும், முத்துக்களும், மணிகளும் நிறைந்து செல்வ வளம்

---

* ஆதாரம்: யாழ்ப்பாணச் சரித்திரம், யாழ்ப்பாண வைபவ விமரிசனம், மகாவமிசம்.

கொழிக்கும் நகரம். நாகர்கள் வழிபாடு செய்யும் இரத்தின மயமான நாகதெய்வக் கோட்டம் ஒன்றும் அந்த நகரத்தின் நடுவே உண்டு. அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றாகிய மணிபீடகமாக அதைச் சொல்லுவார்கள். மணிநாகபுரத்தின் மேற்குக் கரை மிகவும் அழகானது. கரை நெடுகிலும் வேலியிட்டாற் போல் சங்குகளும், பவழக் கொடிகளும் ஒதுக்கப்பட்டுக் கிடப்பது கண்கொள்ளாக் காட்சியாயிருப்பதை நீங்களே காண்பீர்கள். சங்கு வேலி என்று அந்தத் துறைக்குப் பெயர் வாய்த்த காரணமே இதுதான். இங்குள்ள ஆரவாரமான கடல் நீரலையும் அலைகளின் மிகுதியும்தான் அந்தக் கரையில் வேலியிட்டாற் போலச் சங்குகள் ஒதுங்கக் காரணம் என்று சொல்லுகிறார்கள். சங்குவேலியிலிருந்து பிற்பகலில் புறப்பட்டால் அதே கரையை ஒட்டினாற் போல நாலைந்து நாழிகைப் பயணத்துக்குள் மணிபல்லவத் தீவை அடைந்து விடலாம். பெருந் தீவகத்திலிருந்து சற்றே பிரிந்து கடலில் மிதக்கும் அழகிய பசுந்தளிர் போல் மணிபல்லவத் தீவு தெரியும். நாளைக்குப் பொழுது புலர்ந்ததும் புத்த பூர்ணிமையாயிருப்பதால் இன்று மாலை நாம் போய்ச் சேரும் போது அந்தத் தீவு கோலாகலமாயிருக்கும்'' என்று அந்த இடத்தின் அழகுகளைத்தான் சொல்லி வருணித்துக் கொண்டிருந்த திறமையால் மரக்கலம் அப்போது கடந்து சென்று கொண்டிருந்த ஏழாற்றுப் பிரிவின் பயங்கரத்தில் அவர்கள் கவனம் செல்லாமல் காத்தான் கப்பல் தலைவன்.

''புத்த பூர்ணிமைக்காகப் பூம்புகாரிலிருந்து முன்பே புறப்பட்டிருக்கும் கப்பல்களைக் கூடச் சங்குவேலியில் நாம் சந்திக்கலாம் அல்லவா?'' என்று இளங்குமரன் கப்பல் தலைவனைக் கேட்டான்.

''மணிநாகபுரம் நாகநாட்டுத் தீவகத்தின் பெரிய பட்டினம். மரபுக்காக அந்தத் தீவில் கப்பலை நிறுத்தி இறங்காதவர்கள் கூட அந்த நகரத்தின் அழகைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்றுவது சில நாழிகை அங்கு இறங்கித் தங்குவார்கள். அதனால் நீங்கள் பல நாட்டு மரக்கலங்களையும் மக்களையும் சங்குவேலியிலும் மணிநாகபுரத்து வீதிகளிலும் சந்திக்க முடியும். மணிபீடகத்தை வணங்குவதற்காகச் சிலரும், ஏழாற்றுப்பிரிவைத் துன்பமின்றிக் கடந்ததற்காக நாகர் கோட்டத்தில் வழிபாடியற்றி வணங்குவதற்குச் சிலரும், நாகர்களின் இரத்தின மயமான பட்டினத்தைச் சுற்றிப் பார்ப்பதற்காகச் சிலருமாக அங்கே எல்லாவிதமான நோக்கங்களையுடைய எல்லாரும் இறங்கி விட்டுத்தான் அப்புறம் புத்த பூர்ணிமைக்காகப் போவார்கள்'' என்று கப்பல் தலைவன் தனக்கு மறுமொழி கூறியதைக் கேட்டபின் விசாகையையும் அவளோடு காவிரிப் பூம்பட்டினத்தில் இருந்து புறப்பட்டுச் சென்றிருக்கும் இந்திர விகாரத்துத் துறவிகளையும் மணிநாகபுரத்தில் தான் சந்திக்கலாம் என்ற நம்பிக்கை இளங்குமரனுக்கு ஏற்பட்டது.

கப்பல் தலைவனுடைய எச்சரிக்கையின் காரணமாக ஏழாற்றுப் பிரிவைக் கடக்கும் போது எல்லாரும் ஒன்று சேர்ந்து நடுத்தளத்தில் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். கூட்டத்தோடு கூட்டமாக நின்று கொண்டிருந்த மணிமார்பனும் பதுமையும் மணிநாகபுரத்தின் அழகுகளைப் பற்றிக் கப்பல் தலைவன் கூறியவற்றைக் கேட்டபின் ஒருவர் முகத்தை மற்றொருவர் பார்த்து மெல்லச் சிரித்துக் கொண்டனர். பதுமை தன் கணவன் காதருகில் வந்து குறும்புத்தனமான பேச்சு ஒன்றைத் தொடங்கினாள்: ''அன்பரே! இந்த மணிநாகபுரத்தில் பெண்கள் எல்லாரும் பேரழகிகளாக இருப்பார்களாம். மகாபாரதத்தில் அருச்சுனன் இந்தத் தீவுக்கு வந்தபோது சித்திராங்கதை என்ற நாகநாட்டுப் பேரழகியின் எழிலில் மயங்கி அவளை மணந்து கொண்டுவிட்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன் நான். இங்கே இரத்தினங்களுக்கு அடுத்தபடி மதிப்புள்ளவர்கள் அழகிய பெண்கள்தானாம். எனக்கு உங்கள் மேல் கோபம் வராமலிருக்க வேண்டுமானால் தயை கூர்ந்து இந்த மணிநாகபுரத்தில் இறங்கிச் சுற்றிப் பார்த்துவிட்டுக் கரை ஏறுகிறவரை நீங்கள் உங்களுடைய ஓவியக் கண்களை மூடிக் கொண்டிருக்க வேண்டும். இல்லாவிட்டால் நீங்களும் கூட அருச்சுனனாகி விடுவீர்கள்...''

''கவலைப்படாதே பதுமை! உன்னை விடப் பேரழகி இந்த உலகிலேயே கிடையாது என்று நான் மனத்தில் முடி போட்டுக் கொண்டாகி விட்டது. அப்படி எல்லாம் ஒன்றும் இனிமேல் நேர்ந்து விடாது. ஆனால் நான் ஓர் ஓவியன் என்ற முறையில் உலகத்து அழகுகளைப் பார்க்கும் உரிமையை நீ பறிக்கலாகாது'' என்று சிரித்துக்கொண்டே சொன்னான் மணிமார்பன்.

''பார்த்தாலே மனம் பறி கொடுக்காமல் இருக்க முடியாதாம். நாக நங்கையர்கள் அப்படிப்பட்ட அழகுடையவர்களாம்.''

''பூம்புகாரின் அரச மரபினர் பல முறை இந்தத் தீவுக்கு வந்து திரும்பும் போதெல்லாம் நீ கூறுகிற நிலைக்கு ஆளாகி மனம் பறி கொடுத்திருப்பதாகக் கதை கதையாகச் சொல்லுவார்கள்

பதுமை! ஆனால் நான் வெறும் ஓவியன் தான். எந்த அரச மரபையும் சேர்ந்தவன் இல்லை....''

''இருப்பினும் ஆசைகள் எல்லாருக்கும் உண்டே ஐயா?''

''இதோ இவரைத் தவிர—'' என்று சொல்லியபடியே மணிமார்பன் யாரும் பார்த்துவிடாமல் தன் மனைவிக்கு இளங்குமரனைச் சுட்டிக் காட்டினான். பதுமை சிரித்துக்கொண்டே மேலும் கூறினாள்:—

''மணிநாகபுரத்திலிருந்து வெளியேறுகிறவரை இந்த ஏழாற்றுப் பிரிவில் கப்பல் பயந்து கொண்டே போவதைப் போல் உங்கள் மனத்தையும் கண்களையும் கவிழ்ந்து விடாமல் கவனித்துக் கொள்ள வேண்டும்.''—

''என் மனமாகிய கப்பலைச் செலுத்தும் தலைவியாக நீதான் இருக்கிறாயே?'' என்று சொல்லிச் சிரித்தான் ஓவியன்.

25-மணிநாகபுரத்து மண்

பயப்பட்டதற்கு ஏற்ப எந்தத் தீய விளைவும் இல்லாமலே மெல்ல மெல்ல ஏழாற்றுப் பிரிவின் ஆரவாரம் மிக்க கடற்பகுதியைக் கடந்து முன்னேறியிருந்தார்கள் அவர்கள். தூரத்தில் நேர் எதிரே மரகதப் பசுமை மின்னிடத் தெரிந்த தீவை எல்லாருக்கும் சுட்டிக் காண்பித்தான் கப்பல் தலைவன்.

''அதோ பாருங்கள்! எவ்வளவு ஆனந்தமான காட்சி? சங்குவேலித்துறையும் அப்பால் மணிநாகபுரமும் தெரிகின்றன! துறையை நோக்கிச் சாரி சாரியாகக் கப்பல்களும் படகுகளும் நெருங்கும் காட்சி கடற் பரப்பில் வியூகம் வகுத்தாற் போலத் தோன்றுகிறதே!'' என்று அவன் வியந்து கூறியபடியே காண்பித்த காட்சியை எல்லாரும் கண்டார்கள். அந்தக் காட்சியைக் கண்ட பின் இளங்குமரன் கண்களை மூடிக் கொண்டு சிந்தனையை உள் முகமாகத் திருப்பித் தியானத்தில் மூழ்கினான்.

'இவ்வளவு அழகான கடலும் அதனிடையே இத்துணை வனப்பு வாய்ந்த தீவும் தோன்றக் காரணமாயிருந்த முழுமுதற் பேரழகு எதுவோ அதை என் நெஞ்சம் உணர்வுகளும் இந்தக் கணமே வணங்குகின்றன' என்று தூய்மையான அழகுணர்ச்சியில் தோய்ந்து நின்றான் அவன். தொடுவானமாகத் தொலைவில் தெரிந்த கடலும் தீவும் ஆகாயமும் சந்திக்கிற கோட்டில் மயில் கழுத்து நிறம் போலத் தெரிந்த எழுதாத வண்ணத்தை மூடிய கண்களுடனேயே தன் நினைவுக்குக் கொணர்ந்து தந்து கொண்டு எண்ணத்தில் ஆழ்ந்தான் அவன்.

அவனிடம் சற்றுமுன் பேச்சில் ஏற்பட்ட பிணக்குக் காரணமாக விலகியிருந்த வளநாடுடையார் இப்போது மீண்டும் அவன் அருகே வந்தார். அவனோடு ஏதோ பேசுவதற்கு நிற்கிறவர் போல் காத்து நின்றார். இளங்குமரன் கண்கள் திறந்து பார்த்ததும் அவர் அங்கு வந்து நிற்பதையும், நிற்கும் நோக்கத்தையும் புரிந்து கொண்டான்.

''தம்பீ! இப்போதாவது என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாமல் நான் சொல்வதைக் கவனமாகக் கேள். வீரம் என்பது உடம்பின் வலிமையாகிய ஆற்றலா, மனத்தின் வலிமையாகிய கருணையா என்பதைப் பற்றி இப்போது நான் உன்னிடம் வாதிட வரவில்லை. அதைப் பற்றி நாம் இதுவரை பேசியவற்றைக் கூட நீ இந்தக் கணத்திலேயே மறந்து விடலாம். இப்போது நான் சொல்லப் போவது இங்கே பயணம் செய்து வந்ததன் அவசியத்தைப் பற்றியே ஆகும். பூம்புகார்த் துறையிலிருந்து நாம் புறப்படுவதற்கு முன் நீலநாகமறவர் உன்னிடம் கூறியவற்றை இப்போது மீண்டும் நினைவூட்டிக்கொள்.

'இந்த பயணத்தினால் உனக்கு நிறைய நன்மையிருக்கிறது. நீ ஆலமுற்றத்தில் உடம்பின் வலிமையைக் கற்றுத் தெரிந்து கொண்டாய். திருநாங்கூரில் அறிவின் வலிமையைக் கற்றுத் தெரிந்து கொண்டாய். இப்போது மணிபல்லவத்தில் போய் உன்னைத் தெரிந்து கொண்டு வா'—என்று அவர் கூறியதை நீ என்னவென்று புரிந்து கொண்டாய்?'' என்று வளநாடுடையார் தன்னைக் கேட்டபோது அவருக்கு என்ன மாற்றம் கூறுவதென்று சிந்தித்துச் சிறிது நேரம் தயங்கினான் இளங்குமரன். பின்பு அவருக்கு மறுமொழி கூறலானான்:

''எல்லாரும் அந்த வார்த்தைகளிலிருந்து என்ன புரிந்து கொள்ள முடியுமோ அதைத்தான் நானும் புரிந்து கொண்டேன். பொதுவாக மணிபல்லவத்துக்குப் போகிறவர்களுக்குப் பழம் பிறவியைப் பற்றிய ஞானம் உண்டாகும் என்று பூம்புகாரில் நீண்டகாலமாக ஒரு புனித நம்பிக்கை இருந்து வருகிறது. அதை நினைவில் வைத்துக் கொண்டுதான் அவரும் என்னை அப்படி வாழ்த்தி வழியனுப்பியிருக்க வேண்டும் என்று நான் எண்ணினேன். என்னுடைய வாழ்வில் இதுவரை ஏற்பட்டிருக்கிற ஒவ்வொரு பெரிய மாறுதலும் பூம்புகாரில்

ஏதாவதொரு இந்திர விழாத் தொடங்கும் போதாவது முடிந்த உடனேயாவது நேர்ந்திருக்கிறது. இந்த யாத்திரையிலும் அப்படி ஏதேனும் நேரலாமென்று புறப்பட்டபோது என் மனத்தில் அவதி ஞானமாக ஓர் உணர்வு பிறந்தது. அந்த ஒரு கணம் மட்டும்தான் அதைப் பற்றி நான் நினைத்தேன். அப்புறம் இப்போது மறந்து விட்டேன். எது நேர்ந்தாலும் தாங்கிக் கொண்டு அந்த அநுபவத்திலும் வளர்ந்து நிற்க வேண்டும் என்று உறுதி செய்து கொண்டு விட்டேன். மணிபல்லவத்துக்குப் பயணம் புறப்பட வேண்டும் என்று நீங்கள் ஆலமுற்றத்தில் வந்து என்னை அழைத்த போது கூட அப்படி நினைத்துக் கொண்டுதான் புறப்பட்டேன்.''

இப்படி இந்த வார்த்தைகளை வெகு நிதானமாகத் தன்னிடம் பேசிவிட்டு நின்ற இளங்குமரனைப் பார்த்து அவனுக்கு அப்போதுதான் சொல்லியாக வேண்டிய ஓர் உண்மையை எப்படித் தொடங்கி எந்தவிதமாகச் சொல்லி முடிப்பதென்று அலைத்துத் தயங்கினார் வளநாடுடையார். அவர் சொல்ல வேண்டிய விஷயத்துக்கு அவருக்கே தொடங்கும் விதமும் முடிக்கும் விதமும் புலப்படவில்லை.

இளங்குமரனுக்கு முன் அவர் இவ்வாறு தயங்கி நின்றிருந்த போது கரை நெருங்கியிருந்தது. கப்பல் தலைவனும் ஊழியர்களும் மரக்கலத்தைக் கரை சேர்த்து நிறுத்தி நங்கூரம் பாய்ச்சுவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். மணிமார்பனும் அவர்களுக்கு உதவியாகச் சென்றிருந்தான். அவன் மனைவி பதுமை கப்பல் தளத்தின் ஒரு பகுதியில் நின்று மணிநாகபுரத்தின் மாடமாளிகைகளையும் அவற்றின் மேற்பகுதிகளில் தெரிந்த பட நாகக் கொடிகளையும், வரிசையாய்ச் சங்கு ஒதுங்கிய கரையையும் பார்த்து வியந்துகொண்டிருந்தாள். கரையருகே ஆழம் குறைவாயிருந்ததால் சிறிது தொலைவிலேயே கப்பலை நிறுத்த வேண்டியிருந்தது.

இந்த நிலையில் வளநாடுடையாருக்கும் இளங்குமரனுக்கும் கப்பல் தளத்தில் போதுமான தனிமை வாய்த்திருந்தது. நாக நாட்டுப் பெருந்தீவில் இறங்கிக் கரை சேருவதற்கு முன்பே தனது



நினைவிருப்பதை அந்தப் பிள்ளையாண்டானிடம் சொல்லத் தொடங்கி விட வேண்டுமென்று தவித்தார் அவர். அவருடைய மனமோ நினைவில் மூடுண்டு கிடக்கும் அந்த இரகசியத்தை உடனே அவனிடம் சொல்லி விடப் பறந்தது. அப்படி உடனே சொல்லி விடுவதும் பொருத்தமானதாக அமையாதென்று மெதுவாக அந்த விநாடியில் எப்படித் தொடங்க வேண்டுமென்று தோன்றியதோ அப்படியே தொடங்கிச் சொல்லலானார் அவர்:—

''தம்பி! நீ பூம்புகாரிலிருந்து திருநாங்கூருக்குப் புறப்படுவதற்கு முன்பு நிகழ்ந்த பழைய இந்திர விழாவை உனக்கு நினைவிருக்கிறதல்லவா? அந்த இந்திர விழாவின் முதல் நாள் பின்னிரவில் நான் சம்பாபதி வனத்தில் அடிபட்டுக் கிடந்த அருட்செல்வ முனிவரை நீ எங்கள் வீட்டுக்குத் தூக்கி வந்து தங்கச் செய்துகாப்பாற்றினாய். அன்றைக்கு மறுநாள் காலையில் உன்னை என் மகள் முல்லையோடு பூத சதுக்கத்துக்குத் துணையாக அனுப்பிய பின்பு புறவீதியில் என் இல்லத்தில் நானும் உன்னை வளர்த்து ஆளாக்கிய அருட்செல்வ முனிவரும் தனியாக இருந்தோம். அப்படித் தனியாயிருந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு அன்று நான் அவரிடம் அந்தரங்கமாக ஒரு கேள்வி கேட்டேன். அது வேறு எந்தக் கேள்வியுமில்லை. உன்னைப்பற்றிய கேள்விதான்.

''துறவிகளுக்கு ஒளிவு மறைவு கூடாதென்பார்கள். நீங்களோ மிக மிகப் பெரிய செய்திகளையெல்லாம் ஒளித்து மறைத்துக் காப்பாற்றி வருகிறீர்கள். இன்று வரை நீங்கள் வளர்த்து ஆளாக்கிய இந்தப் பிள்ளை இளங்குமரனுடைய பிறப்பு வளர்ப்பைப் பற்றி என்னிடம் ஒன்றும் சொல்லாமல் ஏமாற்றிக்கொண்டே வருகிறீர்களே?' —என்று கேட்டேன். 'என் இதயத்துக்குள்ளேயே நான் இப்போது இரண்டாவது முறை



யாக எண்ணிப் பார்ப்பதற்குக் கூடப் பயப்படுகிற செய்திகளை உங்களிடம் எப்படிச் சொல்ல முடியும்?' என்று அருட்செல்வ முனிவர் அன்று எனக்கு மறுமொழி கூறினார். நான் மேலும் தூண்டிக் கேட்ட போது அந்த உண்மைகளையெல்லாம் இப்போது வெளியிடுவதனால் இளங்குமரனுக்குப் பகைவர்களை அதிகமாக உண்டாக்க நேரிடும்' என்று மறுத்து விட்டார்.....''


வளநாடுடையார் இவ்வளவில் பேச்சை நிறுத்தி விட்டு இளங்குமரனுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்தார். அருட்செல்வ முனிவருடைய ஞாபகத்தினால் அவன் கண் கலங்கித் தலை சாய்த்து நின்று கொண்டிருந்தான். நாத் தழுதழுத்து நெகிழ்ந்த குரலில் குனிந்த தலை நிமிராமலே அவன் வளநாடுடையாரிடம் சொன்னான்:—

''ஐயா! அந்த முனிவர் என்னுடைய தெய்வம். என்னை வளர்த்து ஆளாக்கியதற்காக நான் அவருக்கு எவ்வளவோ நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். அவருடைய முதுமையில் அவருக்கு நிறையப் பணிவிடைகள் புரிந்து அந்த நன்றிக் கடனையெல்லாம் தீர்த்துக் கொள்ள எண்ணியிருந்தேன். ஆனால் எப்படியோ முடிந்து விட்டது அவர் வாழ்க்கை. உங்களிடம் அந்தப் பழைய இந்திர விழாவின் இரண்டாம் நாள் பகலில் என்ன மறுமொழி சொல்லியிருந்தாரோ அதையேதான் அதற்கு முந்திய நாள் இரவு அவர் எனக்கும் சொல்லி யிருந்தார். என் தாயைப் பற்றி நான் அவரிடம் கேட்டபோதெல்லாம் அவர் எனக்குப் புதிராகவே இருந்தார். இறுதியாக அந்த ஆண்டு இந்திர விழா இரவின் போது நான் அறிய விரும்பியதை எனக்குக் கூறுவதற்காக நள்ளிரவில் சம்பாபதி வனத்து நாவல் மரத்தடிக்கு என்னை வரச் சொல்லி யிருந்தார். அங்கே போய்ச் சேர்ந்த போதுதான் அன்று எனக்கும் அவருக்கும் அப்படிப் பயங்கர அநுபவங்கள் ஏற்பட்டன. அப்புறம் அவரும் தம் தவச்சாலை தீப்பட்டதனால் மாண்டு போய் விட்டார். கடைசி கடைசியாக நானும் இந்தப் பூமியையே என் தாயாகவும், வானத்தையே தந்தையாகவும் நினைத்துக் கொண்டு மன அமைதி அடைந்து விட்டேன்'' என்று இளங்குமரன் கூறினான். இதற்குள் கப்பலை நங்கூரம் பாய்ச்சி யிருந்தார்கள். படகுகளில் இறங்கிக் கரையை அடைய வேண்டுமென்றான் தலைவன்; மற்றவர்களையெல்லாம் வேறுபடகுகளில் அனுப்பி விட்டு இளங்குமரனை மட்டும் தனியாக ஒரு படகில் அமரச் செய்து கரைக்கு அழைத்துக் கொண்டு போனார் வளநாடுடையார். படகில் போகும் போது இளங்குமரன் ஆவலோடு எதிர் பார்த்த வேறு ஒரு சந்திப்பும் அவனுக்குக் கரையிலிருந்து கிடைத்து விட்டது. கரையில் வரைவரையாய்க் குவிந்திருந்த சங்குக் குவியல்களுக்கு அப்பால் விசாகையும் கூட்டத்தினிடையே நின்றிருப்பதை அவன் பார்த்து விட்டான்.


நாக நாட்டுப் பெருந் தீவுக்கு முதல் முனையாகிய மணிநாகபுரத்துத் துறையில் இளங்குமரன் இறங்கி நின்றபோது சிறிது தொலைவில் நின்ற விசாகை அவனருகே வந்து நலம் விசாரித்தாள். அவன் மணிநாகபுரத்து மண்ணில் நின்ற வேளை அவனுடைய வாழ்வின் மிக நல்ல போது என்று அவனிடம் அந்தக் கடலே குறிப்பாய்ச் சொல்லுவதுபோல் புரண்டு வந்த அலையொன்று நாலைந்து பொன் னிறச் சங்குகளை அவன் பாதங்களில் கொணர்ந்து இடுவதென ஒதுக்கியது.

''தம்பி! இந்த மண்ணில் இறங்கிய பின் இழந்து விட்ட நம்பிக்கைகளையெல்லாம் நீ அடையப் போகிறாய். மணி பீடமும், புத்த பீடிகையும், பழம் பிறவி ஞானத்தைத் தரும் என்கிறார்கள். உனக்கோ இந்தப் பிறவியைப் பற்றிய ஞானமே இந்தத் தீவிலிருந்து தான் கிடைக்கப் போகிறது.'' என்று வளநாடுடையார் அவன் காதருகே வந்து ஆவலோடு கூறினார்.

''கடற்கரையில் நிற்கிறபோது காலடியில் தானாகவே சங்கு வந்து ஒதுங்குவது மிகப் பெரிய நற்சகுனம் எனச் சொல்வார்கள்'' என்றான் ஓவியன் மணிமார்பன். இளங்குமரனுடைய மனம் அந்த மண்ணில் நின்றபோது எதற்காகவோ ஏங்கியது. எதற்காகவோ நெகிழ்ந்தது. எந்த நிறைவையோ எதிர்பார்த்துக் குறைப்பட்டு நின்றது. அவன் தன் கண்களை மலர விழித்து நிமிர்ந்து பார்த்தான். மறுபடியும் ஒரு பெரிய அலை கடற்கரையோரத்துச் செடியிலிருந்தோ மரத்திலிருந்தோ உதிர்ந்த செந்நிறப் பூங்கொத்து ஒன்றையும் நாலைந்து முத்துச் சிப்பிகளையும் அவன் பாதங்களில் கொணர்ந்து குவித்தது. 'நிறைக நிறைக' என்று விசாகை அப்போது அவனை மனம் நிறைய வாழ்த்தினாள். (தொடரும்)



ஒண்ணும் புரியலை



தாமரை மணாளன்

பத்து வயதுதான் ஆகிறது எனக்கு. ஆனால் அறுபது வயது தாத்தாவுக்குத் தெரியாத விஷயங்களை யெல்லாம் நான்தான் சொல்லிக் கொடுத்தேனாம்! தாத்தாதான் சொன்னார். எனக்கு ஒன்றுமே புரியவில்லை.

தாத்தா ஏன் அப்படிச் சொன்னார் என்று அம்மாவிடம் கேட்டேன். அவள் கோபத்தோடு முறைத்துப் பார்த்தாள்; அப்பாவை அடிக்கடி பார்ப்பாளே அப்படி. அப்பாவோ 'மூசுமூசெ'ன்று கண்ணீர் விட்டு அழுகிறார். ஊருக்குப் போகும் போதெல்லாம் இங்கிலீஷ் படம் பார்க்க இரண்டு ரூபாய் கொடுத்து விட்டுப் போகும் அத்தை, இந்தத் தடவை ஒன்றுமே தராமல் போய் விட்டாள். எல்லாருக்கும் என்மேல் கோபம். ஏனோ தெரியவில்லை. விஷயத்தைச் சொல்கிறேன்; உங்களுக்காவது தெரிகிறதா என்று சொல்லுங்கள்.

ராமரத்தினம் என்று தாத்தா பெயரைச் சொன்னால் ரொம்ப பேருக்குத் தெரியாது; கலெக்டர் என்றால் தான் தெரியும். நாலைந்து வருஷங்களுக்கு முன்னாலேயே தாத்தா கலெக்டர் வேலை பார்த்து முடித்து விட்டார். ஆனால் இப்போதும் தெருப் பையன்களெல்லாரும் நான் விளையாட்டில் தப்பாட்டம் ஆடினாலும் சண்டைக்கு வர மாட்டார்கள். 'அவன் தாத்தா கலெக்டர். அவனிடம் சண்டைக்குப் போனால் அவர் தொலைச்சுடுவார்', என்று பயந்து பயந்து பேசிக் கொள்வார்கள். ஆனால் அவர்களுக்கு விஷயம் தெரியாது. என் தாத்தா ஒன்றும் அப்படியில்லை. அவர் சுத்த அப்பாவி. அவர் தொலைத்தால் தம்முடைய மூக்குக் கண்ணாடியையும் பொடி டப்பியையும்தான் தொலைப்பார்; வேறொன்றும் தொலைக்க மாட்டார். ரொம்ப சாது. இதை நான் மட்டும் சொல்லவில்லை. என் பாட்டியே அடிக்கடி சொல்வாள்.

பாட்டி போன வாரம்தான் செத்துப் போனாள். சாகும்போது ஒருத்தர் பாக்கியில்லாமல் எல்லாரிடமும் சொன்னாள். தாத்தா குழந்தை மாதிரியாம். காலமெல்லாம் அவருக்கு ஆபீஸும் பைலும் தான் தெரியுமாம். உலகமே தெரியாதாம். என்னிடம் கூட இரண்டு

நிடவை ''ராமு. தாத்தாவைக் கவனிச்சுக்கோ. அவருக்கு வேணும்கிறதை அம்மாவிடம் கேட்டு வாங்கிக் கொடு. எப்போதும் அவரோடேயே இருந்து பார்த்துக்கோள்'' என்று சொன்னாள்.

பாட்டி சொன்னதிலிருந்து நான் தாத்தாவை நன்றாகக் கவனித்துக் கொள்கிறேன். தாத்தா மட்டும், 'பள்ளிக்கூடத்துக்குப் போடா!' என்று சொல்லா விட்டால் இன்னும் பிரமாதமாகக் கவனித்துக் கொண்டிருப்பேன். என்னைத் தவிர மற்றவர்கள் கவனிக்கிறதெல்லாம் பெயருக்குத்தான்.

இந்த அம்மா சேதி தெரியுமா? தாத்தா என்றால் அம்மாவுக்கு அவ்வளவாகப் பிடிக்காது. அது எனக்கு ரொம்ப நாட்களுக்கு முன்னாலேயே தெரியும்.

பாட்டி உயிரோடு இருந்தபோது ஒருநாள் என் சிநேகிதர்களெல்லோரும் 'யார் ரொம்ப அழகு?' என்று சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள். நான் சண்டை போடவில்லை. ஏனென்றால் நான் அழகாக இருக்கிறேனா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. நான் பாட்டியிடம் போய், ''நான் எப்படி யிருக்கேன்?'' என்று கேட்டேன்.

அவள், ''உன் தாத்தா மாதிரியிருக்கே'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள். எனக்கு மனம் திருப்தியாகவில்லை. தாத்தா எப்படி இருக்கிறார் என்று தெரியவில்லையே! அம்மாவிடம் போய், ''தாத்தா எப்படியம்மா இருக்கார்?'' என்று கேட்டேன் அம்மா கொஞ்சங்கூட யோசிக்கவில்லை. பட்டென்று, ''உன் தாத்தா குரங்குமாதிரி இருக்கார்!'' என்று சொல்லி விட்டாள்.

தாத்தாவுக்காக ஏதாவது கேட்டால் சில சமயங்களில் 'கிழத்துக்குச் சதா தொண தொணக்கிறதுதான் வேலை!' என்று அம்மா முணுமுணுப்பாள். ஆனால் தாத்தா முன்னால் எதுவும் பேச மாட்டாள்; ரொம்பப் பயந்த மாதிரி பேசுவாள். அதெல்லாம் பெரிய ட்ரிக்!

அப்பா இருக்கிறாரே அவர் இன்னொரு மாதிரி. தாத்தாவுக்கென்று எது கேட்டாலும் முணுமுணுக்கவும் மாட்டார்; செய்து கொடுக்கவும் மாட்டார். ஏதாவது புஸ்தகமாவது பொடியாவது வாங்கி வரச் சொல்வார் தாத்தா. ஆனால் அப்பா வாங்காமல் வந்து விடுவார். கேட்டால் 'மறந்து விட்டேன்' என்று சொல்வார். அதெல்லாம் சும்மா! அம்மா ஏதாவது சொல்லி விட்டால் மட்டும் ஞாபகமாக வாங்கிக் கொண்டு வருகிறாரே!

இதெல்லாம் இந்த அப்பாவித் தாத்தாவுக்குத் தெரியாது. பள்ளிக்கூடத்தில் எங்கள் வாத்தியார் அடிக்கடி, ''பச்சைக் கண்ணாடி போட்டுப் பார்த்தால் பச்சையாகத் தெரியும். கறுப்புக் கண்ணாடி போட்டுப் பார்த்தால் கறுப்பாகத் தெரியும். எல்லாம் நாம் பார்க்கிறதில்தான் இருக்கு'' என்று சொல்வார். எங்க தாத்தா எந்தக் கண்ணாடி போட்டுப் பார்ப்பாரோ, அவருக்கு எல்லாரும் நல்லவர்களாகத்தான் தெரிவார்கள். கெட்டவன் என்று யாரையும் அவர் சொன்னதில்லை.

இரண்டு வாரங்களுக்கு முன்னால் திடீரென்று தாத்தாவுக்கு ஜுரம் வந்து விட்டது. அப்பொழுது நடந்ததை யெல்லாம் நினைத்தால் எனக்கு வேடிக்கையாகவும் இருக்கிறது; அழுகையும் வருகிறது.

ஒரு வாரமாகியும் தாத்தா கம்பளிப் போர்வையை உடம்பை விட்டு எடுக்கவில்லை. எப்போதும் படுக்கைதான். நான் பள்ளிக் கூடத்துக்கும் போகவில்லை. தாத்தாவும் 'போடா' என்று சொல்லவில்லை.

நாலைந்து நாட்கள் கழித்து டாக்டர் அப்பா காதில் என்னவோ சொன்னார். உடனே அப்பாவுக்குக் கண் கலங்கி விட்டது. 'கருணாவை வரச் சொல்லி டில்லிக்குத் தந்தி கொடுத்து விட்டு வருகிறேன்' என்று அம்மாவிடம் சொல்லி விட்டு வெளியே புறப்பட்டார்.

கருணா என்றால் டில்லியிலிருக்கிற அத்தை. அப்பாவுக்குத் தங்கச்சி. அவள் வந்தால் ஒரு மாதம் இருப்பாள். அவளுக்கு சினிமா, நாடகம் என்றால் ரொம்ப ஆசை. தினம் என்னையும் அழைத்துக் கொண்டு போவாள். அம்மாவுக்குத்தான் அத்தையைப் பிடிக்காது. அதற்காக அத்தை கவலைப்பட மாட்டாள்.

அத்தை வருகிறாள் என்றால் தாத்தாவுக்கும் எனக்கும் ரொம்பச் சந்தோஷமாக இருக்கும். ''நான்னா கருணாவுக்கு உயிராச்சே. எனக்கு ஒண்ணுன்னா அவ துடிச்சுப் போயிடுவா'' என்று தாத்தா எப்போதும் சொல்லுவார்.

சாயங்கால வண்டிக்கு அத்தை வருவாள் என்று அன்றைக்கு அப்பா சொன்னதிலிருந்து எனக்கு வீட்டில் இருக்கவே பிடிக்கவில்லை. அத்தை எப்போதும் சிரித்துக் கொண்டே யிருப்பாள். தாத்தாவுக்குச் சுகமில்லாமல் இருப்பதால் அத்தை அழுது கொண்டு

தானே வருவாள்! அத்தை அழுவதைப் பார்க்கக் கஷ்டமாக இருக்குமே.

சாயங்காலம் வீட்டு வாசலில் வண்டி வந்து நின்றது. ஓடிப்போய்ப் பார்த்தேன். அத்தை எப்போதும் போல் துள்ளிக்குதித்துக் கொண்டு தான் வண்டியிலிருந்து இறங்கினாள். அவளோடு மாமாவும் வந்திருந்தார். நான் பயந்த மாதிரி அத்தை அழவில்லை.

ஆனால் தாத்தாவின் அறைப் பக்கம் போனதும் அவளுக்கு அழுகை வந்துவிட்டது. ஓடிப் போய்த் தாத்தாவின் காலைக் கட்டிக் கொண்டு அழ ஆரம்பித்து விட்டாள். அப்பாவும் அழுது விட்டார். அம்மா முந்தானையைக் கண்ணில் வைத்துக் கொண்டாள். அவளும் அழுதது போலிருந்தது.

''டாக்டர் என்ன சொன்னார், அண்ணா?'' என்று அத்தை அப்பாவிடம் கேட்டாள்.

''நம்ப முடியாதுன்னு சொல்லி விட்டார்'' என்றார் அப்பா.

'ஓ' வென்று கத்தி விட்டாள் அத்தை. அந்தச் சத்தத்தைக் கேட்டுத் தாத்தா கண்ணை விழித்துப் பார்த்தார்.

''அப்பா உங்களுக்குக் கஷ்டமாக இருக்குன்னு தந்தி கிடைச்சதும் என் உயிர் என் கையில் இல்லே'' என்று கதறினாள் அத்தை.

''டில்லியில் புறப்பட்டதிலே யிருந்து உங்களைப் பார்க்கும் வரை கருணாவுக்கு ஒரே அழுகைதான்'' என்றார் மாமா.

எனக்கு அத்தையும் மாமாவும் சொன்னது வேடிக்கையாக இருந்தது. இரண்டு பேரும் ஏன் இப்படிப் பொய் சொல்லுகிறார்கள்? வண்டியிலிருந்து இறங்கும் போதுகூட அத்தை அழவில்லையே! தாத்தா அறைப் பக்கம் வந்த பிறகுதானே அழ ஆரம்பித்தாள்!

அத்தை வந்த பிறகு இன்னும் பெரிய வேடிக்கை யெல்லாம் நடந்தது.

அத்தையும் அம்மாவும் போட்டி போட்டுக் கொண்டு தாத்தாவைக் கவனித்தார்கள். அதோடு இரண்டு பேரும் தனித்தனியாகத் தாத்தாவிடம் வந்து கண்ணீர் விட்டு அழுது விட்டுப் போவார்கள்.

''அப்பா! உங்களுக்கு உடம்பு குணமாகிற வரை எனக்கு மனசில் நிம்மதியே இல்லே'' என்று அத்தை அழுவாள்.

காங்கிரஸ் ஆட்சியில் ....

காங்கிரஸ் ஆட்சிக்கு 'பெர்மிட்—லைசென்ஸ் ராஜ்யம்' என்று ராஜாஜி மாற்றுப் பெயர் இட்டிருக்கிறார் அல்லவா? இதன் பொருள் என்ன என்பதை மக்கள் உணர வேண்டும்.

இன்று சிறு தொழில்களைத் தொடங்கக் கூட சர்க்காரிடம் அனுமதி பெற வேண்டியிருக்கிறது. எனவே முதல் போடப் பணமும், நிர்வகிக்கும் ஆற்றலும், தொழில் நடத்த ஊக்கமும் துணிவும் இருந்தால் மட்டும் இன்று போதாது: சர்க்காரின் அனுமதியும்—அதாவது அதிகாரத்திலுள்ள காங்கிரஸின் சலுகையும்—தேவையாயிருக்கிறது. பலர் இவ்விதஅனுமதி பெற முற்படும் போது சிலருக்கு மட்டுமே அந்தத் தயவு காட்டப்படுகிறது. இந்த முறையினால் பெர்மிட், லைசென்ஸ் வழங்கும் அதிகாரிகளைத் 'திருப்தி'ப்படுத்த வேண்டிய அசங்கியமான சூழ்நிலை ஏற்படுகிறது. அதிகார வர்க்கத்தின் ஊழல் குறைவற வளர்கிறது. இந்த அதிகார வர்க்கமும் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு நன்மை செய்ய முடியாது. காங்கிரஸ் எஜமானர்களின் மனமறிந்து அவர்களுடைய செல்லப் பிள்ளைகளுக்குத்தான் அதிகார வர்க்கமானது வியாபார உரிமைகளை வழங்க முடியும். அதிகார வர்க்கமும் பொது மக்களும் கூடா நட்பு கொள்வது போதாதென்று ஆளும் அரசியல் கட்சியானது அதிகார வர்க்கத்தின் மீது தங்கள் செல்வாக்கைப் பிரயோகிக்கவும் தாராளமாக இடம் அளிக்கிறது இந்தப் பெர்மிட் - லைசென்ஸ் முறை.

இந்த முறையில் காங்கிரஸின் சலுகை ஆட்சி எப்படி நடக்கிறது என்பதற்கு இதோ சான்று: ஸ்ரீ.முரார்ஜி வைத்தியா அவர்கள் பம்பாயில் ஒரு பிரபலஸ்தர். அவர் 1960-ம் ஆண்டு மார்ச்சு மாதத்தில் மலிவு விலையில் மோட்டார் கார் தயாரிப்பதற்கு லைசென்சு பெறுவதற்காக இந்திய சர்க்காருக்கு மனுப் போட்டார். சர்க்கார் ஏப்ரல் மாதம் இதற்குப் பதில் எழுதும்போது காரின் உபகரணங்களில் அறுபது சதவிகிதம் உள் நாட்டில் தயாரானால் மட்டுமே லைசென்சு வழங்க முடியும் என்றும் எனவே ஸ்ரீ வைத்யாவின் மனுவை நிராகரித்து விட்டதாகவும் கூறியது. இதன் மீது ஸ்ரீவைத்யா தாம் எழுபது அல்லது எண்பது சதவிகித உறுப்புக்களைக் கூட உள் நாட்டில் தயாரிக்க முடியும் என்று உறுதி கூறி, உற்பத்தி தொடங்க லைசென்சு வழங்குமாறு கோரினார். அப்படியும் அவரது விண்ணப்பத்தைத் தட்டிக் கழித்து வந்த சர்க்கார் இறுதியாக நவம்பர் மாதத்தில் அவருக்கு எழுதிய கடிதத்தில் இனி தனியார்த் துறையில் மோட்டார் கார் உற்பத்தி செய்யக் கோரும் எந்த விண்ணப்பத்தைத் தாங்கள் கவனிக்கப் போவதில்லை என்று கூறிவிட்டது. மூன்று மாதங்களுக்குள் இப்படி ஒரு மாறுதல் ஏற்பட்டது விந்தையாகத்தானே இருக்கிறது? இதே சர்க்கார் இந்நாட்டின் மிகப் பெரும் தொழிலதிபர்களில் இருவருக்கு மோட்டார் காரும் மூன்று சக்கர ஆட்டோக்களும் ஏராளமாக உற்பத்தி செய்ய லைசென்ஸ் வழங்கியிருக்கிறது. இவர்கள் மட்டும் என்ன புண்ணியம் செய்தார்கள்: ஸ்ரீ வைத்யா அவர்கள் என்ன பாவம் செய்தார்கள் என்ற கேள்வி எழுகிறதல்லவா? காங்கிரஸ் ஆதரவாளராக இருப்பதுதான் இந்த இருவரும் செய்த புண்ணியம்; பம்பாய் சுதந்திரக் கட்சிக் கிளையின் தலைவராக இருந்ததுதான் ஸ்ரீ வைத்யா செய்த பாபம். பெர்மிட்—லைசென்ஸ் முறை ஆளும் கட்சியின் சலுகை ஆட்சியைத்தான் ஏற்படுத்தி வருகிறது என்று காட்ட இது போதாதா?

அத்தை இல்லாத நேரத்தில் அம்மா வந்து, ''நீங்கள் இருக்கிறது எங்களுக்கு ஒரு மலையே துணைக்கு இருக்கிற மாதிரி. பகவான் மோசம் பண்ணி விடுவாரோன்னு நினைச்சாப் பயமாயிருக்கு'' என்பாள்.

இவர்கள் இரண்டு பேரும் தாத்தாவின் அறைக்குள் வரும் போது மட்டும் இப்படி அழுவார்கள். வெளியே போனதும் அழுகை நின்று விடும். அது மட்டுமல்ல: ஊரிலிருந்து வந்த ஒரு நாள் மாத்திரம் தான் அத்தை சினிமாவுக்குப் போகவில்லை. மறு நாளிலிருந்து தினம் தினம் அவள் புருஷனோடு 'ஜாலி'யாக வெளியே போய் விடுவாள். அம்மாவும் அப்படித்தான். எப்போதும் போல் அடுத்த வீட்டு மாமிகளுடன் சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டேதானிருப்பாள்.

ஒரு வாரம் ஆகிவிட்டது. தாத்தாவுக்குக் குணமாகாமலேயே இருந்தது. வரவர அம்மாவும் அத்தையும் கூட மாறி விட்டார்கள். அவர்கள் வெளியே போகவில்லை. எல்லோரும் 'உம்'மென்று முகத்தை வைத்துக் கொண்டு ஒவ்வொரு மூலையிலிருந்து எதையாவது யோசித்துக் கொண்டிருந்தார்கள். எதுக்காகவோ கவலைப்படுவது போலிருந்தது. ஆனால் அழுது கொண்டிருக்க வில்லை. ஒருத்தரோடு ஒருத்தர் அதிகமாகப் பேசவில்லை. அப்படிப் பேசுவதானால் எப்போதாவது அம்மாவும் அப்பாவும் தனியாகவும், அத்தையும் மாமாவும் தனியாகவும் ஏதோ ரகசியமாகப் பேசிக் கொள்வார்கள். அவர்கள் என்ன பேசுவார்களோ தெரியாது.

எனக்குத் தாத்தாவைப் பற்றிக் கவலையாக இருந்தது. அழுகை அழுகையாக வந்தது. ஆனால் திடீரென்று ஒரு நாள் டாக்டர் தாத்தா கையைப் பார்த்து விட்டு சந்தோஷத்துடன், ''இனிமேல் பயமில்லை. ஜுரம் இறங்கு முகமாயிருக்கு. இன்னும் ஒரு வாரத்துக்குள்ளே குணமாயிடும்'' என்றார்.

தாத்தா சிரித்துக் கொண்டே, ''குணமாயிடும் என்று எனக்கு அப்பவே தெரியும், டாக்டர்! அதுக்குக் காரணம் வேறொன்றுமில்லை. என் பிள்ளைகளும் மருமக்களும் என் மேல் வைச்சிருக்கிற அன்புதான். ஒவ்வொருத்தரும் எப்படித் துடிச்சுப் போயிட்டாங்க தெரியுமா? அவங்க என்னைச் சுற்றிப் போட்ட அன்புக் கோட்டையைத் தாண்டி வர எமனாலேயே முடியலை'' என்று பெருமையாகச் சொன்னார்:

எனக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. டாக்டர் மாமாவுடைய மருந்துப் பெட்டியை நானே அடுத்த தெருவிலிருக்கும் அவருடைய வீடு வரைக்கும் கொண்டு போய்க் கொடுத்து விட்டு வந்தேன். இனிமேல் ஒருவரும் கவலையாக இருக்க மாட்டார்கள் என்று குஷியாக வீட்டுக்குத் திரும்பி வந்தேன்.

ஆனால் நான் நுழைந்து பார்த்தபோது வீடு கம்மென்றிருந்தது. தாத்தா அறையை எட்டிப் பார்த்தேன் தாத்தா பக்கத்தில் யாருமில்லை. எனக்குத் திகைப்பாக இருந்தது. எல்லோரும் எங்கே போய் விட்டார்கள்?

அத்தையின் அறையில் இலேசாகச் சத்தம் கேட்டது. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். அத்தையும் மாமாவும் இருந்தார்கள். ஆனால் அவர்கள் உற்சாகமாக இல்லை.

மாமா அத்தையிடம் கோபமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

''என்னவோ உடனே போயிடும்போலே உங்கண்ணா தந்தியடிச்சாரே, இப்போ என்ன ஆச்சு? நாளை இழுத்துக் கொண்டிருக்கு.. எத்தனை நாட்கள் இங்கே காத்துக் கிடக்கிறது! டாக்டர் ஒரு வாரம் என்று டயம் சொல்லியிருக்கிறார். அதுவரைக்கும் இருந்தாகணும். இப்போ குணமானால், இன்னும் மூணு மாசத்திலே பழையபடியும் படுத்துக் கொள்வார். அப்போ ஒரு தந்தி வரும். லபோ லபோன்னு ஓடி வரணும். ரயில்காரனுக்குக் கொட்டிக் கொடுக்கப் பணம் விளையுதா?'' என்று இரைந்தார் மாமா.

''நான் இப்படி இருக்கும்னு கண்டேனா? நானும் உங்களை மாதிரி தானே நினைச்சேன். இந்த அண்ணாவுக்கு இதுதான்வழக்கம். சாதாரணக் காய்ச்சல் என்றாலும் தந்தியைக் கொடுத்துடறது. வராமலும் இருக்க முடிகிறதில்லை. என்ன செய்கிறது? அதற்காகச் சத்தம் போடாதீங்க. யார் காதிலும் விழப்போகுது''

அடுக்களையில் அம்மாவும் அப்பாவும் கூடக் கோபமாகத்தான்பேசிக்கொண்டிருந்தார்கள்.

''உங்கப்பாவுக்கு டாக்டர் சிரஞ்சீவி வரம் கொடுத்துவிட்டுப் போயிட்டார்! இன்னும் வாதனை விட்டபாடில்லை. அப்படியோ இப்படியோன்னு அவர் கிடக்கிற போதே உங்க தங்கச்சிக் கடன்காரி சினிமாத் தியேட்டரை அலசிட்டா. இனிமேல் உங்களை மொட்டை

யாடிக்கப் பட்டணத்தைக் கொள்ளை கொள்ளாமல் போக மாட்டாள். இன்னும் எத்தனை தடவை அவர் சாய்ந்த சாய்ந்த செலவழிக்கப் போகிறாரோ தெரியலே. போகிற வயசிலே காலா காலத்திலே போயிட்டா என்ன?'' என்று கோபமாகக் கேட்டாள் அம்மா.

''நான் என்னடி செய்வேன். நாம நினைக்கிறபடியெல்லாம் நடக்குமா? எனக்குமட்டும் பணம் செலவாகிறதேன்னு கவலே இல்லேயா?'' என்றார் அப்பா.

ஏன் இப்படிப் பேசிக் கொள்கிறார்கள்? தாத்தா சுகமில்லாமல் படுத்ததிலிருந்து இவர்களெல்லாரும் பேசுவதும் செய்வதும் எனக்கு விளங்கவேயில்லே. எனக்கு ஏதாவது தெரியாவிட்டால் முன்னெல் பாட்டியிடம் கேட்பேன். இப்போதெல்லாம் தாத்தாவிடம் தான் கேட்பேன். இதையும் தாத்தாவிடம் சொல்லிக் கேட்க வேண்டும் என்று தோன்றியது.

நான் போகும் போது தாத்தா ரொம்பச் சந்தோஷமாக இருந்தார். அவர் சந்தோஷமாக இருக்கும் போது எதைக் கேட்டாலும் 'டக் டக்' கென்று பதில் சொல்வார்.

நான் எதையும் நன்றாக ஞாபகத்தில் வைத்திருப்பேன். அத்தை, மாமா, அம்மா, அப்பா எல்லாரும் பேசிக் கொண்டதை அப்படியே தாத்தாவிடம் சொன்னேன்.

நான் சொல்லி வாய் மூடுமுன் தாத்தா படபடப்புடன் கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டார்.

''ராமு! அப்படியா சொன்னாங்க?'' என்று கேட்டார். அவர் உடம்பெல்லாம் நடுங்கியது.

''ஆமாம் தாத்தா அப்படியேதான் சொன்னாங்க'' என்றேன்.

''ராமு! எனக்கு நெஞ்சிலே என்னமோ செய்யறதுடா! என்னாலே தாங்கமுடியலேடா! ஐயோ! ஐயோ!'' என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு துடித்தார். எனக்குப் பயமாகப் போய் விட்டது. ''அம்மாவை அழைச்சிட்டு வரட்டுமா தாத்தா!'' என்று எழுந்தேன்.

தாத்தா என் கையைப் பிடித்துத் தடுத்துக் கொண்டு, ''வேண்டாம்டா! அந்தப் பாவிகள் ஒருத்தரும் என்னண்டை வரக்கூடாது. அவங்களைப் பார்க்காம என் உயிர் போயிடணும்'' என்றார்.

எனக்குத் தாங்க முடியவில்லே. 'அம்மா, அம்மா!' என்று சத்தம் போட்டுக் கத்தி விட்டேன்.

எல்லாரும் ஓடி வந்தார்கள். அவர்கள் வாசற் பக்கம் வந்ததும், ''டேய், ராமு! அவங்க யாரும் வரக் கூடாதுன்னு சொல்லு. ஒருத்தரும் என் கண்ணில் படக் கூடாது. போகச் சொல்லு'' என்று கத்திக் கொண்டே படுக்கையில் விழுந்து முகத்தைத் திருப்பிக் கொண்டார்.

'அப்பா!' என்று அலறினாள் அத்தை.

தாத்தா திரும்பிப் பார்க்காமல், ''ஒருத்தரும் என்னண்டை வரக் கூடாது. எனக்கு மகளுமில்லே. மகனுமில்லே. ஒருவருமில்லே!! போகச் சொல்லுடா ராமு! யாராவது வந்தால் உடனே என் உயிர் போய் விடும்'' என்று கோபமாகச் சொன்னார்.

எல்லாரும் ஒன்றும் புரியாமல் விழித்துக் கொண்டே வாசல் பக்கம் ஒதுங்கி நின்றார்கள்.

''எல்லாரும் போயிட்டாங்க தாத்தா!'' என்றேன். உடனே அவர் என்னை அணைத்துக் கொண்டு 'ஓ'வென்று சத்தம் போட்டு அழுது விட்டார். தாத்தா அழுததை முன்னெல் நான் பார்த்ததேயில்லே. எனக்கும் அழுகை வந்து விட்டது. அழுது விட்டேன்.

கொஞ்ச நேரம் இரண்டு பேரும் அழுது கொண்டிருந்தோம். தாத்தா ஏன் அழுதார் என்று எனக்குத் தெரியவில்லே.

தாத்தா என் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, ''நீ ஏன்டா அழறே? நான்தான் அழணும்'' என்றார்.

''நீ ஏன் தாத்தா அழணும்'' என்று கேட்டேன்.

''அறுபது வயசாகியும் நான் உலகத்தைத் தெரிஞ்சுக்கல்லேடா! பின்னே, பாசம் இதுகள் மட்டும் தான் உலகத்திலே இருக்குன்னு மூடத்தனமாக நினைத்துக் கொண்டிருந்து விட்டேன்டா!'' என்றார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லே. ''நீ ஏன் அப்படி நினைச்சே?'' என்று கேட்டேன். நான் அப்படிக் கேட்டதும் தாத்தா அசையாமல் உட்கார்ந்து விட்டார். கொஞ்ச நேரம் ஒன்றுமே பேசவில்லே; அழவுமில்லே.

திடீரென்று, ''ராமு, நீ இப்போ 'ஏன் நினைச்சே'ன்னு கேட்டியே அது சாதாரணக் கேள்வி இல்லேடா! தேவ வாக்கு! பகவான் உன் மூலம் என்னிடம் பேசி விட்டார். அவங்க ஒருத்தரும் தப்பு பண்ணலே. நான் தான் தப்பு செய்துட்டேன். உலகத்திலே அன்பு மட்டும்தான் இருக்கும்னு அளவுக்கு அதிகமா நினைச்சேன். அப்படி நினைச்சு ஏமாந்துட்டதால் மற்றவங்கமேல் கோபப்பட்டேன். உலகத்திலே அன்பும் பணமும் கலந்து தான் இருக்கும். அதுதான் லௌகீகம். ஒவ்வொன்றையும் நம்புகிற அளவுதான் நம்பணும். இது வரை அதைத் தெரியாமல் இருந்து விட்டேன். அப்படியொரு ஞானக் குறையோடு நான் செத்து விடக் கூடாதுன்னு கடைசியில் பகவான் உன் மூலம் எனக்கு ஞானோபதேசம் பண்ணி விட்டார். அவ்வளவுதான். எனக்கு இப்போ யார் மேலேயும் கோபமில்லே. அவங்களைக் கூப்பிடு'' என்றார்.

எல்லோரும் கட்டிலருகே வந்து நின்று கொண்டே அழுதார்கள்.

''ஏன் அழறீங்க! இப்போ ஒன்றும் நடக்கலே. இதுவரை உலகத்தைத் தெரியாமலிருந்த எனக்கு பகவான் லௌகீகத்தை, உணர்த்தி முழு மனுஷனாக்கி அழைத்துக் கொள்ளப் போகிறார். இப்போ ஒருத்தரும் அழக் கூடாது....ராமு, நீ உங்க பள்ளிக்கூடத்திலே பாடுவாயே, 'ரகுபதி ராகவ ராஜா ராம்'னு அதைப் பாடுடா!'' என்றார் தாத்தா.

அவர் சொன்னதொன்றும் எனக்குப் புரியவில்லே. ஆனால் அழுகை பொத்துக் கொண்டு வந்தது. அழுது கொண்டே, ''ரகுபதி ராகவ ராஜாராம், பதித பாவன சீதா ராம்'' என்று பாடினேன்.


தாத்தாவுக்கும் கண்ணீர் பொங்கி வந்தது. ஆனால் அவர் அழவில்லே. முகத்தில் சிரிப்போடேயே கையை உயர்த்திப் பகவானைக் கும்பிட்டுக் கொண்டிருந்தார். நான் பாடிக் கொண்டே யிருந்தேன். கொஞ்ச நேரம் கழித்து அவர் கைகள் கும்பிட்டபடியே இறங்கி அவர் நெஞ்சில் விழுந்து விட்டன.

சலிக்காமல் உழைப்பவர்கள் உபயோகிப்பது

நிவியா

பலவிதப் பயனுள்ள, இயற்கையழகைப் பாது காக்கும் இந்த கிரீம் சருமத்தை மிருதுவாக்கி, போஷிக்கிறது. மற்ற கிரீம்களாலாகாத காரியத்தைச் சாதிக்கிறது நிவியா—ஆம், களைப்புற்ற சருமத்துக்குத் தெம்பூட்டுகிறது. அதுமட்டுமா? உங்கள் சருமம் இளமைமாறு ஆரோக்கியத்துடனும், மிருதுவாகவும் இருக்க உதவுகிறது. குடும்பத்திலுள்ள ஆண், பெண், குழந்தைகள் யாவருக்குமே அதன் அரவணைப்பு மேன்மை தருகிறது.

சருமத்திற்கு நிச்சயமாக வேண்டுவது நிவியா.





பவழத் தீவு
கதை: வாண்டுமாமா
சித்திரம்: ரமணி..
காட்டுச் சிறுவன், கந்தன் தான் காப்பாற்றிய ஆனந்தனின் - கதைமுழுவதையும் அவன் வாய் மூலமாகவே கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறான். இருவரும் நண்பர்களாகி விடுகின்றனர்...
6
கந்தா, இதுதான் என் கதை. நீ காப்பாற்றி இருக்காவிட்டால் என் கதி என்ன ஆகி இருக்குமோ?
என்னைப் பற்றி எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டாயே. உன்னைப் பற்றி நீ ஏதுமே சொல்லவில்லையே?
என்னைப் பற்றிச் சொல்ல என்ன இருக்கிறது? இதோ இவை தான் என்னுடைய - உலகம், வாழ்வு, எல்லாமே!
இன்னும் இந்தக் கானகத்தில் எனக்கு எத்தனையோ தோழர்கள் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் உனக்கு அறிமுகப் படுத்தி வைக்கிறேன் வா....!
அதோ பார்த்தாயா, என் பேராசைக்கார- நண்பனை?


நிலவுக்குத் தேன் என்றால் உயிர். தேன் அடையுள்ள பொந்துக்குள்ளேயே தன் தலையை விட்டு விட்டான். தலையை எடுக்க முடியாமல் தவிக்கிறான்.
பாவம் அவனுக்கு உதவா விடில் தேனீக்கள் கொட்டித் தீர்த்து விடும்.
தேனீக்களை விரட்டச் செத்தைகளை ஒன்று கூட்டி......?
தீமூட்டித் தேனீக்களை விரட்டுகிறான் கந்தன்.
அசட்டுக் கரடியே, இப்படியா போய்த் தலையை நுழைப்பார்கள்? ம்..... கையை ஊன்றித் தலையை இழு!
அப்பாடா! தலை தப்பியது போ.....!
இனி இம்மாதிரிச் செய்யமாட்டாயே? புத்தி வந்ததா?


துஷ்டப் பயலே! வா.
உன் முகத்தைக் கழுவி
விடுகிறேன், இல்லா
விடில் தேனீக்கள்-
உன்னை மறுபடி
சூழ்ந்து கொண்டு
விடும்.
ஏன்...? முகத்
தைக் கழுவிக்
கொள்ள வரமாட்
டாயா?
உன்னை விடுவேனா?
ஆ! இப்போது பார்த்
தாயா? எத்தனை-
சுத்தமாக இருக்கிறாய்?
கந்தா, உன் நட்பு
எனக்குக் கிடைத்தது
என் பாக்கியம், என் தந்-
தையைக் கண்டு பிடிக்க
எனக்கு உதவ
வேண்டும்.
கவலைப் படாதே.
ஆனந்தா. இந்தத் தீவில்
உன் தந்தை எந்த மூலையி
லிருந்தாலும் என் தோழர்கள்
கண்டு பிடித்து வந்து
விடுவார்கள்.
இதோ இப்போதே.
இவர்களைத் தனித்
தனி நாலா திசைகளி
லும் சென்று செய்தி
சேகரித்து வருமாறு
அனுப்புகிறேன்.

ஸ்டேட் பாங்கிளிடம் ஏன் விசாரிக்கக் கூடாது?



அவர்கள் எனக்கு உதவக் கூடுமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?

அவர்களால் முடியுமென்பது நிச்சயம். உங்கள் உள்ளூர் கிளை ஆபீஸ் ஏஜென்டைச் சந்தியுங்கள். அவர் உங்களுக்கு அன்புடன் வேண்டிய விஷயம் அறிவிப்பவராயிருப்பதைக் காணுவீர்கள். உடனடியாக, பண்பு மிக்கத் திறமை வாய்ந்த சேவையை அவர் உங்களுக்கு அளிப்பார்.

அவர்கள் அளிக்கும் சேவைகள் யாவை?

சாதாரணமான பண லேவாதேவி சேவைகளைத் தவிர, உங்களுடைய முதலீடுகள் செய்யும் திட்டத்தில் உதவியும், நிதித் தேவைகளைப்பற்றிய விஷயத்தில் ஆலோசனையும், இந்த தேசத்திலும் மற்றும் வெளி நாடுகளிலும் புதிய வியாபாரத் தொடர்புகளை விருத்தி செய்து கொள்ளத் துணையும் நீங்கள் பெறுவீர்கள்

உண்மையாகவா?

ஆம். ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவிற்கு தேசமெங்கிலும் 900 க்கு மேற்பட்ட ஆபீஸ்கள் இருக்கின்றன. மேலும், அவர்களுக்கு பர்மா, பாகிஸ்தான், இலங்கை, இங்கிலாந்து இவ்விடங்களில் ஆபீஸ்களும் மற்றும் உலகமுற்றிலும் பண லேவாதேவி செயலுக்கான ஏஜென்டுகளும் உண்டு.

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவா?

ஆம். ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாதான்.



ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா

இந்தியாவின் தலை சிறந்த பாங்கு

TAM SISTA'S-58-51A

திருமூலர் தவமொழி

ராஜாஜி சோமு

44

இறைவனுடைய பேரின்பத்தை நாடி அந்த முயற்சியில் ஈடுபட்டால் படிப்படியாக "நான்" என்னும் நினைப்பு நீங்கி, எல்லாம் அவனே என்ற தெளிவு உண்டாகிறது. இந்த உணர்வு வலுவடையும் போது, உடம்பு என்ற தசை உணர்ச்சியும், தனிப்பட்ட உயிர் என்ற அகங்கார உணர்ச்சியும், நினைப்பு மறப்பு என்ற மன உணர்ச்சியும், அனைத்தும் அகன்று, தெய்வ ஆனந்த நிலையிலே எல்லாம் ஒன்றுபட்டு விடுகின்றன. இதுவே அநுபூதி நிலை என்பது. இதைச் சொல்லுகிறது திருமூலரின் பாடல்.

தானும் அழிந்து,
தனமும் அழிந்து, நீடு
ஊனும் அழிந்துஎன்
உயிரும் அழிந்து—

[தானும் அழிந்து — தான் என்கிற ஆணவம் அழிந்து. தனமும் அழிந்து — தன்னுடையது என்கிற பொருளைப் பற்றி நிற்கிற உணர்ச்சியும் நீங்கி. நீடு — பிறவியோடு வந்த. ஊனும் அழிந்து — உடலைத் தான் என்று எண்ணுகிற மாயை நீங்கி. உயிரும் அழிந்து—ஆன்மாவைப் பிணைத்துள்ள, தான் வேறு பிறர் வேறு பரமான்மா வேறு என்ற பேத நிலை, அகன்று.]

ஊனும் அழிந்து
உயிரும் அழிந்து, உடன்
வானும் அழிந்துஎன்
மனமும் அழிந்து—

[உடன் — இவைகளுடன். வானும் அழிந்து — வானம் முதலிய பஞ்சபூதத் தோற்றங்கள் அழிந்து; அதாவது, சிருஷ்டியும் இறைவனும் வேறு என்கிற குழப்பம் கழிந்து. மனம் அழிந்து — இந்திரியங்களை நடத்தும் அக இந்திரியமான மனம் (அதனில் தோன்றும் சங்கற்பங்கள்) நீங்கி.]

வானும் அழிந்து
மனமும் அழிந்து, பின்
நானும் அழிந்தமை
நான்அறி யேனே!

[நானும் அழிந்தமை — இந்தச் சங்கற்பங்களுடன், அகம் என்பது முற்றிலும் அழிந்து தீர்ந்துபோன நிலையை. நான் அறியேனே — எனது பிரக்ஞை இன்றியே இத்தனையும் நிகழ்ந்து விட்டன.]

இவை எல்லாம் நீங்கிய பின், 'நான்' என்கிற தனி நிலை தானாகவே அழிந்து போகும். ஆகவே இந்த நிகழ்ச்சியை அனுபவிப்பதற்குரிய ஆளாகிய "நானு"ம் கரைந்து ஒழிந்து போன படியால், 'பயனிலை' மட்டும் நிற்கிறது; அதற்கு 'எழுவாய்' இல்லை! ஆனந்தம் மட்டும் நிற்கிறது. ஆனந்திப்பவன் ஈசனைத் தவிர வேறு யாரும் இல்லை! இதுவே பிரும்மானந்த நிலை என்பது. இதைத்தான்,

" ஊன்கெட்டு உயிர்கெட்டு
உணர்வுகெட்டுஎன்
உள்ளமும்போய்
நான்கெட்ட வாபாடித்
தென்னேணம் கொட்டாமோ !"

என்று துள்ளிப் பாடுகிறார் மாணிக்க வாசகரும்!

தானும் அழிந்து
தனமும் அழிந்துநீடு
ஊனும் அழிந்தென்
உயிரும் அழிந்துடன்
வானும் அழிந்து
மனமும் அழிந்துபின்
நானும் அழிந்தமை
நானறி யேனே!

பரம்பொருளோடு ஆன்மா கலந்து போய், அந்த இரண்டற்ற ஆனந்தத் திலே இணைக்கும் நிலையை, எப்படி வார்த்தைகளால் வெளியிட்டுச் சொல்லுவது?

தான்வரைவு அற்றபின்
ஆரை வரைவது

[வரைவு — விருப்பம், வேட்கை. தான் வரைவு அற்றபின் — உள்ளமானது வேட்கை என்பதை ஒழித்த பின்பு. ஆரை வரைவது — யாரை விரும்புவது.]

தான்அவன் ஆனபின்
ஆரை நினைவது

உள்ளம் கடவுள் மயமாக ஆன பிறகு, நினைப்பது என்பது யாரை?

காமனை வென்றகண்
ஆரை உகப்பது

[காமனை வென்ற கண் — ஆசைகளைக் கடந்து வெற்றி கொண்ட கண்கள். ஆரை உகப்பது — யாரைப் பார்த்து மோகிப்பது.]

தூமொழி வாசகம்
சொல்லுமின் நீரே

[தூமொழி வாசகம் — தெளிவான விடையை. சொல்லுமின் நீரே — நீங்களே சொல்லுங்கள்.]

இறைவனை வரித்துக் கொண்டேன், இறைவனையே நினைக்கிறேன், இறைவனையே உகந்து மோகிக்கிறேன் என்றெல்லாம் சொல்லலாம். ஆனால் 'நான்' என்பது அற்றபின் இப்படிச் சொல்லுவதில் அர்த்தமில்லை. ஐம்புலனும் மனமும் இறைவனோடு ஒன்றி விட்ட பிறகு, வரைதல், நினைத்தல், உகத்தல் என்றெல்லாம் சொல்வதில் பொருளில்லை என்கிறார் முனிவர். அதாவது பேதமற்ற நிலையிலே ஒன்றி விட்ட அந்த ஆனந்த லயமே பாட்டின் கருத்து!

தான்வரை வற்றபின்
ஆரை வரைவது
தானவன் ஆனபின்
ஆரை நினைவது
காமனை வென்றகண்
ஆரை உகப்பது
தூமொழி வாசகம்
சொல்லுமின் நீரே!

இறைவனுடைய இலக்கணங்களை அப்படி இப்படி என்று எடுத்துச் சொல்லுகிற பண்டிதர்களை நோக்கிக் கேட்கிறார் முனிவர்:

உரையற்றது ஒன்றை
உரைசெய்யும் ஊமர்காள்!

[உரையற்ற தொன்றை — வர்ணனைக்கு அப்பாற்பட்ட பரம்பொருளை. உரை செய்யும் — வர்ணிக்கிற. ஊமர்காள் — ஊமை மனிதர்களே!]

இலக்கணம் கூற முடியாத பொருள், பரம்பொருள். அந்த உரையற்ற பரம்பொருளுக்கு உரை செய்கிறவர்களை ஊமையர்கள் என்கிறார் முனிவர். பயனற்ற தொழிலில் ஈடுபடுகிறவர்களை அப்படிச் செய்ய வேண்டாம் என்கிறார். பேசாமல் இருப்பதே நலம் என்கிறார். இதுவே ஊமையர்கள் என்பதன் கருத்து.

உரையற்ற தொன்றை
உரைசெய்யும் ஊமர்காள்!
கரையற்ற தொன்றைக்
கரைகாணல் ஆகுமோ!

கரையற்று நிற்கிற பெரும் வெள்ளத்துக்குக் கரை போட முடியுமா? முடியாது. பரசிவ வெள்ளம் அப்படிப் பட்டது. எனவே நாம் செய்ய வேண்டியது என்ன?

திரையற்ற நீர்போல்
சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான்
புரிசடை யோனே

[திரையற்ற நீர்போல் — அலைகள் இல்லாத தண்ணீர் போல். சிந்தை தெளிவார்க்கு — உள்ளம் தெளிவடைந்தவர்களுக்கு. புரையற்றிருந்தான் — குறைவில்லாமல் நிறைந்து அமர்ந்து கொள்ளுகிறான். புரிசடையோன் — சுருண்ட சடைகளையுடைய சிவபெருமான்.]


ஆராய்ச்சிகளை விட்டொழித்து, தெய்வ சிந்தனையிலே மனம் ஒன்றிய வாறு சலனமற்று இருந்தால், அந்தச் சித்தத்துக்குள்ளே பூரணமாக வந்து அமர்ந்து கொள்ளுகிறான் எம்பெருமான்! எனவே நாம் செய்ய வேண்டியது என்ன? உள்ளமானது ஆசா பாசங்களில் அலையாமல், திரையற்ற தண்ணீர் போலத் தெளிய வேண்டும் என்பது முனிவரின் உபதேசம்.

உரையற்ற தொன்றை
உரைசெய்யும் ஊமர்காள்
கரையற்ற தொன்றைக்
கரைகாணல் ஆகுமோ
திரையற்ற நீர்போல்
சிந்தை தெளிவார்க்குப்
புரையற் றிருந்தான்
புரிசடை யோனே!


காபி தயாராகிவிட்டதா?
காபி போர்டு
பெங்களூர்
திருப்தியளிக்கும் காபி
காலையில் எழுந்த வுடன் சூடாக ஒரு கப் காபி சாப்பிடுவதற்கு இணையானது வேறு ஒன்றுமில்லை. அது எத்தகைய புத்துணர்ச்சி யளிக்கிறது! தயாரிப்பதும் மிகச்சுலபம்.
• இன்றே சோதித்துப் பாருங்கள். காபி நம் சுறுசுறுப்பைத் தூண்டி விடுகிறது.
COFFEE BOARD
• "ஒவ்வொரு முறையும் தரமான காபி தயாரிப்பது எப்படி" என்ற எமது இலவச புத்தகத்திற்கு எழுதுங்கள்.
RDS/CB-1/TM



சென்னை நக்கீரர் கழகத்தினர் தங்கள் இருபத்தொன்றாம் ஆண்டு நிறைவு விழாவை முத்தமிழ் விழாவாகக் கொண்டாடினர். இவ்விழா பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில் ஸ்ரீமதி பெரியநாயகி சிதம்பரநாதன் தலைமையில் விமரிசையாக நடந்தது. ஆண்டு அறிக்கையைத் திரு சிறுவை. மோகனசுந்தரன் வாசித்தார். ஸ்ரீமதி பாரதி அம்மையார் 'இயற்றமிழ்' பற்றிச் சிறப்புரை வழங்கினர்; ஸ்ரீமதி இந்திரா சோமசுந்தரம் 'இசைத்தமிழ்' பற்றி அரிய உரை நிகழ்த்தினர். டாக்டர் தர்மாம்பாள் நினைவுக் கட்டுரைப் போட்டி, டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை நினைவுக் கவிதைப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு டாக்டர் ஆர். விசாலாட்சி நெடுஞ்செழியன் பரிசுகள் வழங்கினர்.



ஃ ஃ ஃ


மன்னார்குடி திரு சாம்பசிவன் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி சரஸ்வதிக்கும் திரு கே. சுந்தரராமனுக்கும் மயிலாப்பூரில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.

ஃ ஃ ஃ

பம்பாய்த் தமிழ்ச் சங்கப் பெண்மணிகள் பொங்கல் திருநாளன்று 'ஆசைக்கொரு பெண்' என்னும் நாடகத்தைச் சிறப்பாக நடித்தனர். வக்கீல் வேடம் பூண்டு நடித்த ஸ்ரீமதி லட்சுமி கண்ணனும், சிறந்த குணசித்திர நடிப்பை நல்கிய ஸ்ரீமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தியும், ஸ்ரீமதி பத்மா ஜகதீசம், வைத்தியமாக நடித்த குமாரி கமலாவும் கனபாடிகளாக நடித்த ஸ்ரீமதி கல்யாணி நரசிம்மனும் பாராட்டுக்குரியவர்கள். பம்பாய் ஹாப்கின்ஸ் இன்ஸ்டிட்யூட் நிர்வாகி டாக்டர் கணபதி இந் நாடகத்துக்குத் தலைமை வகித்தார்.



மனம்போனபடி



வடவெங்கடவன்

சரியான சொல்லா?

திருமதி என்ற ஒரு சொல் பல இடங்களில் கையாளப்பட்டு வருகிறது. ஸ்ரீமதி என்ற சம்ஸ்கிருத வார்த்தைக்குத் தமிழாம் இது! பத்திரிகைகளிலெல்லாம் இந்தச் சொல் அடிக்கடி வந்து கண்களை உறுத்துகிறது.

ஸ்ரீ என்பது ஸ்ரீமான் என்பதன் சுருக்கம் என்றால், அதே ஸ்ரீமதி என்பதற்கும் சுருக்கமாக இருக்கலாம்.

ஸ்ரீமானுக்குத் தமிழ் திருவாளராகும். அது 'திரு' என்பதாகக் குறுகி வழங்குகிறது. திரு என்பதையே திருவாட்டிக்கும் வைத்துக் கொள்ளலாம். பெண்பாலைக் குறிக்க வேண்டும் என்றால் முழுமையாகத் திருவாட்டி என்றுதான் சொல்ல வேண்டும். அப்படியின்றித் திருமதி என்பது பிசகு.

ஸ்ரீமான் என்பதைத் திருமான் என்போமா?

ஸ்ரீ ஐத் திரு என்று தமிழாக்கி, மதியை மட்டும் அப்படியே வைத்துக் கொள்வது மதியீனமாகும். திருமதி என்ற சொல் சம்ஸ்கிருதம் அல்ல, தமிழும் அல்ல.

ஆயினும் அடிக்கடி கையாளப்பட்டு வருவதால் நமக்குச் சரியான சொல்தானோ என்ற பிரமையை ஊட்டுகிறது.

இந்தத் திருமதி எப்படியிருக்கிறதென்றால்—,

வடநாட்டில் என் தாயார் என்னுடன் வந்து தங்கிய புதிதில் நடந்தது.

பால்காரன் வந்தான் — 'தூத்வாலா' என்று கூவிய வண்ணம். தூத்வாலா என்றால் பால்காரன் என்பது பொருள். என் தாயார் என்னிடம், ''பால்காரி என்பதற்கு என்ன சொல்ல வேண்டும்?'' என்று கேட்டாள்.

நான் குறும்பாகத் ''தூத்வாலாம்பாள்'' என்றேன். (சரியான பதில் 'ஆ' காரம் தமிழில் போல ஈகாரமாகி, 'தூத்வாலி' என்பதாகும்.)

தூத்வாலாம்பாள் மாதிரித்தானிருக்கிறது திருமதியும்.

என்ன பயனோ?

வாசலில் வந்து நோக்கினேன். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் அணி அணியாகச் சென்றனர். கையில் ஏந்தியிருந்தனர் என்னவோ எழுதிய அட்டைகளை. ஆசிரியர்கள் உயிரற்று உடன் நடந்தனர் இருமருங்கிலும். பெண் பிள்ளைகள், அவர்களுடைய ஆசிரியைகள் தொடர்ந்தனர்.

நல்ல நீண்ட ஊர்வலம்.

விஷயம் என்ன என்கிறீர்களா?

சிறு சேமிப்பு வாரம் கொண்டாடப்படுகிறது.

இது ஓர் அக்கிரமம்!

சிறு சேமிப்பு, பெரும் சேமிப்பு, வன விலங்கு, மரியாதை, சுகாதார வாரம் எதுவாக இருந்தாலும் பச்சிளம் பாலகர்களையெல்லாம் நடுத்தெருவில் அட்டையேந்திக் கத்தவிட்டு ஊர்வலம் விடுவது ஓர் இன்றியமையாத காட்சியாக ஆகி வருகிறது.

என் தந்தை மாவட்டக் கல்வி அதிகாரியாகப் பணியாற்றிய நாட்களில் மாவட்டக் கலெக்டரிடம் இதுபற்றிச் சண்டைக்கே போய் விட்டார்.

''உமக்கு மேலிடத்திலிருந்து ஏதாவது வாரம் கொண்டாட வேண்டும் என்று உத்தரவு வந்தால், உடனே என் பள்ளிக் குழந்தைகளும் அப்பாவி ஆரம்ப ஆசிரியர்களும் தாம் அகப்பட்டுக் கொண்டார்களா, உம் உத்தரவுக்கு உகந்தபடியெல்லாம் ஆட? அவர்களுக்கு வேறு வேலை இல்லையா? தீ விபத்துத் தடுப்பு வாரம் என்றால் அதற்கு ஏற்ற சுலோகங்கள், ஐந்தாண்டுத்திட்ட வாரம் என்றால் அதற்கு வேண்டிய கோஷங்கள். இப்படி நீர் வேண்டுகிறபடியெல்லாம் பொறித்த அட்டைகளைத் தயாரித்துக்





கொண்டு நீர் சொல்கிறபடியெல்லாம் கோஷித்துக் கொண்டு நடுத் தெருவில் — ஊர் நெடுக—சுற்றி வந்தால் நீர் வாரம் கொண்டாடியதாகக் கருத்தோ? ஏன், உம் கச்சேரி குமாஸ்தாக்களையும் தாசில்தார்களையும், டெபுடி கலெக்டர்களையும் ஊர்வலம் விட்டுப் பாருமேன். என் ஆசிரியர்கள் தாம் நீர் இழுத்த இழுப்புக்கெல்லாம் ஆட வேண்டுமா? நீரும் உம் சிப்பந்திகளும் கூட்டம் முடிந்ததும் முடியாததுமாகத் தத்தம் வாகனங்களில் ஹாரன் அடித்துக் கொண்டு நொடிப் போதில் மாயமாய் மறைந்து விடுவீர்கள். ஆசிரியர்கள் தத்தம் பிள்ளைகளை ஒருங்கு சேர்த்து, திரும்ப நடத்திச் சென்று, வீட்டுக்கு அனுப்பி வைக்க வேண்டும். எல்லாப் பிள்ளைகளும் போய்ச் சேர்ந்தார்களோ, இல்லையோ என்ற கவலையோடு இரவு தூங்கித் தூங்காமல், மறுநாள் பள்ளிக்கு உரிய நேரத்துக்கு வந்தாக வேண்டும். அப்படித்தானே?

இதில் இன்னொரு வயிற்றெரிச்சல், என் தந்தைக்கு என்ன வென்றால், இந்தக் கலெக்டர், மாவட்டப் போலீஸ் அதிகாரியின் வீட்டுப் பிள்ளைகளெல்லாம் ஊர்வலத்தில் வன விலங்குக்கும், கால் நடைக்கும் 'ஜே' போட்டுக் கொண்டு தெருவில் வரும் என்கிறீர்களா? அவர்கள் அநேகமாக எங்கோ கான்வென்டிலோ டேராடூன் பள்ளியிலோ படிப்பார்கள். இல்லாவிட்டாலும் 'அப்பா அப்பா' என்று கொஞ்சிக் கொண்டு தந்தையுடன் மோட்டாரில் வந்து விட்டு மேடையிலோ முன் வரிசையில் நாற்காலியிலோ உட்கார்ந்து விட்டு — தம் ஆசிரியர்கள் 'உஷ் உஷ்' என்று பிள்ளைகளைச் சமிக்ஞை செய்து கண்காணித்துக் கொண்டு நிற்பதைப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு, வந்த வழியே போய் விடுவார்கள்.

ஆசிரியனுக்கு என்ன மரியாதை? புத்தகங்களை அடுக்கி வைத்துப் பூப் போட்டுப் பூசை செய்கிற நாடுதான். என்ன பயன்?

உபசாரம் பலவிதம்


ஆட்டக்காரனுக்கு நடக்கிற உபசாரங்களைக் கண்டு நான் வியப்பில் ஆழ்வதுண்டு. பள்ளியிலேயே படிப்பில் முதல் வகை வருபவனுக்கு இத்தகைய உபசாரம் நடப்பதில்லையே என்று ஏங்குவதுண்டு. (நான் இப்படி எழுதுவதைப் பார்த்து விட்டு யாரும், 'சரி! இந்தப் பேர்வழி விளையாட்டுக்களில் சரியான சப்பை போலிருக்கிறது. நல்ல படிப்பாளி, வகுப்புக்களில் முதலாக வந்திருப்பான். அதனால்தான் இப்படி எழுதுகிறான்' என்று நினைக்க வேண்டாம். முன்னது மட்டும் உண்மை, அதாவது நான் விளையாட்டுக்களில் சப்பை; பின்னது உண்மையல்ல.) பந்தயங்களில் — வென்றவர்களுக்குப் பரிசுகள் வழங்குகிற காட்சியையும் படிப்பில் முதலாக வந்தோர்க்குப் பத்திரங்கள் வழங்குகிற காட்சியையும் நினைவுகூர்வோம்.

பெயரைக் கூவியதும், ஒயிலாக ஓடி வந்து வலுவில் சீமாட்டியின் கையையும் குலுக்கிப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பும் ஆட்டக்காரனுக்கு எத்தனை கைத்தட்டு; ஆரவாரம்! அடுத்தாற் போல் பெயரை அழைத்ததும் அடக்கமாகப் போய்க் கும்பிட்டு விட்டுப் புத்தகத்தையோ, பத்திரத்தையோ ஏற்றுக் கொண்டு, பொதுவாகத் தலைகுனிந்து கொண்டு அனாதை போல் வந்தமரும் வகுப்பு முதல்வனுக்கு என்ன, அடங்கிய கரகோஷம்! சில சமயங்களில் ஓரங்களிலிருந்து சீழ்க்கையடித்துக் கேலி கூடச் செய்து விடுவர் படிப்பாளியை மந்த மாணவர்கள்!



இந்தக் கேலிக் கூட்டத்தினர் கேடயம் பெற்றுக் கொண்டு வரும் ஆட்டக்காரனைத் தம் மீதேற்றிக் கொண்டு எத்தனை கொம்மாளம் அடிப்பார்கள், தெரியுமா?

பாவம், படிப்பாளி என்று தான் சொல்லத் தோன்றுகிறது.





6. ஓவியத் தந்தை

திருநெல்வேலியிலிருந்து சென்னைக்குச் செல்கிற ரயில் வண்டி வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. தமக்கென்று பிரத்தியேகமாய்ப் பதிவு செய்யப்பட்ட முதலாவது வகுப்புப் பெட்டியில் ஜமீந்தார் கண்களை மூடிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

முதலாவது வகுப்பை மிகவும் கஷ்டப்பட்டு இரண்டாவது வகுப்பாக மாற்றி, பிறகு அதிலிருந்து மெத்தைகளைப் பிய்த்துவிட்டு, அதையே இன்டர் கிளாஸாக மாற்றி, பின்னர் மறுபடியும் மெத்தைகளைத் தைத்து அதையே முதலாவது வகுப்பாகப் புனர்ஜன்மம் எடுக்கச் செய்த அந்த அவதார வேதனைகள் எல்லாம் இல்லாத பழங்காலத்து வண்டி அது! முதலாவது வகுப்பாகவே பிறந்து, முதலாவது வகுப்பாகவே வளர்ந்து, முதலாவது வகுப்பாகவே ஓடிக் கொண்டிருந்த முதலாவது வகுப்பு அது!! அந்தக் காலத்தில் அதற்கு இருந்த கௌரவம் இப்படி அப்படியா! அப்படிப்பட்ட ஒரு பெட்டியிலே தமக்கு என்று ஓர் அறை முழுவதையும் ஒதுக்கிக் கொண்டு, திண்டுகள் மெத்தைகள், சாய்மானங்களோடு செல்கிறார் ஜமீந்தார்! ஆனாலும், இத்தனை வசதிகளுக்கு மத்தியிலும் கூட—

அவருக்குத் தூக்கம் வரவில்லை! செண்பகநாயகி கோவிலும், செண்பக வனமும், அவருடைய கண்ணைவிட்டு அகலாமல் அப்படியே சுழன்று சுழன்று வந்து கொண்டிருந்தன! சித்திரங்களைப் பார்த்துவிட்டு, அவற்றின் இன்ப



நந்தவனம்

மயக்கத்தில் இதயம் நிலைத்து நின்ற அந்தத் தருணத்தில், திடீரென்று குதிரையிலே பறந்து வந்தானே பொன்னுத்துரை, அவனுடைய அந்த வருகையும், அதைத் தொடர்ந்து நடந்த பேச்சு வார்த்தைகளும், ஜமீந்தாருடைய கண்ணிலும் செவியிலும் மீண்டும் மீண்டும் எழுந்து வந்தன! 'சர்க்கரைப் பொங்கலும் ஊறுகாயுமா!' என்று சொல்லியவாறு தமக்குத் தாமே புன்முறுவல் செய்து கொண்டார் அனவரத புவனபதி!

அப்படி என்ன நடந்தது அன்று?

ஃ ஃ ஃ

"செல்வி! பொன்னுத்துரை அல்லவா வருகிறான்!" என்று வியப்போடு கூறினார் ஜமீந்தார் மகளைப் பார்த்து! சித்திரங்களிலும் அவற்றின் வண்ணக் கற்பனைகளிலும் இதுவரையில் பின்னி இழைந்து கொண்டிருந்த தன் சிந்தனையை உதறிக் கொண்டு, இந்த நிலவுலகுக்கு வந்தாள் செல்வி! "என்ன சொல்லுகிறீர்கள் அப்பா?" என்று கேட்டாள்.


"பொன்னுத்துரை வருகிறானே அம்மா!" என்றார் கவலையோடு! முன்பெல்லாம் பொன்னுத்துரை வருகிறார் என்றால் தந்தையின் குரலில் எத்தனை உற்சாகம் துள்ளும்! ஆனால் இப்பொழுதோ? அவருடைய குரலில் எல்லையற்ற சோகம் பெருகி நின்றது.

இருவரும் கோவிலுக்குள் நடந்தார்கள். திண்ணையில் அவர்களுக்காக ஒருபெரிய ஜமக்காளம் விரிக்கப்பட்டிருந்தது. அதில் வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

"மாமா! சேவிக்கிறேன்!" என்று சொல்லிக் கொண்டே வந்தான் பொன்னுத்துரை, ஏலமலை இளைய ஜமீந்தார்! செல்வியைப் பார்த்ததும் ஒரு வட்ட



சோமு



மான முழுச் சிரிப்பு அவனுடைய முகம் முழுதும் ஓடியது!

"என்ன மாமா! இப்படிச் சொல்லாமல் கொள்ளாமல் திடீரென்று செண்பகக் காட்டுக்கு வந்தீர்கள்? நேற்று எனக்குத் தகவல் அனுப்பி யிருந்தால் எத்தனை ஏற்பாடுகள் செய்திருப்பேன்! கோவில் மடப்பள்ளியில் சர்க்கரைப் பொங்கலும் புளியோதரையும் போடும்படி சொல்லி யிருப்பேனே! செல்வி, இந்தக் கோவில் பட்டர் சர்க்கரைப் பொங்கல் போட்டாரானால் அதை நாள் முழுதும் சாப்பிட்டுக் கொண்டே இருக்கலாம்! தொட்டுக் கொள்வதற்கு ஊறுகாயும் கொடுத்து விட்டாரானால் போதும்! நாலு படிப் பொங்கலானாலும் இருந்த இருப்பிலேயே தீர்த்துக் கட்டி விடலாம்!"

இவ்வாறு உற்சாகமாகச் சொன்னான் பொன்னுத்துரை! சிரித்துக் கொண்டே செல்வி கேட்டாள்.

"என்ன சொல்லுகிறீர்கள் அத்தான்! சர்க்கரைப் பொங்கலுக்கு ஊறுகாயா?"

"ஆமாம். நார்த்தங்காய் ஊறுகாய். அந்த ஊறுகாயும் புதினாத்துகையலும்!" என்றான் பொன்னுத்துரை, நாக்கில் தண்ணீர் சொட்ட! தாமரைச் செல்வி சிரிப்பை அடக்கிக் கொண்டாள்!

'இந்த இரண்டு குழந்தைகளுடைய ருசியிலும் எத்தனை வித்தியாசம்!' என்று எண்ணியவாறு, ஜமீந்தார் மௌனமாக இருந்தார்!

'இதுவரை நானும் இப்படித்தான் ஒரு யோசனை செய்து கொண்டிருந்தேன். சர்க்கரைப் பொங்கலோடு ஊறுகாயை இணைப்பதற்குத்தான் திட்டமிட்டிருந்தேன்! எத்தனை பைத்தியக்காரத்தனம் அது!' என்று மனத்துக்குள் சொல்லிக் கொண்டே பொன்னுத்துரையைப் பார்த்து ஜமீந்தார் கூறினார்:

"பொன்னு! இங்கே வர வேண்டும் என்று திட்டமில்லை. திடீரென்றுதான் புறப்பட்டேன்!"

"ஏன் மாமா அப்படி?"

"ஒரு முக்கிய வேலையாகச் சென்னைக்குப் போகிறேன். அதற்கு முன்பு இங்கே வந்து அம்பாளுக்கு அபிஷேகம் செய்து விட்டுப் புறப்படலாமே என்று நினைத்தேன் —"

"மாமா! நானும் ஒரு மாதமாக உங்களை இங்கே அழைத்து வரவேண்டும் என்று தான் திட்டம் போட்டுக் கொண்டே யிருக்கிறேன். கடைசியில்-"

"ஏன்? என்ன விஷயம்?"

"இந்தச் சுற்றுச் சுவர்களையெல்லாம் பார்த்தீர்களா மாமா? செவப்பும், பச்சையும், நீலமுமாகப் பொருக்குப் பொருக்காய் உதிர்ந்து கிடக்கிறது! இதையெல்லாம் பூசி மெழுகி விட்டு ஒரு கோல்டன் ஆரஞ்சு அல்லது ஸில்வர் க்ரேயில்—"

"எந்தச் சுவர்களைச் சொல்லுகிறீர்கள் அத்தான்?" என்று பேச்சை இடைமறித்தாள் செல்வி.

"இந்தக் கோயிலின் சுவர்களைத்தான் சொல்லுகிறேன். ஏதேதோ அந்தக் காலத்து 'ஓல்ட் பாஷனில்' என்னென்னவோ பொம்மைகளை வரைந்து வைத்திருக்கிறார்கள்! அவர்களைக் குற்றம் சொல்வதில் அர்த்தமில்லை. அந்தக் காலத்தில் அவர்களுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்!" என்று தீர்மானத்தோடு சொன்னான் பொன்னுத்துரை.

செல்வி அப்பாவைப் பார்த்தாள். அப்பா பொன்னுத்துரையைப் பார்த்தார். பொன்னுத்துரையோ என்றால் கோவிற்சுவர்களையே பார்த்துக்கொண்டு மேலும் பேசினான்:

"இதையெல்லாம் நன்றாகக் கொத்தி விட்டு, மேலே ஒரு சுண்ணாம்புக் கோட்டிங் கொடுத்து, அதற்கு மேலே ஒரு ஆயில் கோட்டிங் கொடுத்து, அதற்கு மேல் ஒரு மஹோகனி பினிஷ் கொடுத்து விட்டால் இன்னும் நேர்த்தியாக இருக்குமே என்று ......"

"பொன்னுத்துரை!" என்று குறுக்கே பேச ஆரம்பித்தார் அனவரதர்.

"பொன்னுத்துரை, இந்தச் சுவர்களையும், இவற்றிலுள்ள வர்ணங்களையும் புதுப்பிக்க வேண்டுமென்பது சம்பந்தமாக, நான் சில முடிவுகள் செய்திருக்கிறேன். உனக்கு அது பற்றிக் கவலையே வேண்டாம். இந்த ஆண்டுத் திருவிழாவுக்கு, நானே இந்தச் செண்பகக் காட்டில் ஒரு வாரம் முகாம் போடலாம் என்று எண்ணியிருக்கிறேன்!"

இப்படிச் சொன்னார் அனவரத புவனபதி. ஏலமலை இளைய ஜமீந்தாரின் முகம் குழம்பியது.

"மாமா, இதற்காக நீங்களே வந்து இங்கு 'காம்ப்' போட வேண்டுமா? ஒரு வார்த்தை சொன்னால் அப்படியே —"

"பொன்னுத்துரை, இது சம்பந்தமாக நான் விரிவான திட்டங்கள் செய்திருக்கிறேன். அவற்றையெல்லாம் பற்றி இன்னொரு நாள் விவரமாகப் பேசிக் கொள்வோம். நாங்கள் இங்கே வந்து நீண்டநேரம் ஆகிவிட்டது. அதனால்..."

இவ்வாறு சொல்லிக் கொண்டே திண்ணையிலிருந்து எழுந்தார் ஜமீந்தார். பொன்னுத்துரையின் முகத்தில் கவிந்த பரிதாபமான குழப்பங்களைக் கண்டு தாமரைச் செல்விக்குக் கஷ்டமாக இருந்தது. இத்தனை தூரம் அப்பாவின் மனம் மாறி விட்டதே என்று அவளுக்



பக்கத்திலே நானிருக்க,
பறந்துசெல்வீர்
பி.ஓ.ஏ.ஸி.ரோல்ஸ்-ராய்ஸ்
மற்றும் காமெட்
ஜெட்லைனர் மூலம்
தவணை முறைப்படி டிக்கட் வழங்கும் பி ஓ ஏ ஸி திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
பயணம் முந்தி-பணம் பிந்தி!
B·O·A·C
உலகம் முழுவதும் பி. ஓ. ஏ. ஸி. உங்களை நன்கு பேணுகிறது

குப் பொன்னுத்துரையிடம் அனுதாபம் உண்டாயிற்று. நிலைமையைச் சமாளிப்பது போல் அவன் சொன்னான்:

''அத்தான்! நீங்கள் குதிரையில் வந்திருக்கிறீர்கள். சாட்டையை ஒரு சுண்டுச் சுண்டினால் மூடி முழிக்கும் நேரத்தில் ஏலமலையிலே போய்த்தான் நிற்கும் உங்கள் குதிரை! ஆனால் நாங்கள் வண்டியில்தானே வந்திருக்கிறோம். இப்பொழுதே புறப்பட்டால்தான் ஊர் போய்ச் சேரச் சரியாக இருக்கும்!''

செல்வி இந்த வார்த்தைகளைச் சொன்னதும் பொன்னுத்துரையின் முகம் மலர்ந்தது! தன்னுடைய குதிரையினிடத்தில் அவனுக்கு அத்தனை பிரியம்; அது போலவே தாமரைச் செல்வியின் வார்த்தைகளிலும்! அந்த எல்லையற்ற பிரியம் ஒரு கணத்தில் அத்தனை குழப்பங்களையும் இருந்த இடம் தெரியாமல் மறைத்து விட்டது! இதைக் கவனித்தாள் செல்வி! அவளுடைய மனம் குழம்பியது. 'இத்தனை பிரியமும் வினை பிரியந்தானே! இத்தனை வாஞ்சைக்கும் ஏமாற்றந்தானே பரிசாகக் கிடைக்கப் போகிறது!' என்று எண்ணிப் பார்த்தாள் தாமரைச் செல்வி!

''சரி மாமா! நீங்கள் புறப்படுங்கள். நான் அப்படியே அருவியிலே போய்க் கொஞ்சம் தலையைக் கொடுக்கிறேன். மடப்பள்ளி ஊறுகாய்க்கும் கொஞ்சம் வேலை வைக்கிறேன்!''

இவ்வாறு சொல்லி விட்டு நடந்தான் பொன்னுத்துரை!

ஃ ஃ ஃ

ரயில் வண்டி வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. 'குதிரைச் சவாரி, சர்க்கரைப் பொங்கல், ஊறுகாய்' என்று ஒரு பல்லவியை மீண்டும் மீண்டும் பாடிக்கொண்டே ரயில் வண்டிச் சக்கரங்கள் சுழன்றோடுவது போல் ஜமீந்தாரின் செவிகளிலே ஒலித்தது!

இரவு முழுதும் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டே, எழும்பூரில் வந்து இறங்கினார் அனவரத புவனபதி!

சென்னையில் சிங்கம்புத்தூர் ஜமீந்தார்களுக்குத் தனியான செல்வாக்கு நிலவி வந்த காலம் அது! 'ஹைகோர்ட்'டும் அப்பீல்களுமாகச் சேர்ந்து அந்தச் செல்வாக்கை மேலும் அதிகமாக உயர்த்தியிருந்தன. இதெல்லாம் அனவரத புவனபதியின் மனப் போக்குக்கு அவ்வளவாக ஒத்துவராத காரியங்கள்தான். என்றாலும் குதிரையிலே ஏறி விட்டால் சவுக்கைப் பிடித்துத்தான் ஆக வேண்டும் என்ற நியதிக்கு ஏற்ப, அவருடைய வாழ்க்கைச் சவாரி நடந்து வந்தது. ஆனால் மனைவி நோயும் படுக்கையுமாக ஆனதிலிருந்து, அவர் சென்னைக்கு அடிக்கடி வருவதில்லை. ''அபிடவிட்டு''களிலே கையெழுத்துப் போட்டு அனுப்பி விடுவதோடு அவருடைய பொறுப்புத்தீர்ந்தது என்றுதான் இருந்தார் இதுவரை! ஆனால் இன்று அப்படியா? இன்றைக்கு அவர் வந்திருப்பது ஹைகோர்ட் அப்பீலுக்காகவா? இல்லையே!

பிளாட்பாரத்தில் அடியெடுத்து வைத்ததும் அனவரத புவனபதி திகைத்து நின்றார். தம்முடைய 'காஸ்மாபாலிடன் க்ளப்' நண்பர்கள் பலர், நீண்ட நாளைக்குப் பிறகு தாம் சென்னைக்கு வருவதை எதிர்நோக்கிப் பூமாலையும் கையுமாக நின்று கொண்டிருந்ததைப் பார்த்தார்! பதினாறு ஆண்டுகளுக்கு முந்திய அவருடைய பழைய சென்னை விஜயங்கள் எல்லாம் ஒரு விநாடி மனக் கண்ணிலே ஓடின!

அந்தக் காலத்தில் சென்னைக்கு ஒரு முறை விஜயம் செய்வது என்றால், அது எத்தகைய மகத்தான அனுபவம்! 'காஸ்மாபாலிடன் க்ளப்'பில் அங்கத்தினராகச் சேர்வது என்றால் 'சாமானியமா?' 'ப்ரீமேசன்' என்று சொல்லிக் கொள்வதில் தான் அவருக்கு அந்தக் காலத்தில் எத்தனை பெரிய குதூகலம்! ஆகா! அத்தனை நினைவுகளும் ஜமீந்தாருடைய மனத்தில் ஒரு சுழல் சுழன்றன! விருந்துகள், களியாட்டங்கள், கவர்னர் மாளிகையிலே கேளிக்கைகள், ராவ்பகதூர், திவான் பகதூர் முதலிய பட்டங்களுக்கான போட்டிகள், குதி





ரைப் பந்தயங்கள், ஆங்கிலத் துரை மார்கள், சீமாட்டிகள், அவர்களுடைய பட்லர்கள், விதம் விதமான நாய்க் குட்டிகள் — இப்படி நூறு நூறு காட்சிகள் ஜமீந்தாரின் கண் முன் தெரிந்தன! கைக்குட்டையை எடுத்துக் கண்களைத் துடைத்து விட்டுக்கொண்டார் அனவரதர்!

சென்னைப்பட்டினத்தின் சிங்காரபுரியாகிய அடையாறு வட்டத்தில், கடல் அலைகளை ஒரு கையாலும், அந்தப் புகழ் பெற்ற வாய்க்காலை மற்றொரு கையாலும் அணைத்துக் கொண்டு நிற்கிற அடர்த்தியான ஒரு முக்கோணச் சோலையின் நடுவே நின்றது சிங்கம்புத்தூர் பங்களா! காரிலிருந்து இறங்கி நேரே மாளிகைக்குள்ளே சென்ற ஜமீந்தாரின் முகத்தில் பழைய பரபரப்பு இல்லை. இனம் தெரியாத ஓர் ஏக்கம் தெளிந்தது. கண்களிலே பழைய சிவப்பு இல்லை. இரவெல்லாம் சிந்தனைகளிலே சுழன்ற களைப்புத்தான் படர்ந்திருந்தது. இதைச் சிப்பந்திகள் எல்லாரும் கவனித்தார்கள்.

ஜமீந்தார் வருகிறார் என்றால், அவரோடு எத்தனை பரிவாரங்கள் வரும்? வெந்நீர் போடுவதற்கு, மேல் பிடித்து விடுவதற்கு, தலையைத் துவட்டுவதற்கு, எண்ணெய் தடவுவதற்கு, சீவிச் சிங்காரிப்பதற்கு, பூட்ஸ் துடைப்பதற்கு, தடிக்கம்பை எடுத்துக் கொடுப்பதற்கு — அத்தனை பேரும் இன்று எங்கே போனார்கள்? சிங்கம்புத்தூரிலிருந்து ஏன் இப்படித் தன்னந்தனியே எதையோ பறி கொடுத்தவர் போல் திடீரென்று வரவேண்டும் ஜமீந்தார்?

நண்பர்கள், உறவினர்கள், அக்கம் பக்கத்தார்கள் எல்லாரும் குழம்பிக் குழம்பி யோசனை செய்து கொண்டேயிருந்தார்கள். வெறுங்காரோடு டிரை

வர் மட்டும் தனியாக அடிக்கடி வெளியே போவதும் வருவதுமாக இருந்ததைக் கண்டு, எல்லாருக்கும் குழப்பம் அதிகரித்தது. கடைசியில் அன்று பிற்பகல் நான்கு மணிக்கு ஜமீந்தாரின் காரில் அந்தத் தாடிக்காரர் வந்து இறங்கிய பிறகுதான் சிப்பந்திகளுக்கு ஒரு வகையாக விஷயம் புரிந்தது!

"நம்முடைய ஜமீந்தாருக்கு அந்தக் காலத்தில் சித்திரங்களில் ஒரு மோகம் உண்டு. இவருடைய தகப்பனாருக்கு இவரைவிட அதிக மோகம். கொஞ்ச நாட்களாக இதெல்லாம் ஓய்ந்திருந்தது. இப்பொழுது மறுபடியும் ஆரம்பித்திருப்பது போல் தோன்றுகிறது!" என்று பங்களாவின் மேற்பார்வையாளர்கள் பேசிக் கொண்டார்கள். சித்திரக்காரர் காரில் வந்து இறங்கிய சற்று நேரத்துக்கெல்லாம், ஜமீந்தாரும் அவரும் சோலையிலே நடந்துகொண்டே பங்களாவின் பின்புற மதிலுக்கு அப்பால் நின்ற அழகான படிக்கட்டுகளைக் கடந்து சென்று, அதற்கு அருகில், கடற்கரையிலே கட்டப்பட்டிருந்த 'ஸிமெண்ட்' பெஞ்சிலே போய் உட்கார்ந்ததும் ஏதோ ஒரு முக்கிய ஆலோசனை நடக்கிறது என்று ஊகிக்கலானார்கள்!

மனித சஞ்சாரமில்லாத அந்த ஒதுக்கமான கடற்கரையின் நிம்மதியான சூழலிலே ஜமீந்தார் பேச ஆரம்பித்தார்:

"சிவகாமிநாதன்! என்னுடைய தகப்பனார் காலத்திலேயே நிறைவேறியிருக்க வேண்டிய ஓர் இலட்சியக் கனவு இது! என் காலத்திலாவது இது நிறைவேறி விட வேண்டும் என்று எண்ணுகிறேன். உங்களுடைய வாழ்விலும் ஒரு நிலையான காரியத்தைச் செய்த திருப்தி உங்களுக்கு இருக்கும்!"

இவ்வாறு கூறினார் அனவரதர். சிவகாமிநாதன் தமது தாடியைக் கோதிவிட்டுக் கொண்டே சொல்வார்:


"உண்மைதான். நீங்கள் சொல்வதிலுள்ள உணர்ச்சியும் ஆர்வமும் எனக்கு நன்றாகப் புரிகிறது. ஆனால் இத்தனை வயதுக்குப் பிறகு நான் இப்படி ஒரு பொறுப்பை மேற்கொள்வது இயலாத காரியம். கண் பார்வை சரியாக இல்லை. முன்னைப்போல் நுட்பமான வேலைகளில் ஈடுபட முடிகிறதில்லை. ஆனால் அதே சமயம் இப்படி ஒரு வாய்ப்பு எளிதில் கிடைக்கக் கூடியதில்லையே என்பதையும் உணர்கிறேன். என்னுடைய வயது பத்து ஆண்டுகள் குறையக் கூடாதா என்று ஒரு தவிப்பு உண்டாகிறது! அதனால்தான் இத்தனை தயக்கம்! இல்லையென்றால் நீங்கள் கொடுத்தனுப்பிய கடிதத்துக்குக் காலையிலேயே உடனே புறப்பட்டு வந்திருக்கமாட்டேனா? நிலையான காரியம் எதுவும் செய்யாமல்தான் என்னுடைய வாழ்க்கை முடியப் போகிறது என்பது எனக்கு நன்றாகத் தெரிகிறது. என்றாலும் இறைவனுடைய சித்தம் அப்படி இருக்கும் போது நம்மால் செய்யக் கூடியது என்ன உண்டு?"

இப்படிச் சொன்னார் ஓவிய ஆசிரியர். சற்று நேரம் மௌனம் நிலவியது. புருவங்களை நெரித்துக் கொண்டே ஜமீந்தார் சொல்லுவார்:

"சிவகாமிநாதன்! என் வாழ்க்கையில் இதுவரை எந்த ஒரு காரியத்துக்காகவும் இவ்வளவு தூரம் நான் கவலைப்பட்டதில்லை. திடீரென்று தோன்றிய ஓர் எண்ணம் இது! அதனால் கவலையும் திடீரென்று வந்து உள்ளத்தைத் தாக்குகிறது. நம் இருவருடைய வாழ்வும் இப்படிப்பட்ட ஒரு முயற்சியிலேயே முடிவதானாலுங்கூட, இந்த வயதில் நமக்கு இதைவிடத் திருப்தியான மனநிலை வேறு என்ன உண்டு? நன்றாக யோசித்துப் பாருங்கள்!"

உள்ளமும் குரலும் உருகியவராய் ஜமீந்தார் இப்படிச் சொன்னதும், சிவகாமிநாதன் கண் இமைகளை மூடினார். மூடிக் கொண்டே சொன்னார்:

"வாழ்க்கையில் நான் செய்து முடிக்காத பல பணிகள் அரைகுறையாகவும் வெறும் கனவுகளாகவுமே நிற்கின்றன. அவற்றுக்காக இதுவரை நான் கவலைப்பட்டதில்லை. காரணம், எந்த ஏக்கத்தின் மத்தியிலும் எனக்கு ஒரு சிறு நம்பிக்கை உண்டு. நான் விட்டுப் போகிற முயற்சிகளையும், என்னுடைய அரைகுறையான பணிகளையும், பூரணமாக முடித்து நிறுத்தக் கூடிய இரண்டொரு மாணவர்களை எனக்கு இறைவன் தந்திருக்கிறான். வயோதிகத்தின் தளர்ச்சிக்கு மத்தியில், பலவீனமான என்னுடைய இதயத்துக்கு ஊக்கம் தருவது, இந்த ஓர் எண்ணந்தான்! ஆனால் உங்களுடைய மன நிலையைத் தெரிந்து கொண்ட பிறகு, உங்களுடைய இதயத்தின் இந்த ஆற்றாமையைக் கேட்ட பிறகு, என் உள்ளத்தில் இப்பொழுது ஒரு புதிய கவலை முளைத்து விட்டது. இவ்வளவு பெரிய ஒரு பொறுப்பை, இவ்வளவு மகத்தான ஒரு தெய்வத் திருப்பணியை, முதிராத இளைஞர்களிடம் ஒப்படைக்கக் கூடிய உறுதி எனக்கு இல்லை. என்னுடைய மாணவர்களிடம் எனக்கு எத்தனையோ நம்பிக்கை இருந்த போதிலும், இந்தப் பெரும் பொறுப்பை யாரிடமும் தூக்கி வைப்பதற்கு என் மனம் இடம் தரவில்லை. இன்று காலையில் நீங்கள் கொடுத்தனுப்பிய கடிதத்





தைப் பார்த்ததிலிருந்து ஏதோ ஒரு விசித்திரமான பயம், ஏதோ ஒரு குழப்பம், எனக்கே புரியாத ஒரு தடுமாற்றம் என்னை வேதனை செய்கிறது. அதனால் தான் சொல்லுகிறேன், என்னை நீங்கள் மன்னித்துவிட வேண்டும்!''

சிவகாமிநாதன் கண் இமைகளைத் திறக்காமலேயே இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்தார். அவரையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த ஜமீந்தாருக்குக் கண் கலங்கியது. அந்தக் கலங்கிய கண்களுக்கு முன்னால் மகள் வந்து நின்றாள் — தாமரைச் செல்வி! அவருடைய செவியிலே செல்வியின் குரல் கேட்டது. ''அப்பா!'' என்று அழைத்துக் கொண்டே வந்தாள், அவருக்கு அருகிலே, அவருடைய மன உலகிலே! ஜமீந்தாரின் கண்கள் இரண்டும் நிலைகலங்கி நின்றன.



''ஜமீந்தார் அவர்களே! காரணம் தெரியாத ஒரு பயம், இன்னதென்று புரியாத ஓர் அச்சம், என்னை வேதனைப் படுத்துகிறது. ஆனால் இதையும் மீறித் தங்கள் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற ஒரு துடிப்பும் இருக்கிறது. உங்களுடைய கண்கள் கலங்கலாமா? நீங்கள் உங்களுடைய முன்னோர்களின் கனவை நனவாக்க இத்தனை தூரம் முனைந்து நிற்கும் போது, உங்களுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டிய நான், உங்களோடு சேர்ந்து முனைந்து நிற்கவேண்டிய நான், இப்படியெல்லாம் விபரீதமாகத்தயங்குகிறேனே என்று அவமானப்படுகிறேன்!''

இருவரும் மீண்டும் மௌனமாக இருந்தார்கள். சிவகாமிநாதன் கண்களை மூடியவாறு நீண்ட நேரம் யோசனையில் இருந்தார்! அந்த மௌனத்தைக் கலைத்துக் கொண்டே அனவரதபுவனபதி பேசினார்:

''தமிழ்நாட்டுமக்களுடையபரம்பரைக் கலையான ஓவியக் கலையை, குகைகளிலும் கோவிற் சுவர்களிலுமாக வளர்த்து வந்த ஓவியக் கலையை, இன்று நாடு முழுதுமே மறந்து நிற்கிறது. எப்பொழுதோ ஒரு காலத்தில் இந்தக் கலைப் பரம்பரையிலே ஒரு முறிவு ஏற்பட்டு, அந்த முறிவிலிருந்து இன்னும் நாம் எழுந்திருக்கவில்லை! இந்த நிலையில் நம் நாட்டுக் கோவில்களிலே சுண்ணாம்பு பூசியும், சாயங்கள் அடித்தும் அவற்றை இருந்த இடம் தெரியாமல் மெழுகித் தீர்த்து விட்டார்கள்! நாம் இருவரும் இன்று இப்படி விரக்தியோடு பிரிந்தோமானால், பிறகு எந்தக் காலத்தில் யார் வந்து இவற்றை யெல்லாம்.....''

ஜமீந்தார் வார்த்தைகளை முழுதும் முடிக்க முடியாமல் தயங்கி நின்றார். சிவகாமிநாதன் அந்தத் தவிப்பைப் புரிந்து கொண்டவராக மறுமொழி பேசினார்:

''இது ஏதோ சுவர்களைப் புதுப்பிக்கிற ஒரு சிறு முயற்சியில்லை. இந்தப் பணியின் பின்னணியிலே இரண்டு மகத்தான பரம்பரைகளின் ஆசைகள் ஓடுகின்றன. ஒன்று கலையை ஆக்குகிற பரம்பரை, மற்றொன்று அதை வளர்க்கிற பரம்பரை. ஒன்று கலைஞர்களின் மரபு. மற்றொன்று வள்ளல்களின் மரபு. ஒன்று என்னுடைய முன்னோர்களின் குலம். மற்றொன்று உங்களுடைய முன்னோர்களின் குலம். ஒன்று நான். மற்றொன்று நீங்கள். ஒன்று நானும் என்னுடைய சந்ததியும். மற்றொன்று நீங்களும் உங்களுடைய சந்ததியும் — ''

சிவகாமிநாதன் ஏதோ ஒரு கனவிலிருந்து விழித்தவர் போல் இப்படிப் பேசினார். ஜமீந்தாரோ ஒரு கனவைக் கண்டு கொண்டிருப்பவர் போல் ஓவியரையே பார்த்தார்.

சிவகாமிநாதனுடைய குரலில் இப்பொழுது ஓர் உறுதி வந்தது. சொன்னார்:

''இத்தனை மகத்தான பொறுப்பை நீங்கள் என்னிடம் வழங்கி அதை நான் ஓர் இளைஞனிடம் கொடுப்பது என்றால், அந்த இளைஞன் ஒரு முனிகுமாரனைப் போன்று தவசீலனாக இருக்க வேண்டும். என் உள்ளத்தில் இன்று காலையிலிருந்து புகைந்து கொண்டிருக்கிற வேதனை நெருப்பைப் பார்த்தால், எனக்குப்

பூரண உரிமை இல்லாத யாரோ ஒரு மாணவனிடம் இந்த ஓவிய வேள்வியை ஒப்படைக்க என்னுடைய மனச்சாட்சி இடந் தராது! ஐயா, எனக்கு இருப்பது ஒரே மகன். அன்னையை இழந்த ஒரே புதல்வன்! கண்ணாடிச் சட்டம் போட்டுக் கவலையோடு பாதுகாத்து வருகிற ஒப்பற்ற ஒரு சித்திரத்தைப் போல, அவனை நான் கண்காணித்து வருகிறேன். ஆரம்பத்திலிருந்து ஏதோ ஒரு வேதனையைத் தருகிற இந்த மகத்தான தவப் பணிக்கு, அவனை ஆளாக்குவது எப்படி என்று தான் இதுவரை தயங்கித் தயங்கி மறுகினேன். ஆனால், உங்களுடைய உள்ளத்தில் பொங்கிப் பெருகும் இந்தக் கவலை வெள்ளத்தைக் கண்ட பிறகு, என் தயக்கத்தையே நான் மேலும்மேலும் சொல்லிக் கொண்டிருப்பது மடமை! பயனைப் பற்றி யோசிக்காமல் காரியத்தைச் செய்ய வேண்டும் என்பது அல்லவா தெய்வ கட்டளை? அதையே நானும் செய்ய இசைகிறேன். ஆனால் —''

ஜமீந்தாருடைய முகத்தில் தெளிவு பிறந்தது.

''சிவகாமி நாதன்! என்ன இன்பமான ஒரு முடிவைக் கூறியிருக்கிறீர்கள்! இதற்கு மத்தியில், 'ஆனால்' என்ற பேச்சுக்கு என்ன அவசியம் நேரப் போகிறது? இந்த உலகில் மனித பலத்தாலோ, செல்வத்தின் பலத்தாலோ, செயலின் பலத்தாலோ நம்முடைய முயற்சிக்கு என்ன இடையூறு நேர்ந்தாலும் அத்தனையும் —''



''மன்னிக்க வேண்டும். அதை யெல்லாம் பற்றித் தயங்கினேன் என்று நினைக்கிறீர்கள்? இல்லை. இல்லவே இல்லை. இந்தத் தள்ளாத வயதிலும் என்னுடைய ஒரே மகனை இந்தக் கலைவேள்விக்காகத் தருகிறேன் என்று கூறிவிட்டேனே. இனி அதைப்பற்றிய கவலை எனக்கு இல்லை. ஆனால் அவனுடைய வாழ்வில், அவன் வாழ்வில் —''

சிவகாமிநாதன் இதற்குமேல்ஒன்றும் பேச முடியாமல் மௌனமாக இருந்து விட்டார்.

''ஓவியநாயகரே! ஏன் தயங்குகிறீர்கள்? இத்தனை தூரம் நாம் இருவரும் மனம் விட்டுப் பேசிய பிறகும் என்னிடம் சொல்வதற்குத் தயங்க வேண்டிய செய்தியும் உண்டா?''

''என்னை நீங்கள் மன்னிக்கவேண்டும். இதற்கு மேல் நான் சொல்ல முயற்சி செய்வது பெருந் தவறு. வாழ்வில் இது வரை நான் யாரிடமும் சொல்லாத ஒரு செய்தியை இப்பொழுது உங்களிடம் ஏன் பேச வேண்டும்? அந்த முறையற்ற பேச்சை நான் பேசுவது தவறு: இதற்கு மேல் நீங்கள் அதைப் பற்றிக் கேட்க வேண்டாம்! உங்களுடைய விருப்பத்தை மதிக்கிறவன் நான். நீங்களும் என் விருப்பத்தை மதிக்க வேண்டும் என்று உங்களைப் பணிவோடு வேண்டிக் கொள்ளுகிறேன் —''

சிவகாமிநாதன் இந்த வார்த்தைகளைச் சொல்லி முடித்ததும் ஒரு விநாடி கூட அங்கே உட்கார முடியாதவர் போல அவர் எழுந்தார்.

''என்ன எழுந்து விட்டீர்கள்! உங்களுடைய மனத்தில் ஏதோ ஒரு வேதனையை உண்டாக்கி விட்டேன் நான்! எனக்குப் புரியவில்லையே!''

''புவனபதிப் பெருமானே! எந்தத் தீர்மானத்துக்கு வரக்கூடாது என்று நான் விரும்பினேனோ, எந்த முடிவுக்கு இடம் தரக்கூடாது என்று நான் என் வாழ்வில் எண்ணினேனோ, அந்த விருப்பத்துக்கும், அந்த எண்ணத்துக்கும் மாறாக, இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறேன்! ஆனால் இதில் ஒரு திருப்தி உண்டு. தமிழ் நாட்டின் பெரிய பரம்பரையாகிய ஒன்றின் இலட்சியத்தை நிறைவேற்றுவதில் நான் உதவுகிறேன், உங்களுடைய முன்னோர்களின் கனவை நனவாக்க என்னுடைய மகன் பயன்படுகிறான் என்ற எண்ணம் ஒன்று போதும். இத்தனை வயதுக்குப் பிறகு, இந்தத் தள்ளாத நெஞ்சத்துக்கு அது ஒன்றே இன்பம்! அந்த ஓர் இன்பமே என் வாழ்வின் முடிவை மிகுந்த நல்ல முடிவாக்கும்!''

> காங்கிரஸ் ஆட்சிக்கு வேர் நாஸ்திகம். காங்கிரஸ்காரர்களுடைய கணக்கிலும் திட்டங்களிலும் ஆண்டவன் இல்லை. கடனும் வரியும் விலைவாசிகளும் தரும் பணமே அவர்களுடைய ஈசுவரன். வேரிலிருந்து முளைத்து வளர்ந்த மரமும் அதன் பூவும் பழமும் வேரின் குணத்துக்கு வேறுபடா. மூலத்தைப் பொறுத்துத்தான் இருக்கும் பலனும். நாஸ்திக வேரிலிருந்து நீதியும் நியாயமும் உண்டாகா. —ராஜாஜி

ஏதோ காரணத்தால் சிவகாமிநாதனுடைய உடம்பு பதறியது. அவருடைய கையும் காலும் நடுங்கின. எழுந்தவர் மறுபடியும் அந்தப் பெஞ்சில் உட்கார்ந்தார். படபடப்பாக உடம்பெல்லாம் ஆடியது அவருக்கு!

ஜமீந்தாருக்குத் தலை சுற்றியது. காட்டுக்குள்ளே இருக்கிற ஒரு சிறிய கோவிலின் சுவர்களைப் புதுப்பிப்பதற்காக, வண்ணக் கலையிலே தேர்ந்த ஒரு கலைஞனைத் தேடிப் பிடிப்பதில் இத்தனை சிக்கலா? கடைசியில் ஒரு வகையாகத் தம்முடைய எண்ணம் வெற்றி பெற்றது என்று எண்ணியபோது இது என்ன விபரீதம்? சிவகாமி நாதன் இத்தனை நேரம் தயங்கித் தயங்கிப் பேசியதற்கு அடிப்படையான காரணம் ஏதோ இருக்கிறது என்றல்லவா தோன்றுகிறது! இத்தனை குழப்பங்களும் வரும் என்று எதிர்பார்த்திருந்தால் இந்தச் சிவகாமிநாதனோடு இவ்வளவு பலவந்தமாகப் பேசியிருக்க மாட்டாரே!

"சிவகாமி நாதன்! என்ன இது! ஏன் இப்படி உடம்பெல்லாம் பதறுகிறது உங்களுக்கு?"

இவ்வாறு மிகுந்த கவலையோடு கேட்டார் அனவரதர்.

"ஒன்றுமில்லை! நாம் பங்களாவுக்குள்ளே செல்லலாமே!"

இப்படிச் சொல்லும்போது, அந்த முதிய ஓவியர் சிவகாமிநாதனின் விழிகளிலே, தீப்பொறி போன்று ஒரு கனல் மின்னியது! அவர் பேசினார்:

"ஜமீந்தார் அவர்களே! இந்தச் சென்னை மாநகரின் கடலும், இந்த அலைகளும், இதோ தெரிகிற நீல வானமும், அதில் பவனி செல்கிற மேகக் கூட்டங்களும், இதோ நிற்கின்ற இந்த உயர்ந்த மரங்களும், என்னுடைய வார்த்தைகளுக்கு நிரந்தரமான சாட்சி! நான் இப்போது உங்களுக்கு ஒரு சபதம் தருகிறேன். நான் இப்போது உங்களுக்கு ஒரு வாக்குறுதி செய்து கொடுக்கிறேன். என்னுடைய மகனை, வழி வழியாக நாங்கள் பயின்று வந்துள்ள கலைக்கு என்னுடைய சந்ததியாக உள்ள ஏக புதல்வனை வில்வநாதனை, உங்களிடம் ஒப்படைக்கிறேன். உங்களுடைய பெரிய பரம்பரையின், உங்கள் பெருங் குலத்தின் தெய்வ நிலையமான அந்தக் கோவிலின் திருப்பணியை, என் மகனே மேற்கொள்வான்! அதற்கு வேண்டிய திறமையும், அதற்கு வேண்டிய ஆற்றலும் அவனுக்கு உண்டு. ஆனால் அவனுக்கு நான் வகுத்திருந்த வாழ்க்கையின் இலட்சியம் இதுவரை வேறொன்றாக இருந்தது. ஆனால் இனி மேல் அப்படியில்லை. செண்பக நாயகி கோவிலின் ஓவியத் திருப்பணியே இனிமேல் அவனுடைய இலட்சியமாக இருக்கும். இது என்னுடைய வாக்குறுதி. வானத்திலே மேகங்கள் சூழலாம். மின்னல் மின்னலாம். இடி இடிக்கலாம். பெரு மழை பொழியலாம். எந்த இன்னல்கள் எப்படி நேர்ந்தாலும், என்னுடைய குலக் கொழுந்து உங்கள் குலத்தின் கனவை நனவாக்குவான். இது உறுதி. ஆமாம். இதுவே என் ஆன்ம திருப்தி."

"சிவகாமி நாதன்! சிவகாமி நாதன்! அருமை நண்பரே! ஏன் உங்களுடைய கண்கள் இப்படிச் சுழல்கின்றன! ஐயோ! ஏன் இப்படி மயங்குகிறீர்கள்!"

கீழே சாய்ந்த சிவகாமிநாதனைத் தமது இரண்டு கைகளாலும் நிமிர்த்திப் பிடித்தார் ஜமீந்தார்.

"உங்கள் மாளிகை எவ்வளவு தூரத்தில் இருக்கிறது? நம் இருவருடைய இலட்சியமும் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது இங்கிருந்து? சொல்லுகிறீர்களா?"

இவ்வாறு கேட்டுக் கொண்டே சிவகாமி நாதன் மீண்டும் எழுந்திருக்க முயன்றார். உடம்பு நடுங்கியது. கால் தள்ளாடிற்று.

"வில்வநாதா!" என்று மகனுடைய பெயரைச்சொல்லி அழைத்தார் ஓவியர்.

"நான்தான் நிற்கிறேன், உங்கள் பக்கத்தில், அனவரதன்!"

"ஓ! ஜமீந்தார் அவர்களா நிற்கிறீர்கள்? அப்படியானால் சரி. நாம் வேகமாக எழுந்து நடப்போம். எப்படியும் உங்கள் மாளிகைக்கு நடந்து விட வேண்டும். எழுந்து நடப்போமா, இந்த மணலிலே!"

இவ்வாறு கேட்டுக் கொண்டே மறுபடியும் எழுந்திருக்க முயன்று தள்ளாடினார் சிவகாமிநாதன்.

ஜமீந்தார் இரண்டு கைகளையும் தட்டியவாறு, தம் பங்களாவின் காவற்காரர்களைக் கூப்பிட்டார்! (தொடரும்)

உயிர் சுமக்கும் நெஞ்சம்

ஏ.எஸ்.ராகவன்

மணி ஆறைத் தாண்டிவிட்டது. விநாடி முள் தத்தித் தத்திப் பத்துமுறை சுற்றி வந்து விட்டது. இன்னமும் க்ளோரியா வரவில்லை. இது ஆச்சரியம் தான். சரியாக ஆறு மணிக்கு முள் நகர நகர, வந்து விடுகிறவளுக்கு இன்று என்ன வந்து விட்டது?

நடை பாதைப் புத்தகக் கடை முன் நின்று கொண்டு புத்தகம் பார்க்கிற பாவனையில் எவ்வளவு நேரம் தான் காத்திருப்பது?

பீடர் தவித்தான்.

புற்றிலிருந்து கிளம்பிய ஈசல்கள் போல் மனிதக் கும்பல் அவனை நெட்டிக் கொண்டு போயிற்று. சாரி சாரியாக மோட்டார்கள் வந்தவண்ணம் இருந்தன. நகரின் பிரதான வீதி அது. ஒரு சமயம் பார்த்தால் வடக்கே எல்லா வண்டிகளும் தேங்கி நின்றன. அப் போது தெற்கே உள்ளவற்றுக்கு வழி விடப் பட்டு அவை நகர்ந்தன. மற்றொரு சமயம் பார்த்தால் தெற்கே தேக்கம். வடக்கும் தெற் கும் அங்கே வளர்ந்தன, தேய்ந்தன.

பீடருக்கு இந்த வடக்கு தெற்குப் பிரச்னை பற்றிக் கவலையில்லை. அவன் பார்வை கிழக்கே படிந்திருந்தது.

"என்னு ஸார், புத்தகம் வேணுமா, வேண் டாமா? காசு குடுத்து வாங்காமலே படிச் சுடுவே போலிருக்கே!" என்முன் கடைக் காரன்.

பீடர் சிரித்தபடியே, "என்ன விலே?" என்று கேட்டான்.

"எட்டணு குடு, ஸார்."

புத்தகத்தின் அட்டையை அப்போதுதான் பார்த்தான் பீடர். 'பிள்ளைக் கனியமுது' என்ற தலைப்பையும், குறுநகை தவழ, தவழ் நடை குறுக்கும் பாலகனது உருவத்தையும் கண்டதும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. இந்தப் புத்தகத்தையா அவன் இவ்வளவு நேரமும் பார்த்துக் கொண்டு நின்முன்!

"ஆறணு.. சம்மதமா?" என்முன் பீடர்.

"சரி, எடு ஸார்!" என்முன் கடைக்காரன்.

அந்தப் புத்தகத்தைக் கோட்டுப் பைக்குள் திணித்துக் கொண்டான் பீடர். க்ளோரியா வுக்காகக் காத்திருக்கும் நாட்களில் இப்படிப் பல புத்தகங்களை அவன் வாங்கியிருக்கிறன்.

மீண்டும் கிழக்கே பார்த்தபோது க்ளோ ரியா வந்து கொண்டிருந்தாள். வழக்கமான ஏளனம் நடை இல்லை. மலர்ந்த சிரிப்பு இல்லை.

"ஏன் இவ்வளவு நேரம், க்ளோரியா?"

அவள் பதில் சொல்லவில்லை.

"நான் என்னமோ ஏதோ என்று பயந்து விட்டேன்...."

இதற்கும் அவள் ஏதும் சொல்லவில்லை. தெற்கு நோக்கி மௌனமாக நடந்தாள். அது அவள் வழக்கமல்ல. அவனைக் கண்டதும் கலகலவென்று பேசி நடை பாதையையே நகை பாதையாக மாற்றும் இயல்பு கொண்ட வளுக்கு இன்று என்ன வந்துவிட்டது!

பீடருக்கு அவளோடு நடப்பது சிரமமாக இருந்தது. அவள் நடக்கவில்லை. ஓடினுள்.

"க்ளோரியா!"

அவள் திரும்பிப் பார்த்தாள். அடேயப்பா, அந்தப் பார்வை!

"என்ன க்ளோரியா இது? திடீரென்று இன்றைக்கு ஏன் பேசாமடந்தையாகி விட்டாய்?"

அவளுடைய உதட்டில் முறுவல் நெளிந் தது. "பேச வேண்டியவை நிறைய இருக் கின்றன. அதையெல்லாம் இங்கே பேச முடி யாது, பீடர். தனிமையான இடத்துக்குப் போய்ப் பேசலாம்" என்முள்.

"நல்ல வேளை! இவ்வளவாவது பேசினுயே! அது போதும்" என்று சிரித்தான் அவன். பிறகு அவளைப் பார்த்து, "தனிமையான இடம் எங்கும் ஓடி விடாது. மெள்ள நடக்க லாம், தெரிகிறதா? நீ ஓடுவதைப் பார்த்தால், 'இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க' நிலைகுலைந்து விழுந்து விடுவாய் போலிருக் கிறது!" என்முன்.

"வாஸ்தவம் தான், பீடர்! நிலை குலைந்து விழுந்து விடுவேனே என்று தான் நானும் பயந்து கொண்டிருக்கிறேன்."

"என்ன சொல்கிறுய், க்ளோரியா?"

"ஒன்றுமில்லை. அதை எல்லாம் பிறகு பேச வோம்" என்முள் க்ளோரியா. "பீடர், நீங்கள் இப்போது சொன்ன பாடல் அம்பிகா பதியின் பாடல் தானே?"

"ஆமாம்."

"பாவம், அம்பிகாபதியின் காதல் நிறை வேறவே யில்லை, அல்லவா?"

பீடர் கோபமாக அவளைப் பார்த்தான். "க்ளோரியா! உன் பேச்சும் இன்றைக்குப் புரியவே இல்லை. எதற்காக இப்படியெல்லாம் பேசுகிறுய்?" என்று கேட்டான்.

க்ளோரியா சற்று நின்று அவனைப் பார்த் தாள். ஒரு பெருமூச்சு பிரிட்டுக் கொண்டு வந்தது. அப்போது அவளுடைய முகத்தைப் பார்த்த பீடருக்கு வேதனையாக இருந்தது. க்ளோரியாவின் முகம் ஏன் இப்படிக் களை

விழுந்து விட்டது! இரண்டு மாதங்களுக்கு முன் பங்களூர் தக்காளி போலப் பளபளத்த முகமா அது!

''கோபித்துக் கொள்ளாதீர்கள், பீடர்! எனக்கென்னவோ பயமும் அவநம்பிக்கையுமாக இருக்கிறது.''

''எதற்காகப் பயம்? எதற்காக அவநம்பிக்கை? இதோ பார், நீ மிகவும் களைத்திருக்கிறாய்...வா, சூடாக ஒரு கப் காப்பி சாப்பிட்டு விட்டுப் போவோம்'' என்று அழைத்தான் பீடர். க்ளோரியாவுக்குக் காப்பி என்றால் உயிர்! இப்போதைய அவளுடைய மன நிலையில் அது ஒரு மருந்தாகக்கூட உதவும் என்று அவன் கருதினான்.

க்ளோரியா தலையை ஆட்டினாள். ''வேண்டாம், காப்பியே பிடிப்பதில்லை இப்போதெல்லாம்'' என்றாள்.




''நேற்று வரையில் பிடித்தது இன்று பிடிக்காமல் போய் விட்டதா?''

''ஆமாம்'' என்று தலையசைத்தாள் க்ளோரியா.

''வேடிக்கைதான்'' என்று சிரித்தான் பீடர்.

''இது வேடிக்கை இல்லை, பீடர்...நேற்று வரையில் பிடிக்காதது இன்று பிடித்ததாக மாறியிருக்கிறதே, அதுதான் வேடிக்கை'' என்றாள் அவள்.

''அப்படி என்றால்...?'' என்று வியப்புடன் அவளைப் பார்த்தான் பீடர்.



"விவரமாகச் சொல்கிறேனே. அதற்குள் அவசரப் படுகிறீர்களே!" என்று சிரித்தாள் அவள். பிறகு சட்டென்று நின்றாள். அவளுடைய பார்வை எதிர்ப்புறமிருந்த பழக் கடையில் பதிந்தது. "பீடர், அதோ அந்தக் கடையில் மாதுளை இருக்கிறது, பாருங்கள். ஒரு பழம் வாங்கி வருகிறீர்களா?" என்றாள்.

"மாதுளையா?" என்று கேட்டு விட்டு அவளையே பார்த்தான் பீடர். "க்ளோரியா! உனக்கு மாதுளை என்றால் பிடிக்கவே பிடிக் காதே?" என்றான்.

அவள் சிரித்தாள். "அதுதான் சொன் னேனே. நேற்று வரை பிடிக்காதது இன்று பிடித்தமாக மாறியிருக்கிறதென்று."

பீடர் ஓடிப் போய் இரண்டு பழங்கள் வாங்கி வந்தான். க்ளோரியாவுக்கு இன்று என்னவோ தான் ஏற்பட்டிருக்கிறது. இல்லா விட்டால் மாதுளை வேண்டுமென்று கேட்க மாட்டாள்! அவனுக்கு நன்றாக நினைவிருக் கிறது. ஊத்துக்குழியிலிருந்து அவனுடைய நண்பர் நல்ல மாதுளைப் பழங்களை அனுப்பி யிருந்தார். ஆசையோடு அவளுக்கென்று நான்கு பழங்களை எடுத்துக்கொண்டு ஓடினான். அவற்றில் ஒன்றைக்கூட அவள் தொடவில்லை. மாதுளை சாப்பிட்டால் எங்கே, எங்கே என்று ஜலதோஷமும், ஜுரமும் வந்துவிடுமாம் அவளுக்கு. மறுத்து விட்டாள்! அதே மாதுளை மீது இப்போது திடீர் மோகம்!

நடை மீண்டும் தொடர்ந்தது. அவள் அடிக்கடி வாயைத் திறந்தாள். பேசுவதற்காக அல்ல. மாதுளை முத்துக்களை யெல்லாம் சுவைப்பதற்காகத்தான்!

தனிமையான புல் தரை மீது அமர்ந்ததும் அமராததுமாக க்ளோரியா கேட்டாள்.. "பீடர்! என்னுடைய முகம் இப்போது எப்படி இருக்கிறது?"

"இது என்ன கேள்வி?" என்று அன்புடன் கடிந்தான் பீடர்.

"சொல்லுங்கள்."

"சொல்லத்தான் வேண்டுமா?.... என் க்ளோரியாவின் முகத்தைப் பற்றிச் சொல் வதற்கு என்ன? இன்று முழுதும் சொல்வேன். மேகத் திரையைக் கிழித்துக் கொண்டு சரத் காலச் சந்திரன் வெளிப்படுவதைப் போல.."

"பீடர்! நீங்கள் கவியாக இருந்தால் என் மீது ஒரு புராணமே பாடி விடுவீர்கள் போலிருக்கிறதே!"

"சந்தேகமென்ன? எனக்குக் கவிதையும் எழுத வரும், க்ளோரியா. பாளையங்கோட்டை யில் படிக்கும் போது பதக்கம் கூட வாங்கி யிருக்கிறேன், தெரியுமா? என் க்ளோரியாவின் மீது ஒரு புராணம் எழுதி அந்தப் புராணத் துக்கு 'க்ளோரியா முக லாவண்யம்' என்று பெயர் வைக்கட்டுமா?"

அவள் சிரித்தாள். "'க்ளோரியா முக லாவண்யம்' என்ற பெயரை விட 'க்ளோரியா முகஸ்துதி' என்ற பெயர் நன்றாக இருக்கு மல்லவா?" என்று கேட்டாள்.

பீடர் திடுக்கிட்டான். அவளுடைய பேச் சின் உட்பொருள் அவனுக்கு விளங்கிவிட்டது. "க்ளோரியா! என்ன நடந்ததென்று இப்படி யெல்லாம் பேசுகிறாய்?" என்றான்.

அவள் பெருமூச்சு விட்டாள். "பீடர்! உண்மையாகச் சொல்லுங்கள். மனத்தில் பட் டதைச் சொல்லுங்கள்.. நீங்கள் கவியாக மாற வேண்டாம், பீடர்.. என் முகம் இரண்டு மாதங்களுக்கு முன்பு இருந்தது போலவேயா இப்போது இருக்கிறது?"

பீடர் பெருமூச்சு விட்டான். "இது என்ன அர்த்தமில்லாத கேள்வி? இரண்டு மாதங் களில் உன் முகத்தில் என்ன மாறுதல் வந்து விட முடியும் க்ளோரியா?"

"அப்படிச் சொல்லாதீர்கள். இரண்டு மாதங்கள் என்பது அறுபது நாட்கள். அறுபது நாட்களுக்குள் இரண்டு பௌர்ணமிகளும் வந்து போய் விட்டன. சந்திரனே தேய்கிறான். மனிதன் எம் மாத்திரம்?" என்றாள்.

பீடர் நிமிர்ந்து உட்கார்ந்தான். இவ்வளவு நேரமும் அவளுடைய போக்கை வெறும் ஊடல் என்று மட்டுமே அவன் எண்ணியிருந் தான். அது ஊடல் அல்ல, வேறு ஏதோ விபரீதச் சூழல்!

"ஆனால் உங்களை இவ்வளவு கேள்விகள் கேட்கிறேனே, பீடர், எனக்கே ஏற்பட்ட மாறுதல்கள் இன்று காலை வரை தெரிய வில்லை" என்றாள் க்ளோரியா. சொல்லிவிட் டுத் தலையைக் குனிந்து கொண்டாள். பீடர் நெஞ்சை இறுகப் பற்றிக் கொண்டு அவள் என்ன சொல்லப் போகிறாளோ என்று கூர்ந்து கேட்கத் தயாரானான்.

"பீடர்! ஒரு வாரமாகவே எனக்குச் சாப்பாடு சரிவரப் பிடிக்கவில்லை. அடிக் கடி குமட்டல் எடுத்தது. மதமத வென்று படுத்துத் தூங்க வேண்டுமென்று தோன்றியது. இதெல்லாம் என்ன என்று புரியவே இல்லை எனக்கு.....அம்மா இன்று காலை கேட்ட கேள்வியில் தான் எனக்கு எல்லாமே விளங்கின, பீடர்...."

பீடர் தலையைப் பிடித்துக் கொண்டான்.

அவன் காலைப் பிடித்துக் கொண்டாள் அவள். "பீடர், என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்?" என்றாள்.

அவனுக்கு என்ன செய்வது என்று புரிய வில்லை. அர்த்தமின்றிக் கோட்டை இறுகப் பற்றிக் கொண்டான், குளிருக்கு நடுங்கு பவனைப் போல. நெஞ்சுக்கு நேரே ஏதோ ஒன்று உறுத்தியது. அவசரமாக அதை வெளியே எடுத்தான். ஆறணா விலைக்கு அவன் வாங்கி யிருந்தானே, 'பிள்ளைக்கனியமுது' என்னும் புத்தகம் அது! புத்தக முகப்பிலிருந்த பாலகன் அவனைப் பார்த்துச் சிரித்தான்!

"நேரே அப்பாவிடம் போங்கள், பீடர்.... நம் திருமணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்றாள் க்ளோரியா.

"அது அவ்வளவு சுலபமில்லை, க்ளோரியா" என்றான் பீடர். "அவர் முன்கோபக்காரர். அவருடைய போக்குக்கு விட்டுப் பிடித்துத் தான் காரியத்தை முடிக்க வேண்டும்."


அவள் முகம் கருகியது. "இப்படியே தான் இரண்டு வருஷங்களாகச் சொல்லு கிறீர்கள். எதை விட்டு எதைப் பிடிக்கப் போகிறீர்களோ, தெரியவில்லை!" என்றாள்.

"உனக்குப் புரியாது, க்ளோரியா. அவர் இதை ஏற்க மாட்டார். முதலில் இந்தப் பிரச்னை ஒழுங்காகட்டும். பிறகு அப்பாவிடம் போகலாம். இப்போது அவரிடம் போனால் அபாயமாக முடிந்து விடும்."

"இது அபாயம் இல்லையா, பீடர்?"

ரெக்ஸ்

ஜெல்லி



இன்பமான காட்சி...மிகுந்தசுவை...மிகவும்நல்லது!

இது சுவை மிகுந்தது. பழங்களின் மணம் கொண்டது. எளிதில் தயாரிக்கக்கூடிய ஒரு பண்டம். ரெக்ஸ் ஜெல்லி கிரிஸ்டல்களை வெந்நீரில் கலந்தால் போதும். பிறகு போதுமான அளவு குளிர்ந்த ஜலம் அதோடு சேர்த்து அந்தக் கலவையை ஒரு பைண்டுக்கு, (அதாவது 20 அவுன்ஸ்) சமமாக ஆக்கிக்கொள்ளுங்கள். அதை அச்சியில் ஊற்றி, ஐஸின் மேல் ஜெல்லியை உறைய வையுங்கள்.

அது குடும்பத்தார் விரும்பும் போஷகமளிக்கும் லேசான பண்டம். வியாதியிலிருந்து சுகமடைந்தவருக்கும் கூட நல்லது.

ரெக்ஸ் ஜெல்லி கிரிஸ்டல்கள் 6 சுவைகளில் கிடைக்கின்றன. ராஸ்பெரி, ஸ்ட்ருபெரி, லெமன், பைனபிள், ஆரஞ்சு, செர்ரீ.



கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.

தென் இந்தியாவிற்கான ஏஜெண்டுகள்: பாரி & கம்பெனி லிமிடெட்



பாங்க் தொழில்


நாட்டின் செல்வத்தைப்
பெருக்குகிறது



பஞ்சாப் நேஷனல் பாங்க்
நாட்டின் தொழிலுக்கும்,
விவசாயத்திற்கும்,
வாணிபத்திற்கும் பணி
யாற்றுகிறது



எல்லாவித பாங்க்
பணிகளும் அளிக்கிறது.



தி
பஞ்சாப் நேஷனல்
பாங்க் லிட்.

ஸ்தாபிதம் 1895
தலைமைக் காரியாலயம்: புது டில்லி.



உலகப்
பிரசித்திபெற்ற
தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக் குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டதால், பிராங்கைடிஸ் விரைவில் அகன்றது

தொண்டை, மார்பு உபாதைகளுக்கான பெப்ஸ் வில்லைகளை உட்கொண்டு தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்தை சீக்கிரம் நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து, குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேலை செய்வதை உணருங்கள் . . . வேதனையைக் குறைக்கவும் கிருமிகளை அகற்றவும் உதவியளிக்கிறது.



பெப்ஸ்

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணம் அளிக்கும்
வில்லைகள்

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

வி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

PPY-36-TAM

சோல் ஏஜண்டுகள்:
தாதா & கோ., 88, தம்பையப்ப நாயக் தெரு. சென்னை-3

"இதைவிட அது அபாயம், க்ளோரியா!"

"உங்கள் அபாயமும் உபாயமும் எனக்கு விளங்கவில்லை. விளங்கவில்லை என்பது மட்டுமல்ல, பிடிக்கவுமில்லை...." என்றாள் அவள். பிறகு அவன் கையிலிருந்த புத்தகத்தைப் பார்த்தாள். அதிலிருந்த பாலகன் அவளைப் பார்த்துக் கைகளை நீட்டிச் சிரித்தான்.

பீடர் செய்வதறியாது உட்கார்ந்திருந்தான். இப்படி நேரும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை.

"என்ன செய்வது பீடர்?" என்று கேட்டாள் அவள், கண்ணீரினிடையே.

"முதலில் இந்தப் பிரச்சினை தீரட்டும், க்ளோரியா. இப்படியே விட்டு வைத்தால் நாலு பேர்கள் என்ன சொல்வார்கள்?" என்று கேட்டான் அவன்.

"இங்கே நாலு பேரின் பேச்சுக்கு இடமில்லை, பீடர்! நம் இருவர் பேச்சுத்தான் முக்கியம். சொல்லுங்கள், எனக்கு வாழ்வளிக்கப் போகிறீர்களா இல்லையா?"

"கட்டாயம் அளிப்பேன் க்ளோரியா... உனக்குச் சந்தேகமா இதிலே?"

"எனக்கு வாழ்வளிக்க நீங்கள் விரும்புவதானால், இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் என்னுள் உள்ள அதுவும் நான் தான்...நான் மட்டுமல்ல, நீங்களும்தான்!"

"க்ளோரியா!" என்று அலறினான் பீடர்.

அவள் சிரித்தாள். சிரிப்பா அது! தாய்மை என்னும் சிறு குழந்தை, அன்பின் மடியிலிருந்து, கருணையற்ற மரணதேவனைப் பார்த்துப் பேதைமை வழியச் சிரிக்கும் வேதனைப் பிளிறல் அது!

"க்ளோரியா! தயவு செய்து நான் சொல்வதைக் கேள். நம் காதலை இதற்குப் பணயம் வைக்காதே. இதை உலகம் ஏற்காது. முதலில் இதை ஒழுங்குபடுத்திவிடு."

அவள் அதே சிரிப்பை உதிர்த்தாள். "ஒழுங்கு படுத்து என்று சொல்லாதீர்கள். அது பொருத்தமான வார்த்தை அல்ல. நீங்கள் சொல்லும் காரியத்துக்கு வேறு வார்த்தை இருக்கிறது" என்றாள்.

"க்ளோரியா! என்ன பேச்சு இது? வார்த்தைகளில் குழம்பலாமா?"

"வாஸ்தவம்தான். வார்த்தைகளைக் கேட்டுக் குழம்பக் கூடாது. நான் அறியாமல் குழம்பி விட்டேன். அது என் பிழைதான். சரத் காலச் சந்திரன் என்றீர்களே, அது கூட அர்த்த மற்றது. ஏனென்றால் தினம் வளர்ந்து அதே போல் தினம் தேய்வது சந்திரனின் இயல்பு. பூரணத்துவம் எதிலும் நிலையாக இல்லை. மனிதர்களின் வார்த்தையிலா அது இருந்துவிடப் போகிறது?"

பீடருக்குக் கோபம் வந்து விட்டது. "உனக்கு எது சொன்னாலும் புரியவில்லை, க்ளோரியா! இந்த விபரீதமான வேளையில் கூடத் தத்துவம் பேசுகிறாய்!" என்று சீறினான்.

அவள் நிதானமாகச் சிரித்தாள். "என்னை மன்னித்து விடுங்கள். நான் மிகவும் கவலைப்படுகிறேன். அது தப்புத்தான், பீடர். இது தீர்ந்ததும் அப்பாவிடம் திருமண விஷயத்தைப் பேசித் தீர்மானிப்பீர்கள் அல்லவா?"

"கட்டாயம்."

"ஒரு வேளை அவர் மறுத்து விட்டால்?"

"மறுத்தால் கவலையில்லை. உன்னிடம் ஓடி வந்து விடுவேன்."

"அப்போது நாலு பேர்கள் நாலு விதம் பேச மாட்டார்களா?"

"பேசினால் பேசட்டுமே. எனக்கென்ன?"

அவளுடைய முகம் மலர்ந்தது. "அந்த நாலு பேர் இப்போது நாலு விதம் பேசுவதை மட்டும் ஏன் பொருட்படுத்த வேண்டும்?" என்று கேட்டாள்.

பீடர் கையை உதறினான். "உனக்குப் புரியவே மாட்டேன் என்கிறது, க்ளோரியா! சில பிரத்யட்ச உண்மைகளையும் அதன் விளைவுகளையும் நாம் புறக்கணித்து விட முடியாது. நம்மைப் பொறுத்தவரையில் இது தவறில்லை என்றாலும் உலகம் அப்படிச் சொல்லாது."

க்ளோரியா துடித்தாள். அவன் என்ன சொல்கிறான் என்பது அவளுக்கு விளங்கி விட்டது. முதலில் இதை ஒழுங்குபடுத்தியாக வேண்டும். அப்புறம் தான் திருமணம். ஏனென்றால் உலகம் விபரீதமாகப் பேசும். அவள் தாய்மைக்கே களங்கம் கற்பித்து ஏசும். பீடர் அதற்காகத்தான் பயப்படுகிறான்.

அவள் எழுந்தாள். "நல்லது, பீடர்! நேரமாகிறது. நாம் புறப்படுவோமா?" என்றாள்.

"என் மேல் கோபமா?" என்று கேட்டபடியே எழுந்தான் அவன்.

அவள் சிரித்தாள். "இல்லை, பீடர். நிச்சயமாக இல்லை. சில பிரத்யட்ச உண்மைகளையும்

காங்கிரஸ் ஆட்சியில்....

நமது விவசாய உற்பத்தி பெருக வழி கண்டால் நில உரிமையாளர்களின் இலாபம் பெருகும். அதை யொட்டி உழவுத் தொழிலாளர்களின் ஊதியமும் தன்னால் உயரும். ஆனால் காங்கிரஸோ உற்பத்தியைப் பெருக்குமுன்பே நிலத்தின் விநியோகத்தை மாற்றி அமைக்க முற்பட்டிருக்கிறது. தொகை கொடுத்து இன்றுள்ள பெரிய நில உடைமைகளில் 'உபரி'யைப் பெற்று அதைத் துண்டு துண்டாக்கி, தொழிலாளிகளுக்கு அளிப்பது போலப் பாசாங்கு செய்து மீண்டும் கூட்டுறவுப் பண்ணை என்ற பெயரில் முன் போலவே அவற்றை ஒன்றாகத் திரட்டுவதே காங்கிரஸின் கொள்கை. இப்பண்ணைகளை விவசாய ஞானமில்லாத நிர்வாகிகளிடம் ஒப்புவித்து ஊக்கத்தையும் உற்பத்தியையும் குறைப்பதில் அது முனைந்திருக்கிறது. உற்பத்தியைக் குறைக்கும் இந்த அழகான ஏற்பாட்டுக்காகக் கோடிக்கணக்கில் நஷ்ட ஈட்டுத் தொகை வழங்குவதோடு இன்று உரிமையாளர்கள் செய்யும் ஏராளமான செலவையும் சர்க்காரே ஏற்க நேரிடும். வறுமை மிகுந்த இந்நாட்டில் இவ்வளவுக்கும் நிதி திரட்டுவதற்காக மேலும் வரிகள் விதிக்கப்படும். மக்கள் உஷாராக வேண்டும்.

அதன் விளைவுகளையும் நாம் புறக்கணிக்க முடியாது என்பதை இப்போது தான் நான் புரிந்து கொண்டிருக்கிறேன். உங்கள் மீது எனக்குக் கோபமே இல்லை'' என்றாள்.

நடை தொடர்ந்தது. ஆனால் பேச்சு புல் தரையிலேயே நின்று விட்டது. அது 'சில பிரத்யட்ச உண்மைகளையும் அதன் விளைவுகளை'யுமே ஆராய்ந்து கொண்டிருந்தது.

ஒரு வாரம் வரை புத்தகக்கடை முன்னால் பீடரைக் காணவில்லை. எட்டாம் நாள் மாலை அவன் அங்கே வந்து நின்றான். கையில் கிடைத்த புத்தகத்தை வைத்துக் கொண்டு கிழக்கே பார்க்கலானான்.

மணி ஆறைத் தாண்டி விட்டது. க்ளோரியா வரவில்லை!

''என்ன ஸார், புத்தகம் வேணுமா?.... ஆறணா குடு, ஸார். போன வாரம் அதே விலைக்குத் தானே கொடுத்தேன்?'' என்றான் கடைக்காரன்.

பீடர் அப்போது தான் புத்தகத்தைப் பார்த்தான். முகப்பில் தவழும் சிறு குழந்தை அவனைப் பார்த்துச் சிரித்தது. 'பிள்ளைக்கனி வமுது!'

''என்ன புத்தகம் அது?''

குரல் கேட்டுத் திரும்பினான் பீடர். க்ளோரியா நின்றாள்! புத்தகத்தை மறைக்க முடியவில்லை. அதற்குள் அவள் பார்த்து விட்டாள். அடுத்த கணம் அவளுடைய கண்களில் நீர் சுரந்து விட்டது. ''அந்தப் புத்தகத்தை வாங்குங்கள்....'' என்றாள்.

பீடர் ஆறணா கொடுத்து அதை வாங்கிக் கோட்டுப் பைக்குள் திணித்துக் கொண்டான்.

அவன் தெற்கு நோக்கி நடந்தாள். அதே புல் தரைக்கா? இன்று என்ன விபரீதம் காத்திருக்கிறதோ?

''சொன்னால் நம்ப மாட்டீர்கள். நேற்று கனவில் நம் பரிசுத்தம் வந்தான். அவனைப் பார்த்தால் இந்தப் புத்தகத்திலிருக்கும் பையனைப் பார்க்க வேண்டாம். இரண்டு பேரும் ஒரே அச்சு. ஒரே சாயல்தான்....'' என்றாள் க்ளோரியா.

''பரிசுத்தமா?'' வாய் பிளந்தான் பீடர்.

''ஆமாம். அவனுக்குப் பரிசுத்தம் என்று தான் நான் பெயர் சூட்டியிருக்கிறேன். பெயர் நன்றாக இல்லை?'' என்றாள் அவள்.

பீடர் என்ன சொல்வான்? அவளுடைய போக்கு இத்தனை விபரீதமாக மாறும் என்று அவன் நினைக்கவில்லை.

புல் தரையில் அமர்ந்ததும் அமராததுமாக அவள் சொன்னாள்: ''பீடர்! நாளைக்கு நான் பம்பாய் புறப்படுகிறேன். என்னோடு அம்மாவும் வருகிறாள். அங்கே எனக்கு வேலை கிடைத்து விட்டது.''

பீடர் திடுக்கிட்டு அவளைப் பார்த்தான்.

''என்மேல் கோபம் கொள்ளாதீர்கள். எனக்குப் பம்பாய் போக வேண்டுமென்று ஆசையில்லை. ஆனால் நம் பரிசுத்தம் தான் பிடிவாதமாக, 'இந்த ஊரே நமக்கு வேண்டாம், அம்மா....பம்பாய் போய் விடுவோம் ....வா' என்கிறான். நான் என்ன செய்யட்டும்?'' என்றாள் அவள், தொடர்ந்து.

''க்ளோரியா! உனக்கு மூளை பிசகிவிட்டதா? எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தலாம் என்று எண்ணும்வேளையில் இது என்ன விபரீதம்?'' என்று கடிந்தான் பீடர்.

''நானும் அதையே தான் சொன்னேன். ஆனால் பரிசுத்தத்தின் பொறுமையைப் பார்த்தீர்களா! அவனுக்குப் போட்டியாக யாரும் வரக் கூடாதாம். அவனைத் தவிர வேறு யாரிடத்திலும் நான் அன்பு வைக்கக் கூடாதாம். தூக்கத்தில் வந்து என்னை எழுப்பி இதைச் சொல்லிக் கண்ணீர் விடுகிறான்....''

பீடர் பிரமையுடன் அவளைப் பார்த்தான். ''க்ளோரியா, நீ பேசுவதை யாராவது கேட்டால் சிரிப்பார்கள்! பிறக்காத குழந்தைக்கு நீயாக ஒரு பெயரை வைத்து அவனைச் சாக்கிட்டு என்னைப் பிரிந்து செல்ல எண்ணுகிறாய். அப்படித்தானே?'' என்றான்.

''அப்படி எல்லாம் சொல்லாதீர்கள்'' என்று மறித்தாள் அவள். ''அவன் எல்லாக் குழந்தைகளையும் போல மண்ணில் வந்து விழவில்லை என்பது உண்மைதான். ஆனால் நம் பரிசுத்தத்தை இந்த உலகில் திரிய விடாமல், இதன் ஆசாபாசங்களில் அலைய வைக்காமல், நம்மைப் போல் அவனையும் வாழ்வின் ஒழுங்குகளிலும், உலகின் பிரத்யட்ச உண்மைகளிலும் விளைவுகளிலும் சிக்க விடாமல் காப்பாற்றி விட்டோம். அவன் இப்போது என்னுள்ளேயே எப்போதும் இருப்பான். அவனுடைய அழகிய முகத்தைப் பார்த்து நான் பூரிக்கிறேன், பீடர்! அவனுடைய பிஞ்சுக் கால்கள் என் நெஞ்சில் எப்போதும் படுகின்றன. அவனுடைய மழலை என் காதுகளில் ஒலிக்கிறது. என் பரிசுத்தம் எல்லாக் குழந்தைகளையும் போல் பெரியவனாக வளர மாட்டான். எப்போதும் குழந்தையாகவே என்னுள் இருப்பான்....''

அவளுடைய கண்கள் கலங்கின.

பீடரின் கண்களும் கலங்கின. இந்த ஒரு வாரத்தில் அவளுடைய உடல் மேலும் மெலிந்து போயிருந்ததை அவன் கண்டான். எது ஒழுங்கானாலும் எல்லாம் ஒழுங்காகி விடும் என்று அவன் எண்ணினானே, அது ஒழுங்கான பின் தான் சிக்கலே பிறந்திருக்கிறது.

அவள் எழுந்தாள். ''பீடர்! அந்தப் புத்தகத்தைக் கொடுங்கள். உங்களுக்கு வேறொன்று வாங்கிக் கொள்கிறீர்களா?'' என்றாள்.

அவசரமாக அதை அவளிடம் கொடுத்தபடியே, ''ஏற்கனவே இதே புத்தகம் என்னிடம் இருக்கிறது. போன வாரம் வாங்கினேன்'' என்றான் அவன்.

''பார்த்தீர்களா? பரிசுத்தம் நம் இரண்டு பேரிடமும் நமக்குத் தெரியாமலே வந்து சேர்ந்து விட்டான். அவன் பொல்லாதவன்.''

''க்ளோரியா!''

''என்னை மன்னித்து விடுங்கள், பீடர்! என் பரிசுத்தத்தைத் தவிர இனி எனக்கு வாழ்வில் எதுவும் இல்லை. என் அன்பு, என் வாழ்வு, என் எல்லாமே அவன் ஒருவனுக்குத் தான் சொந்தம். ஏனென்றால் அவன் இந்த அம்மாவைத் தவிக்க விட மாட்டான். ஏமாற்றவே மாட்டான். அவனைவிட உயர்ந்த பொருள் எனக்கு என்ன இருக்கிறது? நான் போய் வருகிறேன், பீடர்....''

அவள் போய் விட்டாள்.

பீடர் அவளைத் தடுக்கவில்லை; தடுக்கவும் முடியாது அவனால்.



சீரான ஆகாரமில்லாததால் நீங்கள் மெலிந்திருக்கிறீர்களா?

ஆல்போஸாங் சாப்பிடுங்கள்

மிகச் சிறந்தது
சாதாரண உணவுடன் சேர்ந்து
சிக்கனமான, விஞ்ஞான முறையில்
ஊட்டமளிப்பது

தேநீர், காப்பி, பால், கஞ்சி, பழாசம் முதலியவைகளுடன் சேர்த்து அருந்தினுல் மிக ருசியாக இருக்கும். சிறு குழந்தைகளுக்கும், வளரும் பிராயத்திலும், பிரசவகாலத்தில் தாய்மார்களுக்கும், சிந்திக்கும் தொழிலாளிகளுக்கும், முதியவர்களுக்கும், பலவீனம் இரத்தமின்மை மற்றும் நோயிலிருந்து தேறி வரும் போதும் ஆல்போ-ஸாங் சிறந்த டானிக் உணவாகிறது.



பௌடர் மற்றும் மாத்திரைகளாகவும் கிடைக்கிறது.

ஜே. & ஜே. டீஷேன்,
ஹைதராபாத்—டெக்கான்



அன்பே ஆரமுதே

தி. ஜானகிராமன்

அத்தியாயம் 45

ருக்மிணி வாசல் வராந்தாவிலேயே துவண்டு போய் உட்கார்ந்து விட்டாள்.

சேவல் ஒன்று தெருவிலிருந்து தோட்டத்துக்குள் வந்து மண்ணைக் கீறிக் கொத்திக் கொண்டிருந்தது. திடீர் என்று நினைத்துக் கொள்ளும். கழுத்தை வளைத்து, தலையை உயர்த்திக் 'கோ' என்று கூவும். இப்படி நாலைந்து கூப்பாடு போட்டது.

''த்தா, ச்சூ, ஓடு. அதுதான் விடிஞ்சு போச்சே. ஏன் இப்படிக் காதைத் துளைக்கிறே!'' என்று கையை வீசி விரட்டினாள் சித்தி. 'கொக்கரக் கொக்' என்று பயந்து கொண்டே அசைந்து அசைந்து கொல்லைப் பக்கமாக ஓடிற்று அது.

''வாசல்லே போன்னா கொல்லைப் பக்கமா ஓடறே!'' என்று சித்தி இறங்கப் போனாள்.

''அதை ஏன் சித்தி விரட்டறே?''

''பின்னே, இந்தக் கத்தலை யாருடி கேக்கறது? விடிஞ்சு எத்தனை நாழியாச்சு?''

''இன்னும் எத்தனை பேர்களுக்கு விடியலையோ யார் கண்டார்கள்?''

சித்தி அவளை ஒரு தடவை நின்று பார்த்தாள். பேசாமல் சிறிது நேரம் நின்றாள். ''என்ன லெட்டர் கொண்டு வந்து காண்பிச்சார்? என்ன எழுதியிருந்தது?''

''எத்தனை கோழி கத்தினாலும் நான் இனிமேல் எழுந்திருக்கவே மாட்டேன்னு எழுதியிருந்தான் அந்தப் பிள்ளை.... அப்படியே எழுந்திருக்காமல் தூங்கியும் போய்விட்டான்'' என்றாள் ருக்மிணி. கடைசி வார்த்தைகள் கம்மிக் கரகரத்தன.

சொல்லி விட்டு, சித்தி பின்தொடர உள்ளே எழுந்து போனாள். கடிதத்தில் எழுதியிருந்தது அவ்வளவையும் சித்திக்கு வரிசையாகச் சொன்னாள். கொல்லையில் போய் நாலு வாளித் தண்ணீரைத் தலையில் விட்டுக் கொண்டாள்.

''என்னடி இது?'' என்று குழம்பி நின்றாள் சித்தி.

''உறவுக்குத்தானா என்ன? நாலு வார்த்தை நம்மோடு பேசினவர்களுக்கும்தான் உண்டு இது. இன்னும் கொஞ்சம் பொறுத்திருந்தானானால் நம்ம நாகம்மா மாப்பிள்ளையாகக் கூடத்திலே கூப்பிட்டு உட்கார்த்தி வைத்துப் பாயசம் பரிமாறியிருப்போமோ, இல்லையோ?'' என்று தலையைத் துவட்டிக் கொண்டாள் ருக்கு. குளியல் நனைந்த கண் இமையில் துயரத்தின் துளி நீர் தனியாக, பற்றுதலின்றி ஒட்டிக் கொண்டு நின்றது.

தலையை நீவி முடிந்து, நெற்றிக் கிட்டு, காலேஜுக்குப் புறப்படத் தயார் செய்து கொண்டாள் ருக்கு.

''இலை போட்டாச்சு'' என்றாள் சித்தி.

''சாப்பாடு வேண்டாம் சித்தி.''

''சீச்சீ. வெறும் வயித்தோட போகப் படாது. அதுவும் இந்த மாதிரி சமயத்திலே, வேண்டியிருக்கோ, இல்லையோ சாப்பிட்டு விடணும்.''

''என்னத்துக்காக!'' என்று வியப்புடன் கேட்டாள் ருக்கு.

''துக்கம் பசியை அதிகம் பண்ணும். பட்டினி போட்டால் போனவர்களுக்கே நல்லதில்லை.''


''உடம்பைக்கூட இன்னும் கொண்டு போயிருக்க மாட்டார்களே!''

''இது என்ன கிராமமா? ஒரே தெருவா! அதுவுமில்லாமல் போனது

போயிட்டுது: அப்புறம் இதுக்காக வேறு காத்திண்டிருக்கணுமா?''

சித்தி விடவில்லை. மல்லுக்கு நின்று பருப்புச் சோற்றைப் பிசைந்து ஏற்றி விட்டாள். ருக்குவுக்கு எதிர்த்து நிற்க முடியவில்லை. சாதம் போட்டுக் கொண்டே சொன்னாள் சித்தி. ''ஆயிரம் சமர்த்தாக இருக்கட்டும். ஆயிரம் பாட்டு, ஆயிரம் டான்ஸ் ஆடட்டும், அப்ஸரஸாகவே இருக்கட்டும். அதுக்காக இப்படி உயிரைப் போக்கிக்கவாவது!''

ருக்கு அதைக் கேட்டுச் சற்று யோசித்தாள். ''நீ நினைக்கிறது சரியில்லை, சித்தி. அவன் டொக்கிக்காகப் போகவில்லை. சந்திராவுக்காக. அவனோடு இருக்க முடியவில்லை என்ற



ஏக்கம்தான் வெறியாகிச் சுவர் மேலே முட்டிக் கொள்கிறாற் போல் சாவின் மேலே முட்டிக் கொண்டு விட்டது.''

''அப்படியா சொல்றே?'' என்று முகத்தைச் சுளுக்கி நினைவில் ஆழ்ந்தாள் சித்தி. ''அதுவும் சரிதான். கோபுரம், கலசம்னு என்னென்னவோ எழுதியிருக்கான்கிறியே. இந்தச் சந்திராவும் கொஞ்சம் சுடு கொடுத்திருக்கலாம். ஆம்பிள்ளைகளுக்கு இந்த நெடி, வாடை, சோறு எல்லாம் வேணும்.''

''நமக்கு மாத்திரம் வேண்டாமா, என்ன? எல்லாருக்கும் அப்படித்தான். வெறும் தித்திப்பை எப்படிச் சாப்பிடறது? மாம்பழமும் அத்தனை தித்திப்பாக எப்படி இருக்க முடியும்? உள்ளூற இருக்கிற புளிப்புத்தான் அப்படி மனசை இழுக்கும்படியா பண்ணி வெச்சிருக்கு. புளிப்பு இல்லாத தித்திப்பு அமிர்தத்துக்குத்தான் உண்டு. உண்டு என்று நினைக்க வேண்டியிருக்கு. அது ஒண்ணுதான் அசல் தித்திப்பு. இந்த உடம்போடு, இந்த ஆசையோடு அது என்னமாக ருசிக்கும்?''

இதைக் கேட்டுச் சித்தி அவளைப் பார்த்துப் பெருமூச்சுடன் எழுந்தாள்.

ருக்குவுக்கு விமானத்தில் அன்று பிரயாணம் செய்தது நினைவுக்கு வந்தது. உடலின் நினைவை விலையாகக் கொடுத்து உயிரை வாங்கிய அந்த அச்சமும் திகிலும் ஞாபகம் வந்தன. ஆறுதல் ஞாபகமாகத்தான் வந்தது. பட்ட கஷ்டங்கள் இன்பமாக மாறி விடும் ஞாபகமாகவே வந்தது.

புத்தகங்களை எடுத்துக் கொண்டு காலேஜுக்குக் கிளம்பினாள் அவள்.

ஃ ஃ ஃ

முதல் இரண்டு மணியும் வகுப்பு இருந்தது. மூன்றாவது மணி ஓய்வு. பிற்பகலிலும் இரண்டாவது மணிதான் வகுப்பு. எப்படியோ சிரமப்பட்டு இரு வகுப்புகளையும் ஓட்டினாள். கடைசி மணி ஓய்வைப் பயன்படுத்தி, பிற்பகல் லீவு போட்டு விட்டுக் கிளம்பினாள்.

உச்சிப் பொழுதில், படபடக்கிற வெயிலில் அவளைக் காணும் போது டொக்கிக்கு என்னவோ போல்தான் இருந்தது.

''வாருங்கள் மாமி.''

''___''

''இன்னிக்குக் காலேஜ் இல்லையா?''

''போய் விட்டு வந்து விட்டேன்.''

''மத்தியானம்?''

''லீவு போட்டு விட்டேன்.''

''என்ன விசேஷம்?''

''இங்கே யாரும் வரவில்லையா?''

''யாரு? எதுக்கு?''

''அனந்தசாமி மாமா வரவில்லே?''

''இல்லையே! என்ன?''

''வந்து சொல்லியிருப்பார் என்று நினைத்தேன்.''

''என்ன?''

''ரங்கன் சேதிதான்.''

''ரங்கன்கூட இன்று வரவில்லையே?''

''அவர் வரமாட்டார். வர மாட்டார் என்றுதான் அனந்தசாமி வந்து சொல்லவில்லையா என்று கேட்டேன்.''

''இல்லையே. ஏன் வர மாட்டார் ரங்கன்?''

''உட்கார்ந்து பேசுங்களேன்'' என்றாள் டொக்கியின் தாயார்.

''சில பேர்களைப் பகவான் படுக்கையில் போட்டு, நோயில் வாட்டி வதக்கி, பிறகு எடுத்துக் கொள்வான். சில பேரை மோட்டார், ரயில், விமானம் இவற்றில் ஏற்றி உடைத்து எடுத்துக் கொள்வான். ரங்கனுக்கு அப்படியெல்லாம் நேராமல் ஆகிவிட்டது.''

''என்ன மாமி இது?'' என்று பதறினாள் தாயார்.

''மாரடைப்பாம். தூங்கினவன் எழுந்திருக்கவே யில்லையாம். இத்தனை நாழி அடக்கமாகி யிருக்கும்.''

''என்ன மாமி இது?'' என்று விழித்தாள் தாயார். மேலேயும் தொடர்ந்து பேசினவள் அவள்தான். டொக்கி எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு ஊமையாக நின்று கொண்டிருந்தாள்.

''மாரடைப்பாவது! தூங்கவாவது! அடக்கமாவது! நேற்றுத்தானே வந்து விட்டுப் போனார்?''

''அவ்வளவு ஆச்சரியமாக மாரடைப்புக்குத்தான் காரியங்கள் செய்ய முடியும். எல்லாரும் சுற்றி நின்று காத்துக் கொண்டிருக்கும்படியாக, அப்புறம் வழியனுப்பும்படியாக எல்லாம் வைத்துக் கொள்ளாது அது. நேற்று ராத்திரி தூங்கப் போனார். காலையில் அம்மா எழுப்பிப் பார்த்திருக்கிறாள். பதிலைக் காணவில்லை. கிட்டப் போய்ப் பார்த்து ஏதோ சந்தேகப்பட்டிருக்கிறாள். மூச்சில்லை. டாக்டர் வந்தார். போய் வெகு நேரமாகி விட்டது என்று சொல்லி விட்டுப் போய்விட்டாராம்... அருண்குமார் ஏதோ காரியமாக அவரைப் பார்க்கப் போனானாம். வாசலைப் பார்த்து, ஏதோ சந்தேகம் வந்திருக்கிறது. அங்கே நின்றவர்கள் சொன்னார்களாம். உடனே அனந்தசாமியிடம் வந்தான் அவன். இருவரும் புறப்பட்டுப் போயிருக்கிறார்கள்.''

டொக்கியின் தாயார் மகளை வெறித்துப் பார்த்துக் கொண்டே நின்றாள். டொக்கியின் முகத்தில் கலவரமும் அச்சமும் படர்ந்து கிடந்தன.

இந்தக் கதையில் விமான நிலையத்தில் சந்திரா கடைசியாக விடைபெறும் காட்சியை இவ்விதம் அட்டைப்படமாகச் சித்திரித்திருக்கிறார் ஓவியர் விஜயா.


HAZELINE
TALCUM
POWDER

"அதுக்குள்ளியுமா எடுத்துண்டுப் போயிடுவா?" என்று கேட்டாள் டொக்கியின் தாயார்.

"கிராமமா? எத்தனை நாழி வைச்சிருக்க முடியும்?"

"இந்த வயசிலே எப்படி மாமி, மாரடைப்பு வரும்?" என்று வாய் திறந்தாள் டொக்கி. திறந்த கையோடு தேம்பித் தேம்பி அழுதாள்.

"எவ்வளவு வேலையைத் தாங்கும் உடம்பு? அளவுக்கு மீறி வேலை செய்தால் தானாக ஓய்வு எடுத்துக் கொண்டு விடுகிறது."

டொக்கி அழுவதைப் பார்த்துத் தாயாரும் அழுதாள்.

சற்றுக் கழித்து, "மாமி! அப்பாவுக்கு ஒரு தந்தி கொடுக்க வேண்டும். வரச் சொல்லி" என்றாள் டொக்கி.

தாயார் விழித்தாள்.

"ராத்திரியே புறப்பட்டு வரும்படியாகத் தந்தி கொடுக்கவேண்டும்" என்றாள் டொக்கி மீண்டும்.

"நான் கொடுக்கட்டுமா?"

"கொடுங்கள்."

"இல்லை, என்ன அவசரம் அப்பாவுக்குத் தந்தி கொடுக்க?" என்று பயந்து கொண்டே குறுக்கிட்டாள் டொக்கியின் தாயார்.

அவளை வெறித்துச் சுட்டு விடுவது போல் ஒரு பார்வை பார்த்தாள் டொக்கி. "அவசரம்தானம்மா. இவரோடு போகட்டும் எல்லாம். இந்தச் சினிமா, டிராமா, கூத்து பாட்டு எல்லாம் இதோடு ஒழியணும். நான் மேலே படிக்கப் போறேன். காலேஜிலே சேரப் போறேன். ஒழிஞ்ச வேளையிலே அனந்தசாமி மாமாகிட்டே வைத்தியம் கத்துக்கப் போறேன். அவர் ஜாகையில் இப்ப மூணு ரூம் இருக்கு. நான் ஒரு ரூமை வாடகைக்கு எடுத்துக் கொண்டு வாசிக்கப் போறேன். எனக்காக இங்கே ஒரு ஜாகை போட்ட நீயும் புலம்ப வேண்டியதுதான். அப்பாவுக்கு இருக்கிற சொற்ப காலத்துக்குச் செஞ்சுப் போடற அதிர்ஷ்டம் உனக்கு எங்கே கிடைக்கப் போறது? நீ கஷ்டம்னு நினைச்சாலும் நினைப்பே அதை. ஆனால் அந்தக் கஷ்டம்தான் அதிர்ஷ்டம்."

டொக்கி கண்ணும் உதடும் துடிக்கப் பேசுவதைப் பார்த்து ருக்மிணி தன்னையறியாமல் "டொக்கி!" என்று ஒரு சத்தம் போட்டாள்.

திரும்பிப் பார்த்த டொக்கிக்கு அந்தக் கோபத்தைக் கண்டு வாய் உள்ளுக்கு இழுத்துக் கொண்டது.

"மாமி. ஒண்ணும் நினைத்துக் கொள்ளாதீர்கள். இவ சம்மதிப்பாளோ மாட்டாளோ என்ற சந்தேகத்தில்தான் இப்படிப் பேசி விட்டேன். ஆனால் நானும் என் இஷ்டப்படி இருக்கத்தானே வேண்டும்? நான் மாத்திரம் யார் யாரோ கையிலெல்லாம் மாட்டிக் கொண்டு ஏன் தவிக்கணும் இப்படி? தந்தியை நானே கொடுத்துக் கொள்கிறேன்" என்று கண்ணைத் தலைப்பால் மூடிக் கொண்டாள் டொக்கி.

> பூசாரி போனால் பூஜை நின்று போகாது. வேறு பூசாரி வருவார். பூசாரி வேறு, பூஜை பெறும் தெய்வம் வேறு. சர்க்கார் என்பது தெய்வத்தைப்போல. அவ்வப்போது ஆட்சியிலுள்ள அரசியல் கட்சி தெய்வத்துக்குப் பணி செய்யும் பூசாரிதான். இன்றைக்கு ஆட்சியிலுள்ள காங்கிரஸும் ஒரு பூசாரிதான். இந்தப் பூசாரி தப்புக் காரியம் செய்தால் வேறு நல்ல பூசாரியை நீங்கள் நியமித்துப் பூசையைத் தொடர்ந்து நடத்த முடியும் என்பதை மறந்து போகாதீர்கள். காங்கிரஸ் போனால் அதோடு நாட்டு நிர்வாகம் நின்று விடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். காங்கிரஸை ஆண்டவன் அதாவது அரசாங்கம் என்று மயங்காதீர்கள். — ராஜாஜி

ருக்மிணி வீட்டுக்குத் திரும்பி வந்த போது, வாசலில் சுப்புசாமியின் கார் வந்து நின்று கொண்டிருந்தது.

"சுப்புசாமி வந்திருக்காரா?" என்று உள்ளே நுழைந்ததும் சித்தியைக் கேட்டாள் அவள்.

"சுப்புசாமி மாத்திரம் இல்லை, மருமாளும் வந்திருக்கிறாள். இவன் போய்ச் சமாசாரத்தைச் சொன்னதுமே மயங்கி விழுந்து விட்டாளாம். தெளிஞ்சப்புறம் 'உங்க ஜாகையிலே வந்து இருக்கட்டும், இரண்டு நாளைக்கு. இந்தச் சமயத்திலே நீங்கதான் அவளுக்கு ஏதாவது சொல்லி ஆச்வாசப்படுத்த முடியும்'னு சுப்புசாமி மருமாளை காரில் ஏத்திண்டு வந்தாரார். மாடியில்தான் இருக்கா எல்லாரு(ம்). நாகம்மாவும் வந்திருக்கா. காப்பியாவது போட்டுக் கொடுக்கலாம்னு கீழே வந்து இப்பத்தான் அடுப்பை மூட்டினேன்" என்றாள் சித்தி அவயாம்பாள்.

புறக்கடைக்குப் போய்க் காலையும் முகத்தையும் கழுவி விட்டுத் திரும்பும் போது, சுப்புசாமியும் நாகம்மாளும் கீழே இறங்கி வந்து விட்டார்கள்.

"என்ன மாமா இது?"

"ஒரு பிள்ளைதானே எனக்கு. பிறந்த பயல் எங்கேயோ இருக்கிறானே என்று இந்தப் பயலை வளைய விட்டிருந்தது இத்தனை நாட்களாக. இப்போது அவன்

வரப் போகிறானோ இல்லையோ — இவன் ஏமாற்றிவிட்டான்'' என்று எங்கேயோ பார்த்துக் கூறிக் கொண்டே தொப் பென்று நாற்காலியில் உட்கார்ந்தார் சுப்புசாமி.

நாகம்மாள் ஒன்றும் பேச வில்லை. முன்றானையால் வாயைப் பொத்திய வாறு நின்றாள்.

''ருக்கு!''

''என்ன மாமா!''

''காரைக் கொடுக்கிறேன். இந்தக் குட்டியை அழைச்சிண்டு எங்கேயாவது சுத்திட்டு வா. இரண்டு நாட்கள் இங்கே இருக்கட்டும். இந்தச் சாமிக்கு ஏதாவது தெரியுமே. புத்தர் சாந்தி, ராமஜபம்— ஏதாவது சொல்லிக் கொண்டிருக்குமே இது. என்ன வேணுமோ அதைச் சொல்லட்டும். எல்லாத்தையும் கேட்டுக் கட்டும்னுதான் இங்கே கொண்டுவந்து விட்டிருக்கிறேன். அடுத்தவாரம் பிள்ளை யாண்டான், பெண்டாட்டிக் குழந்தை யோட வரான். அவனுக்கு இந்தியா முழுக்கப் பார்க்கணுமாம். அவர்களுட னும் சேர்ந்து சுத்தட்டும். அப்புறம் அவனோடே சேர்த்துச் சீமைக்கு அனுப் பிச்சிடலாம்னு பார்க்கிறேன். அங்கே யும் போய் ஏதாவது படிக்கட்டும். ஏதா வது பண்ணட்டும். பெண்ணைப் பிரிஞ் சிருக்க முடியல்லேன்னு நாகம்மாளும் போகட்டும்.''

யாருமே பதில் சொல்லவில்லை.

ருக்மிணி மேலே போனபோது அனந்தசாமி, ''இப்பொழுதுதான் வந் தீர்களா?'' என்று காதில் விழுந்ததும் விழாததுமாகக் கேட்டார்.

''ஆமாம்'' என்ற பாவனையில் தலை யாட்டி உள்ளே எட்டிப் பார்த்தாள். சந்திரா அயர்ந்து தூங்கிக் கொண்டிருப்பதுதெரிந்தது.

''அவளுக்கு எப்படித் தெரியும்? காலேஜ் இல் லையோ அவளுக்கு?'' என்று இந்தண்டை அவரை அழைத்து வந்து கேட்டாள் ருக்மிணி.

''இன்னிக்கு என்னமோ 'போக வேண்டாம் போல் இருக்கிறது. தலையை வலிக் கிறாற் போல் இருக்கிறது' என்று குருசாமியிடம் லீவு எழுதி அனுப்பினாளாம்.''

''ரொம்ப அதிர்ச்சி அடைந்திருக்கிறாளா?''

''அப்படித்தான் சொல்ல வேண்டும். மருந்து கொடுத்திருக்கிறேன். நானும் மருந்து சாப்பிட்டு வருகிறேன்.'

''நீங்களா?''

''ஆமாம். ராமராம என்று நானும் மாத்திரை தின்றுகொண்டு வருகிறேன். அதிகப்படி டோஸாக ஆகவே முடியாது அது. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தம் தான் விஷமாகும். மருந்துதான் விஷ மாகும். இந்த அமிர்தம் அதிகமாக ஆகக் குணம்தான் அதிகமாகும்.''

''உங்களுக்கும் குடும்ப பாரம் கூடிக் கொண்டே வருகிறது.''

''உறவில்லாத குடும்பத்துக்குப் பாரம் ஏது...?''

உறவில்லாத அனந்தசாமியின் குடும் பம் மேலும் கூடத்தான் செய்தது... தாயாரையும் தம்பி தங்கைகளையும் மூட்டை கட்டித் தந்தையோடு ஊருக்கு அனுப்பி விட்டு அனந்தசாமியின் மூன்று அறைகளில் வடவண்டை அறையைப் பிடித்துக் கொண்டு படிக்கத் தொடங் கினான் டொக்கி. காலேஜில் சேர மிக வும் தாமதமாகி விட்டதென்று ஒரு ட்யூடோரியல் கல்லூரியில் சேர்ந்து விட் டான். இரவு வேளைகளில் ருக்மிணி யிடம் படித்தான்.

இந்தத் தாலி கட்டாத மனைவி, வயிற் றில் பெறாத பெண் இருவருடன் சேர்ந்துதான் அனந்தசாமி மூன்று மாதங்கள் கழித்து மீனம்பாக்கத்துக்குப் போனார். சுப்புசாமியின் பிள்ளையோடும் அவன் குடும்பத்தோடும் இரண்டு மாதங்களுக்கு மேல் ஸ்ரீநகரிலிருந்து நாகர்கோவில் மட்டும் சுற்றி விட்டு மீண்டும் அவர்களுடனேயே சீமைக்குப் புறப்பட்டாள் சந்திரா. அவளை வழி யனுப்ப, இந்த உறவில்லாத குடும்பத் துடன்தான் போனார் அனந்தசாமி.

நாகம்மாளும், சுப்புசாமியும் குரு சாமியும் வந்திருந்தார்கள் அங்கு.


சந்திரா, மாமாவின் பிள் ளையையும் வெள்ளைக்கார மருமகளையும் குழந்தையை யும் தொடர்ந்து விமானம் நோக்கி நடந்தாள். திரும் பிக் கையை உயர்த்தி விடை பெற்றுக் கொண்டாள்.

ருக்குவுக்கு, தான் டில் லிக்கு விமானத்தில் சென்ற நினைவு மீண்டும் வந்தது. அந்தப் பயமும் ஞாபகம் வந்தது. கஷ்டங்கள் இன்ப மாகத் தோன்றும் ஞாபக மாக அது வந்தது. அன்று சபதம் செய்து, காணிக்கை யாகக் கொடுத்த இன்பமும் நினைவுவந்தது. உறவில்லாத குடும்பம் உள்ளச்சலில்லாத குடும்பம். புளிப்புஇனிப்பாக மாறாத, சுத்தமான இனிப்பு அது என்று அடி நெஞ்சில் இனித்தது அவளுக்கு.




நான் பெருமையுடன் கூறுகிறேன்
...நான் ஒரு க்ளாக்ஸோ குழந்தை. ஆகையால், தாய்ப்பால்
அருந்தும் வேறெந்தக் குழந்தையைப்போல நான்
ஆரோக்கியமாகவும், வலுவாகவும், திருப்தியாகவும்
இருக்கிறேன். ஏனென்றால், க்ளாக்ஸோவில் சிறந்த
தாய்ப்பாலிலுள்ள எல்லா நல்ல அம்சங்களும்
இருக்கின்றன. இலவசமாக க்ளாக்ஸோ
குழந்தைப்புத்தகம் பெற விரும்புவோர்,
50 ந. பைசா தபால் வில்லைகளை
(தபால் செலவிற்காக) கீழ்க்கண்ட
விலாசத்திற்கு அனுப்
புங்கள்: க்ளாக்ஸோ,
டட்ஸ் ரோடு, மதராஸ்-2
Glaxo
SUNSHINE
Glaxo
க்ளாக்ஸோ—குழந்தைகளுக்கான மிகச் சரியான பாலுணவு
க்ளாக்ஸோ லாபரெட்டரீஸ் (இந்தியா) பிரைவேட் லிட்.,
பம்பாய், கல்கத்தா, மதராஸ், புதுடில்லி

ஹோட்டலுக்கு ஒரு கும்பிடு!



சி.கே. வேங்கடராமன்

இப்படி ஒரு சோதனைக் காலம் எனக்கு ஏற்படும் என்று தெரிந்திருந்தால் இத்தனை நாட்கள் ஹோட்டலில் காப்பி ஆற்றி வயிற்றைக் கழுவிக் கொண்டிருந்தேனே, அந்தத் தொழிலுக்குக் கைகழுவியிருக்க மாட்டேன்!

ஸ்கூல் பைனல் பாஸ் பண்ணி, சர்டிபிகேட் புத்தகம் வாங்கியதும் என்னமோ எனக்காக யாரோ 'வேலையே வைத்துக் கொண்டு காத்துக் கொண்டிருப்பது போன்று நான் பறந்த பறப்பும், அலைந்த அலைச்சலும், நம்பிய நம்பிக்கையும் வீணாகப் போய், கடந்த நான்கு ஆண்டுகளாக நிம்மதியாக ஒரு ஹோட்டலில் வேலை செய்து கொண்டிருந்தேனே, அந்த நிம்மதி அடியோடு போய் விடத்தானோ எனக்கு இந்த வேலை — மாநில அரசாங்கத்தில் குமாஸ்தா வேலை — கிடைத்தது!

எனக்குச் சர்க்கார் வேலை கிடைத்த மகிழ்ச்சியில் என் சக ஊழியர்கள் நாங்கள் வேலை செய்யும் ஹோட்டலில் 'பார்ட்டி' எனக்கு வைக்காமல் வேறொரு ஹோட்டலில் வைத்து என்னைத் தலை மேல் வைத்துக் கொண்டாடி, ஒரு ஹோட்டல் தொழிலாளி சர்க்கார் வேலைக்குப் போவதைப் பாராட்டித் தலைகால் தெரியாமல் குதித்துக் கும்மாளம் அடித்த போது எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி தான் தூளாகி விட்டதே!

நான் வேலையில் சேருவதன் மூலம் தாற்காலிகமாக நியமிக்கப்பட்டிருந்த ஒருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டதும் அதைக் கண்டு நான் இவ்வளவு வருந்தி நொந்து வேதனை அடைவதற்குக் காரணம் —

வேலை இழந்தவர் ஒரு குடும்பத்தைக் கட்டிக் காப்பாற்ற வேண்டிய நிலைமையில் உள்ளவரா?

இல்லை!

சரிந்த வாயில் மேலாக்கைத் தளர்ந்த கைகளினால் இழுத்து இடது தோள் மீது போட்டு, பேனாவை மூடி, ஜாக்கெட்டுக்குள் செருகி, நாற்காலியைச் 'சர்'ரென்று பின்னே தள்ளி, எழுந்து எனக்கு இடம் கொடுத்து ஏககாலத்தில் எல்லோரது இரக்கத்தையும் தன் மீது திருப்பி, அதே நேரத்தில் அவரது வெறுப்புக்கும் என்னை ஆளாக்கி விட்ட அந்தப் பெண் —

ஏழை! மகா ஏழை என்பதைத் துவைத்துக் கட்டிய வாயில் புடவையும், கைகளில் போட்டிருந்த டஜன் ஆறணா கண்ணாடிவளையல்களும், அதிகம் எண்ணெய் காணாத தலையும், ஒட்டி உலர்ந்த, ஆனால் பருவத்தால் பக்குவப்படுத்தப்பட்ட உடம்பும் பறைசாற்றினவே!

வேலை நீக்கப்பட்ட உத்தரவை ஹெட்கிளார்க் தமது நடுங்கும் கரங்களால் அவளிடம் நீட்டிய பொழுது, அவளுடைய கண்களில் துளிர்த்த கண்ணீரைத் துடைக்க என் கைகள் துடித்தன!

"வருத்தப்படாதே அம்மா! உன்னைத் தாற்காலிகமாகத்தானே எடுத்திருந்தார்கள்...." என்று ஏதோ ஆறுதல் கூற வாயெடுத்த ஹெட்கிளார்க் அந்தப் பெண்ணின் விழி நீரைக் கண்டு விட்டுத் திரும்பிய போது அவர் பார்வையில் ஒரு பீரோ, அல்லது ஓர் அலமாரி படக் கூடாதோ!

'பாவி! கடன்காரா! ஓர் ஏழைப் பெண்ணை வேலையிலிருந்து நீக்கி, அவள் வயிற்றெரிச்சலைக் கட்டிக் கொண்டு நீ நிரந்தரமாக உட்கார எத்தனை நாட்களாகடா கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாய்?' என்பது போல் அவர் என்னைப் பார்த்த பார்வை என்னைத் துளைத்து எடுத்த பொழுது எனக்கு அழுகையே வந்து விட்டது!

நான் ஆண் பிள்ளை. முன்னே விட்ட தொழிலையே மீண்டும் தொடர்ந்து வாழை

யும் வயிற்றையும் என்னால் கழுவிக் கொள்ள முடியும். ஆனால் இந்த ஏழைப் பெண் என்ன செய்வாள்...?

"உங்கள் நல்ல மனத்துக்கு நல்ல வேலை கிடைக்கும்!"



"சர்க்கார் பரீட்சை எழுதியிருக்கிறீர்களே! வேண்டுமென்றால் பாருங்கள்! இந்த ஆபீசில் மீண்டும் வந்து உட்காரப் போகிறீர்கள்!"

"உடனே வேறு வேலை கிடைக்க வேண்டுமே, ஸார்!"

"ஆமாம்! தாயார் உடம்பு சரியில்லாதவங்களாச்சே!"

"இவங்க சம்பாத்தியம் ஒன்னுதானே குடும்பம் நடத்த!"

"த்சொ! த்சொ! கஷ்டமான ஜீவனம்!"

காப்பிக்கும், டீக்கும் காலில் சக்கரம் கட்டிக் கொண்டு 'காண்டீனு'க்கும் 'செக்ஷ'னுக்குமாக ஓடிக் கொண்டிருக்கும் பியூன் ராகவனிலிருந்து மீசை நரைத்தாலும் ஆசை நரைக்காது பெண்ணைக் கண்டு பல்லை இளிக்கும் சூபர்வைசர் சுந்தரவரதன் வரை அந்தப் பெண்ணை — கமலாவை — சுற்றிக் கொண்டு ஆறுதலும், அனுதாபமுமாகப் பேசினார்களே, அதெல்லாம் என் வேதனையை அதிகரிக்கவா?

"வேலை போனதைப் பற்றிக்கூட நான் கவலைப்படவில்லை சார்! என் அம்மாவால்

இந்த அதிர்ச்சியைத் தாங்கவே முடியாது சார், முடியாது!''

முகத்தை இரு கைகளாலும் மூடிக் கொண்டு அந்தப் பெண் அழுது புலம்பிய பொழுது ராம பாணமாக எல்லோரது பார்வையும் என் மீது பாய்ந்து என்னைக் குற்றவாளியாக்கியது.

என்னாலா அந்தப் பெண்ணுக்கு வேலை போய் விட்டது?

'ஆமாம், ஆமாம்' என்று கூறின அத்தனை பேர்களது பார்வையும்.

தலையைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டேன். 'எனக்கு அந்த வேலை வேண்டாம்; அந்தப் பெண்ணுக்கே கொடுங்கள்' என்று தனிப்பட்ட கம்பெனியாக இருந்தால் அதன் முதலாளியின் கால்களைப் பிடித்துக் கெஞ்சி, வெற்றியும் அடையலாம். சர்க்காரில் முடியுமா?

நான் தலை நிமிர்ந்த பொழுது அந்தப்பெண் நின்றிருந்த இடம் காலியாக இருந்தது.

சாவு வீட்டைப் போல் மரணக் களை கட்டியிருந்த ஆபீஸில் கோர அமைதி ஒன்று புரையோடிக் கொண்டிருந்தது. ஒருவராவது பேச வேண்டுமே! கருமமே கண்ணாயிருப்பது போல் எல்லோரும் தத்தம் வேலையில் ஈடுபட்டிருந்தனரே தவிர, புதிதாக வந்த எனக்கு வேலை சொல்லித் தருகிறவர் யாரையும் காணோம்!

''ஸார்!'' என்றேன் ஹெட் கிளார்க்கிடம் ஈனஸ்வரத்தில்.

ஏதோ கனவிலிருந்து விடுபட்டவர் போல், சிந்தனையிலிருந்து விடுபட்டவராய் என்னைப் பார்த்து. ''நல்ல பொண்ணு சார்! கமலா! ஏழைப் பொண்ணு! அம்மா இருக்கிறாள். சீக்குக்காரி. அப்பா இல்லே. ரொம்பக் கஷ்ட ஜீவனம் சார்!'' என்றார்.

என் நெஞ்சில் குருதி பொங்கி ஓட்டெடுத்து என் தொண்டையைத் துக்கமாக அடைத்தது. கசியாத கண்களும் கசிந்தன.

''நீங்கள் இன்றுதான் ஸார் வந்தீர்கள். அதற்குள் அந்த ஏழைப் பெண்ணின் பரிதாபமான நிலை எங்களைக் கண்ணீர் விடும்படி செய்து விட்டதே! எங்களுக்கு எப்படி இருக்கும் என்று பாருங்கள்!''

அவரைப் பார்க்கவே பரிதாபமாயிருந்தது.

நீண்டத் தகாதவனைப் போல அந்தப் பெரிய ஆபீஸில் தன்னந் தனியாக என்னால் வேலை போய் நிர்க்கதிக்குள்ளாகி விட்ட அந்த ஏழைப் பெண்ணின் கதியை எண்ணி நான் குமைந்து கொண்டிருந்த வேளையில் —

பியூன் ராகவன் பேசினானே, எனக்கு ஆறுதல் கிடைத்ததோ!

அவன்தான் அருகிலிருந்த ஒரு மாடியில் ஓர் அறை ஏற்படுத்திக் கொடுத்தான். சாப்பாடு ஹோட்டலில்! வாயில் வைத்தால் வயிற்றில் வலிக்கும் ஹோட்டல் சாப்பாட்டை நானே என் கையால் எத்தனையோ பேர்களுக்குப் போட்டிருந்தாலும், இன்று நானே அதைச் சாப்பிடும்பொழுது பிறருடைய அவஸ்தையும் தெரிந்தது. ஹோட்டலில் வேலை செய்தாலும் சாப்பாட்டுக்கு மட்டும் ஒரு வீட்டில் வைத்துக் கொண்டிருந்த அம்மணிப் பாட்டியின் வத்தல் குழம்பு, கடைந்த கீரையின் அருமையும் தெரிந்தன!

சம்பாதிப்பது சாப்பிடத்தான்! ஹோட்டல் சாப்பாட்டையா? ஒரு வார ஹோட்டல் சாப்பாட்டில் நாக்கு செத்துப் போய் விட்டது என்பது மட்டும் உண்மையல்ல. வயிற்றில் வலியும் உண்டாகி விட்டது என்பதும் உண்மைதான்!

நல்ல மனிதர்களைக் கண்டுபிடிப்பதும் சரி, இந்த நாட்டில் நல்ல ஹோட்டல் கண்டுபிடிப்பது என்பதும் சரி எவ்வளவு கஷ்டம் என்பது ஊர் முழுதும் நல்ல ஹோட்டலைத் தேடி அலைந்த என்னைக் கேட்டால் தெரியும்!

மார்க்கெட் அருகே நல்ல ஹோட்டல் என்று சொன்னார்களே என்று போனால் அது வார விடுமுறை போர்டைத் தாங்கி என்னை வரவேற்று ஏமாற்றித் திருப்பிய பொழுது வழியில் வந்தவள் அவள்தான்!

ஒரு பை நிறையக் காய்கறிகள் வாங்கிக் கொண்டு ஏழைப் பெண்களுக்கே உரிய அடக்கத்தோடு சென்று கொண்டிருந்தாள் கமலா!

என்னால் அவளுக்கு வேலை போய் விட்டதைக் கூறி, அவளிடம் நான் படும் பாட்டைக் கூறி மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்ததால் 'கமலா, கமலா' என்று அழைத்தபடி அவள் பின்னால் விரைவாக ஓடினேன்.

என்னைத் திரும்பிப் பார்த்தாள் அவள். பார்வையில் பனி பெய்யவில்லை. பங்குனி சித்திரை வெய்யில் கொளுத்தியது. முகவாய்க் கட்டையை வலது தோளில் ஓர் இடி இடித்து விட்டு என்னை எரித்து விடுபவள் போல் பார்த்தாள். பிறகு மடமடவெனக் கூட்டத்தில் கலந்து மறைந்து விட்டாள்.

என் நெஞ்சைப் பிடித்துக் கொண்டது ஒரு கை. அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டது மற்ற கை. நெஞ்சில் வலி அவளால். வயிற்றில் வலி ஹோட்டல் சாப்பாட்டால்!

மருத்துவக் கல்லூரிகள் நாட்டில் நிறையத் தோன்ற வேண்டும் என்று கதறுகிறவர்கள் என்னைப் போல ஹோட்டலில் சாப்பிடுகிறவர்களாகத் தானிருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஒவ்வொரு டாக்டர் வீட்டிலும் சினிமாக் கொட்டகையைப் போல் இதென்ன இப்படி நீண்ட 'கியூ' நோயாளிகள்?

'கியூ' கொஞ்சம் தெளிந்த பொழுது என் முதுகும் 'எஸ்' வடிவத்தில் நீண்டு நெளிந்ததற்குக் காரணம் யாரோ என் முதுகில் கொடுத்த அன்பான 'ஷொட்டு'தான்!

''ஏண்டா பசி நீயா?'' என்று வாயைப் பிளந்தபடி என்னைக் கட்டிக் கொண்டு நின்றவன் என் பால்ய நண்பன் பாலகுருநாதன்.

யாரையுமறியாத ஊரில், நடுத் தெருவில் நிராதரவாய் ஹோட்டலில் ஒரு காலும், டாக்டர் வீட்டில் ஒரு காலும் வைத்துக் கொண்டு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் நான் அவனைக் கண்டதும் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டேன்! இனி எனக்குப் பயமில்லை என்ற தைரியம் பிறந்தது.

''ஹோட்டல் சாப்பாட்டினால் வயிற்று வலியா! விடுடா கவலையை! சாப்பாட்டுக்கு ஒரு வீட்டில் ஏற்பாடு செய்கிறேன். நல்ல மனிதர்கள்! எக்ஸலண்ட்' சமையல்! வாய்க்கு வேண்டியதைச் சங்கோசப்படாமல் கேட்டுச் சாப்பிடலாம்!'' என்று அவன் கூறிய ஒவ்வொரு வார்த்தையும் என்னை அந்த



துப்பறியும்
சாம்பு
அல்ல
தபால்காரர் !

பூரணமாயும்
புரியும்படியும்
விலாசம்
எழுதுங்கள்
தபால்
துரிதமாய்ப்
பட்டுவாடா ஆகும்.

உங்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய
எங்களுக்கு உதவுங்கள்
தபால் தந்தி இலாகா

வீட்டுக்கே அழைத்துச் செல்ல அவனைத் தூண்டும்படி செய்தன.

'மாமி' என்ற அவனுடைய அழைப்பைக் கேட்டதும் நெற்றி நிறையக் குங்குமமும், கழுத்து நிறைய மாங்கல்யமும், தழைக்கத் தழைக்க மாம்பழக் கட்டுப் புடவை கட்டிக் கொண்டு ஒரு பழுத்த சுமங்கலி அம்மாள் வருவாள் என்று நினைத்தது போக. —

வந்தது அவள் — கமலா!

"இது வந்து என் சிநேகிதன். பெயர் சுந்தரம். சுந்தா, சுந்தா என்று கூப்பிடுவோம். தாலுகாபீஸிலே உத்தியோகம் பார்க்கிறான். சர்க்கார் உத்தியோகம். ஒன்றுந் தேதியன்னிக்கு 'டாண்' என்று சம்பளம் வந்து விடும்....ஹோட்டல் சாப்பாடு ஒத்துக்கலையாம் . ..இங்கே தான் நாலைஞ்சு பேர் சாப்பிடறான்னு இவனையும் அழைச்சுண்டு வந்தேன். அம்மா இல்லையா?" என்று பேசிய படியே வீட்டின் உள்ளே போகப் போன பாலகுருவைத் தடுத்து நிறுத்தினாள் கமலா.

"அம்மா இல்லையாக்கும்?" என்றான் மறுபடியும் பாலகுருநாதன்.

"எல்லாம் இருக்கா!" — என்று வெறுப்புடன் பதில் வந்தது.

"அட்வான்ஸ் எவ்வளவுன்னு சொன்னால் உடனே கொடுக்க 'ரெடி'யா இருக்கான்!"

"நாங்கள் சாப்பாடு போட 'ரெடி'யா யில்லே!" — வெட்டு ஒன்று துண்டு இரண்டாய் முகத்தில் என்னும் கொள்ளும் வெடித்து வாரிக் கொட்ட, தெருக்கோடியைப் பார்த்த படி அவள் பேசினாள்.

"ஏனாம்?"

"நாங்கள் கண்ட மனுஷாளுக்கெல்லாம் சாப்பாடு போடறதில்லே!"

"இவன் நல்ல பையன்! வாழ்க்கையிலே கஷ்டப்பட்டவன்!"

"அதுக்காக நாங்கள் சாப்பாடு போட்டாகணும்கிற கட்டாயம் ஏதாவது உண்டா?"

நான் பேசாது அவளைப் பார்த்தேன். அவள் கண்களில் நெருப்பு தெறித்தது. வெறுப்புக் கொட்டியது. இவனுக்கு வேலை போனதுக்கு நான் காரணமா?

"பத்து இருபது நாஸ்தியானாலும் பரவாயில்லே. வீட்டுச் சாப்பாடு வேண்டும் என்று ஆசைப்படறான்!" என்றான் பாலகுரு.

"பத்து, நூறு நாஸ்தியானாலும் சாப்பாடு போட நாங்கள் ஆசைப்படலே!" என்றவள் முகத்தில் அடிக்காத குறையாகக் கதவைப் 'படீ'ரென்று அறைந்து மூடி விட்டு உள்ளே போய் விட்டாள்.

விதிர்விதிர்த்து நின்றான் பாலகுரு. அவமானத்தால் முகம் குன்றித் தலை கவிழ்ந்து நின்றேன் நான்.

மறுநாள்.

மாதக் கடைசிக்குரிய மயான அமைதியோடு செயல்பட்டுக் கொண்டிருந்தபொழுது திடீரென்று ஒரு பரபரப்பு ஆபீஸ் முழுதும் அலை அலையாகப் பரவியது.

"கமலாவா? வாம்மா!"

"வாருங்கள், மிஸ் கமலா!"

"வேலை ஏதாவது கிடைத்ததா?"

"தாயாருக்கு எப்படி இருக்கிறது?"

காங்கிரஸ் ஆட்சியில் ....

பணக்காரர்களுக்குத்தான் வரி விதிக்கிறோம் என்று கூறுகிறது காங்கிரஸ். பணக்காரர்கள் வகையெல்லாம் குறைந்து, நாட்டு உற்பத்தி நலிவுறும் அளவுக்கு காங்கிரஸ் சர்க்கார் அவர்கள் மீது நேரடி வரிகள் விதித்திருப்பது உண்மையே. ஆனால் பொது மக்கள் செலுத்தும் மறைமுக வரிகளையும் அது ஏகத்தாறாக உயர்த்தி யிருக்கிறது என்பதை நிதரிசனமாக எடுத்துக் காட்ட விரும்புகிறோம். பொது மக்கள் உபயோகிக்கும் பண்டங்களின் மீதெல்லாம் வரி போட்டிருக்கிறது காங்கிரஸ் சர்க்கார். விலை உயர்வு என்ற பெயரில் அந்த வரிப் பளுவையெல்லாம் பொது மக்களே சுமக்கிறார்கள்.

நாம் சுதந்திரம் பெற்றதற்கு மறு வருடம் அதாவது 1948-49-ம் ஆண்டு மத்திய சர்க்கார் எக்சைஸ் வரி விதித்திருந்த—அதாவது பொது மக்களிடமிருந்து மறைமுகமாக வரி வசூலித்த—பொருட்கள் பதின்மூன்றுதான். இவற்றிலிருந்து சர்க்காருக்குக் கிடைத்த வருமானம் சுமார் 52 கோடி ரூபாய். இது மொத்த வருமானத்தில் பதின்மூன்று சதவிகிதம் தான். எக்ஸைஸ் வரி விதிக்கப்பட்ட பண்டங்களின் எண்ணிக்கையும், மொத்த வருமானத்தில் இந்த வரி வசூலின் சதவிகிதமும் அன்றிலிருந்து கடந்த பன்னிரண்டாண்டுகளாக நாளொரு மேனியாக ஏறிக் கொண்டே வந்திருக்கின்றன. இந்த 1961-62-ம் ஆண்டு 56 பொருட்கள் மீது எக்சைஸ் வரிகள் விதித்திருக்கிறார்கள். இவற்றில் பல, சாமானிய மக்கள் உபயோகிப்பவையே. முன்பு 52 கோடி ரூபாய் கிடைத்த இந்த இனத்திலிருந்து இந்த ஆண்டு 435 கோடி ரூபாய் கிடைக்குமென மதிப்பிட்டிருக்கிறார்கள். இது மொத்த வருமானத்தில் 42 சதவிகிதமாகும். அதாவது முன்பிருந்தது போல மூன்று மடங்காகும். மறைமுக வரிகளை இப்படி ஏகதேசமாக உயர்த்தி வரும் காங்கிரஸ்காரர்கள் தாங்கள் பணக்காரர்களுக்கே வரி போடுவதாகக் கூறினால் இனியும் ஏமாறாதீர்கள். அதோடு பணக்காரர்களுக்குப் போடும் வருமானவரி முதலிய நேரடி வரிகளையும் அந்தப் பணக்காரர்கள் உத்தேசமாகக் கணக்கிட்டுத் தாங்கள் உற்பத்தி அல்லது விற்பனை செய்யும் பண்டங்களின் விலையில் கூட்டிப் பொது மக்கள் மீதுதான் சுமத்தி விடுகிறார்கள் என்பதையும் உணருங்கள்; வரிப்பளுவைக் குறைக்க உறுதி பூண்ட சுதந்திரக் கட்சியை ஆதரியுங்கள்.

ஆபீஸ் முழுவதும் கூடிக் கமலாவை வர வேற்று விசாரித்த பொழுது முன் தினம் ஏற் பட்ட தலைக் குனிவால் அவளை எந்த முகம் கொண்டு பார்ப்பது என்று நான் முடங்கிக் கொண்டிருந்த வேளையில் —

கமலாவின் நெஞ்சாழத்திலிருந்து ஒரு விம்மல் வெடித்தது.

"எங்கம்மாவுக்கு உடம்பு ரொம்பவும் அதிக மாகி விட்டது சார்! தன் நினைவில்லாமல் ஏதேதோ பிதற்றுகிறாள். டாக்டரிடம் காட்டி னேன். மருந்தும் ஊசியும் எழுதிக் கொடுத் திருக்கிறார். மருந்துக் கடைக்காரன் நாற்பது ரூபாய் ஆகும் என்கிறான். உங்கள் எல்லோ ரையும் தவிர என்மீது இரக்கப்படுகிறவர் களும், எனக்கு உதவி செய்கிறவர்களும் வேறு எவருமில்லாததால்தான் சார் நான் இங்கே வந்தேன்!" என்றாள் கமலா கண்ணீர் விட்டபடியே.

இரக்கப்படுகிறவர்கள் அனைவருமே மாதக் கடைசியில் தங்களைக் கண்டு யாராவது இரக் கப்பட மாட்டார்களா என்றிருந்ததால் நவக் கிரகங்களைப் போல் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். மாதக் கடைசியில் 'சிங்கிள் டீ'க்கும் வழியில்லாத வறுமை மகாநாட்டின் ஏகப் பிரதிநிதிகளாய்க் கூடி யிருப்பவர்களுக்கு என்ன பதில் சொல்வ தென்று தெரியவில்லை. கைகளைப் பிசைந்து கொண்டனர் சிலர். மோவாய்க் கட்டையைத் தடவிக் கொண்டனர் சிலர். பையே இல்லாத சட்டையை உடம்பு முழுதும் தடவிக் கொண் டார் ஹெட் கிளார்க். சூபர்வைசர் சுந்தர வரதனுக்குப் பெண்களைக் கண்டு பல்லை இளிக்க மட்டுமே தெரிந்திருந்ததால் இந்தச் சமயத்தில் காண்டீன் 'ஸ்பெஷல்' குருமாவுக் காக நழுவிவிட்டார்! நாம் பணம் கொடுத்து உதவுவோமா என்று எண்ணினேன். அதற்குள் மனம் என்னைத் தடுத்தது. 'முதல் நாள் அவள் உன்னிடம் நடந்துகொண்ட விதத்தை நினைத்துப் பார்' என்று அறிவுறுத்தியது. நினைத்துப் பார்த்தேன். பார்க்கப் போனால் நானா அவள் உத்தியோகத்துக்கு உலைவைத் தேன்? எதற்காக என்மீது அவ்வளவு குரோ தம் பாராட்டுகிறாள்? எனக்குச் சாப்பாடு போடமுடியாது என்று முகத்தில் அடித்தாற் போல் அவள் சொல்வானேன்?

இப்படி நான் எண்ணமிட்டுக் கொண்டிருக் கும்பொழுதே, என் பர்ஸை எடுத்துப் பிரித்து மடிப்புக் கலையாத கரன்ஸி நோட்டுகளை எடுத்து என் கைகள் அவள் முன்னால் வைத்து விட்டன.

"ஓர் உயிரைக் காப்பாற்ற இந்தப் பணம் உதவுமானால் அதற்காக நான் பெரிதும் சந் தோஷப்படுவேன். நான் யாருக்கும் தீமை நினைக்கிறவன் கூட அல்ல. என் தேவைக்கு அதிகமானது இந்தப் பணம்!" என்றேன் தரையைப் பார்த்தபடி.

"நல்ல பிள்ளை அம்மா இவர்! தன்னால் தான் உனக்கு வேலை போய் விட்டது என்கிற வேதனை இவர் மனத்தைப் பூராவாகக் குடைந்து கொண்டிருப்பதை இவர் பேச்சின் மூலம் உணருகிறேன் அம்மா.... எடுத்துக் கொள் பணத்தை. உன் தாயைக் காப்பாற்ற ஆண்டவன் தானம்மா இவரை அனுப்பியிருக் கிறார். தங்கமான பிள்ளை. ஏழைகள் கஷ்டத் தைக் கண்டு இளகுகிற மனம் அம்மா இவ ருக்கு!" என்றார் ஹெட் கிளார்க்.

நெஞ்சம் நெகிழ்வதை நீர் துளிர்க்கும் விழிகள் விளக்கம் தந்தன. அவள் கண்கள் இப்பொழுது சிந்திய கண்ணீர் ஆனந்தக் கண்ணீராகத் தானிருக்க வேண்டும்.

பணம் கைமாற, மருந்து இடம் மாற, கமலாவின் தாயாரின் ஜாதகத்தில் கிரகங்கள் இடம் மாற, எமன் ஏமாந்து இளிச்சவாயனாக மாற, நான் மட்டும் மாறாமல் அந்த வெந்தும் வேகாத ஹோட்டல் சாப்பாடு சாப்பிட்டுத் தீராத வயிற்று வலியால் அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு துடிதுடித்த ஒரு நாளில் —

"சாப்பிட வாருங்கள்!" என்று அழைத்த படி வந்தாள் கமலா. கல்யாணப் பெண்ணைப் போல நாணிக் கோணித் தலைகுனிந்து விரல் களால் புடவை நுனியில் - சேஷ்டை செய்த படி அவள் வந்து நின்றதுமே எனக்குப் புரிந்து விட்டது!

"சாப்பாடா? உன் வீட்டிலா?" என்று பறந்தேன். 'ஹோட்டலுக்கு ஒரு கும்பிடா?'

"ஆமாம்! இனி மேல் தினசரி என் வீட்டில் தான் சாப்பாடு! அதுவும் உங்களுக்கு மட்டும் தான்!" என்றவள் முகத்தில் எந்த ரோஸ் பௌடரும் பூசியிருக்கவில்லை. ஆனாலும் அந்த முகத்தில் நாணத்தின் செம்மை அந்த வானம் போல் சிவந்து பரவியதே அது—

அடுத்த தீபாவளியைத் தலை தீபாவளியாக அவள் வீட்டில் நான் கொண்டாடத்தான் போகிறேன்!


உங்கள்
டார்ச்சில்
எஸ்ட்ரெலா
பொருத்தி
இரவில்
சூரிய
பிரகாசததைப்
பெறுங்கள்
ESTRELA
YOUR GUIDE IN DARKNESS
எஸ்ட்ரெலா
ஃப்ளாஷ் லைட் பாட்டரிகள்
டார்ச்சுகள் மற்றும் பல்புகள்



அத்தியாயம் பதினேழு

தீமையின் ஆணிவேர்

சுட்டிய சுவரை இடித்துத் தள்ளச் சொல்லக் கூடிய அளவுக்கு நெஞ்சுத் துணிவு கொண்ட ஓர் அதிகாரியை - அதற்கு முன்பு கண்டிராக்டர் மன்னூர் சாமி கண்டதில்லை. கொத்தனார்களும் சித்தாட்களும் செல்வரத்தினத்தின் கோபத்தைக் கண்டு வெலவெலத்துப் போய் நின்றனர். மகனைச் சந்திப்பதற்கு வந்திருந்த குமரவேல் அவனுடைய பிடிவாதத்தைக் கண்டு திகைத்துப் போய் விட்டார்.

"இன்ஜினியர் சார்!" என்று செல்வரத்தினத்தை அழைத்துக் கொண்டு அவனிடம் நெருங்கி வந்தார் மன்னூர்சாமி. "நீங்கள் இந்தச் சுவரை இடிக்கச் சொல்கிறதினாலே, இந்த ஊரிலே எனக்கு இருக்கிற மானம், மரியாதை, மதிப்பெல்லாம் இடித்துத் தள்ளப் பார்க்கிறீங்க: கூலிக்காரப் பயல்களுக்கு முன்னாலே என்னை அவமானப் படுத்துறீங்க!" என்றார்.

செல்வரத்தினம் மௌனமாக அவரை உற்றுப் பார்த்தான். மானம், மரியாதை, மதிப்பு அவற்றைப் பற்றிப் பேசுவதற்கே தகுதியற்ற ஒரு மனிதர் அவற்றைக் குறிப்பிட்டது அவனுக்கு எரிச்சலூட்டியது.

"அரை வேக்காட்டுச் செங்கலை வைத்து இந்தச் சுவரை எழுப்பியிருக்கிறீர்கள். ஒன்றுக்குப் பத்தாகச் சிமெண்டில் மணலைக் கலந்து, கலப்படச்சாந்து குழைத்திருக்கிறீர்கள். இன்னும் அஸ்திவாரத்தை எந்த லட்சணத்தில் போட்டிருக்கிறீர்களோ தெரியாது. குழந்தைகளுக்கு வாழக் கற்றுக் கொடுக்கும் அறிவுக் கோயிலான பள்ளிக்கூடத்தைக் கட்டுவதில் இவ்வளவு ஊழலைச் செய்து விட்டு, மரியாதையைப் பற்றிப் பேசுகிறீர்களே...!"

மன்னூர்சாமிக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. 'இரு, உன்னை என்ன செய்கிறேன் பார்!' என்று செல்வரத்தினத்தை விழிகளால் எச்சரித்து விட்டுத் தொழிலாளர்கள் பக்கம் திரும்பினார். "இடித்துத் தள்ளுங்கடா!" எனக் கோபத்தோடு கத்தினார்.


அதற்குப் பிறகு அந்தக் காட்சியைக் காண்பதற்கு அவர் அங்கு நிற்கவில்லை. வேகமாகத் திரும்பிச் சென்று காரில் ஏறிக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பி விட்டார். செல்வரத்தினமும் தன்னுடைய காருக்குள் போய் உட்கார்ந்தான். அடுத்தாற் போல் ஒரு மைல் தூரத்தில் இருந்தது அவன் தங்கியிருந்த அரசாங்க விடுதி.

குமரவேல் மாத்திரம் அதே இடத்தில் நின்றுகொண்டு மன்னூர்சாமியைப் பற்றிய விவரங்களைச் சிறிது சிறிதாக அங்கு வேலை செய்த தொழிலாளர்களிடம் விசாரித்தார். பயந்து நடுங்கிக் கொண்டே தங்களுக்குத் தெரிந்தவற்றை யெல்லாம் அரைகுறையாகக் கூறினார்கள் அவர்கள்.

மன்னூர்சாமி அந்த ஊருக்குள்ளேயே பெரும் புள்ளியாம். அவரிடம் பணக்கட்டும் இருந்தது; ஆள் கட்டும் இருந்தது. அவரிடம் வேலை செய்து பிழைக்க வேண்டிய நிலையிலிருந்தவர்களில் சிலரைப் பொறுக்கித் தமக்குக் கையாளாக வைத்துக் கொண்டு, அந்த ஊரையே ஆட்டிப் படைத்து வந்தாராம் அவர். ஏழைகள் ஏழைகளாகவும் படிக்காதவர்களாகவும் இருக்கும் வரையில்தான் தம்முடைய ஆட்சி அந்த ஊரில் நிலைக்கும்

என்று அவருக்குத் தெரியும். அதனால் தான் அவர் பணக்காரர்களுக்குப் பக்கபலமாக இருந்து, ஏழைகளை எப்போதும் தம்மை எதிர்பார்க்கும் நிலையில் வைத்திருந்தார்.

குமரவேல் இவ்வளவையும் கேட்டுவிட்டு மெதுவாக அங்கிருந்து புறப்பட்டு மன்னார்சாமியின் வீட்டுக்குச் சென்றார். 'இளம் கன்று பயமறியாது' என்பதுபோல் செல்வரத்தினம் துடுக்குத்தனமாக நடந்து கொண்டது போல் அவருக்குத் தோன்றியது. எப்படியாவது மன்னார்சாமியிடம் சொல்லி, அவரைச் சமாதானப்படுத்தி அவர்களுக்குள் ஓர் உடன்பாடு செய்துவைக்க வேண்டுமென்று அவர் நினைத்தார்.



மன்னார்சாமியின் வீடு பளிங்குக் கற்களும் சலவைக் கற்களும் தேக்கு மரத் தூண்களுமாக விளங்கியது. அந்தச் சிற்றூருக்குள் அவர் ஒரு சிறிய அரண்மனையையே கட்டிக் கொண்டிருந்தார். அக்கம் பக்கத்து வீடுகளும் ஓரிரண்டு தெருக்களும் அங்கே செல்வக் கொழிப்பைத்தான் காட்டின. ஆனால் அந்த ஊருக்குத் தான் ஒரு வசதியான ஒரு பள்ளிக்கூடத்தை அவர்கள் அமைத்துக் கொள்ளவில்லை.

பொதுச் செலவில் உருவான புதிய பள்ளிக்கூடமோ மன்னார்சாமியின் கலப்படத் தயாரிப்பாக உருவாகிக் கொண்டிருந்தது........

செல்வரத்தினத்தின் தகப்பனார் தம்மைப் பார்க்க வந்திருப்பதாகத் தெரிவித்தவுடன், எதுவுமே நடக்காதவர் போல் புன்னகை முகத்துடன் குமரவேலை வரவேற்றார் மன்னார்சாமி. காப்பி சாப்பிடச் சொல்லி உபசாரம் செய்தார். பிறகு தனியே தம்முடைய அறைக்கு அழைத்துக் கொண்டு சென்றார். ''நீங்க என்ன விஷயமா வந்திருக்கீங்க?'' என்று கேட்டார்.

நேரடியாக மன்னார்சாமி கேள்வியைத் தொடங்கியவுடன் ஒரு கணம் ஒன்றும் பேச முடியாமல் திணறினார் குமரவேல். தம்மைவிட அந்த மனிதர் கெட்டிக்காரர் என்பதும் திறமைசாலி என்பதும் அவருக்கு விளங்கி விட்டன. எல்லாவற்றையும் விட மன்னார்சாமி துணிவுள்ளவர் என்பதையும் அறிந்தார்.

''ஒண்ணுமில்லே, எதேச்சையாய் என்னோட பிள்ளையைப் பார்த்திட்டுப் போகலாம்னு வந்தேன். வந்த இடத்திலே நடந்த விவகாரம் எனக்கு என்னவோ போல இருந்தது. இந்தக் காலத்துப் பிள்ளைகளே இப்படித்தான்! சிரமம் தெரியாமல் வளர்த்து மனிதனாக்கி விட்டேன். காரும் வாங்கிக் கொடுத்திருக்கேன்! இப்போ, அவன் உத்தியோகம் பார்த்துத்தான் சம்பாதிக்க வேணும்கிற அவசியமில்லே....''

மன்னார்சாமியிடம் தாமும் ஒரு பணக்காரர்தாம் என்பதை மறைமுகமாகச் சொல்லி வைத்தார் குமரவேல். பணத்தின் காரணத்தால் ஒரு மனிதனுக்குத் துணிவு பிறந்திருக்குமானால், பணத்தைக் காட்டியே அந்த மனிதனின் துணிவைக் குலைக்க முடியும் என்பது அவர் நம்பிக்கை.



குமரவேலின் பேச்சு மன்னார்சாமியிடம் தன் வேலையைச் செய்யத் தொடங்கி விட்டது. அவர் யோசனை செய்து விட்டு, ''நம்ப பிள்ளைகளுக்குப் பணத்தோட அருமையும் தெரியமாட்டேங்குது; மனுஷனோட மதிப்பும் தெரிய மாட்டேங்குது!'' என்றார். ''ஏதாவது தப்புத் தவறு நடந்திருந்தால் அதை என்கிட்டே தனியாக் கேட்கக் கூடாதா? நாலு பேருக்கு மத்தியிலே வைச்சா என்னை அவமானப்படுத்தறது? வேலை செய்யற மேஸ்திரி இருக்கானே, அவன் கண்டும் காணுமலும் எதையாவது செய்து தொலைச்சிருப்பான்!''

குமரவேல் தமக்குள் சிரித்துக் கொண்டார். தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டால், பொறுப்பை வேலைக்காரர்கள் மீது சுமத்துவதும், புகழும் ஆதாயமும் வந்தால் அதைத் தாமே ஏற்றுக்கொள்வதும் பண உலக சம்பிரதாயம் என்பது அவருக்குத் தெரியாத விஷயமல்லை

''நடந்ததை விட்டுத் தள்ளுங்கள். வேறு யாரையும் தப்புச் சொல்ல வேண்டாம். உங்க நிலையிலே இருந்தால் நானும் இப்படித்தான் செய்திருப்பேன்'' என்று அவருக்கு ஒத்துப் பாடினார் குமரவேல்.

இதற்குப் பிறகு ஒருவரையொருவர் புரிந்து கொண்டது போல் இருவரும் தாராளமாகப் பேசிக் கொள்ள ஆரம்பித்தார்கள். இவர் அவருடைய தொழில்களைப் பற்றிக்கேட்டறிந்தார். அவர் இவருடைய விவரங்களைக் கேட்டுக் கொண்டார்.

கடைசியில் உள்ளே சென்று ஒரு கணக்கு நோட்டுப் புத்தகத்தை எடுத்து வந்து குமரவேலிடம் நீட்டினார் மன்னார்சாமி.

''இங்கே நமக்குள்ளே ஒளிச்சு மறைச்சு எதுக்காகப் பேசணும்? இப்ப நான் பார்க்கிற வேலையிலே ரூபாய்க்கு ரெண்டணு லாபம் கிடைச்சா அதுவே பெரிசுதான்!''

''ஓஹோ!'' என்று தலையாட்டிக் கொண்டே நோட்டில் கண்ணேட்டம் விட்டார் குமரவேல்.

''சாமான்களோட விலை மதிப்பைக் காயிதத்திலே எழுதி அவுங்க 'எஸ்டிமேட்' போடுறாங்க. எவ்வளவு விலை அதிகமாகக் கொடுத்து வாங்கியிருக்கேன்னு நீங்களே பாருங்க. இப்போ வேலையிலேயிருந்து விலகி உபகாரச் சம்பளம் வாங்கிட்டுப் போனரே, அந்த ஆளுக்கு நான் எவ்வளவு பணம் கொட்டி அழுதிருக்கேன்னு நீங்களே பாருங்க! இன்னும் இடையிலே முட்டுக்கட்டை போடுகிற எத்தனை நந்திகளை நான் சமாளிக்க வேண்டியிருக்கு?..... இதெல்லாம் உங்க பிள்ளைக்குத் தெரிய வேண்டாம்?''

''நீங்க சொல்றதெல்லாம் நியாயம் தான்!'' என்று சொல்லிக் கொண்டே, மன்னார்சாமியின் ரகசியக் கணக்கு நோட்டைப் பக்கம் பக்கமாகப் புரட்டி

ஞர் குமரவேல். மன்னுர்சாமியோ, தாம் அநியாயமாய்க் கொடுத்த ஒவ்வொரு காசுக்கும் ஒழுங்காகக் கணக்கு வைத்திருந்தார்.

"இந்தச் செலவுக் கணக்கையெல்லாம் நான் வெளியிலே சொல்ல முடியுமா? கிடைக்கிற லாபத்திலே, போனது போக, எனக்கு மிஞ்சுகிறது கொஞ்சம் தான். கை நஷ்டப்பட்டுக் கடனாளியாகத் திண்டாடறதுக்காக நான் இந்தத் தொழிலைச் செய்ய வரலே!"

வெள்ளைக்காரன் ஆண்ட காலத்திலிருந்து மன்னுர்சாமி கொள்ளை கொள்ளையாய்க் கொடுத்து வந்திருந்தார் என்பதும், தாமும் வஞ்சனையில்லாமல் வாரிக் கொண்டிருந்தார் என்பதும் தெளிவாகக் குமரவேலுக்குத் தெரிய வந்தன.

தம்முடைய மகனை அவர் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை. அதேசமயம் மன்னுர்சாமியின் உறவும் அவருக்குத் தேவையாக இருந்தது.

"காலம் மாறிப் போச்சு, பாருங்க! எங்கே பார்த்தாலும் 'நம்ப நாடு, நம்ப மக்கள்'னு பேச்சுக் கிளம்பியிருக்கு. அதனுலே என்னோட பையன் தன்னோட கடமையிலே கொஞ்சம் கண்டிப்பாக நடந்துக்கருன்."

"வெள்ளைக்காரன்தான் கப்பல் ஏறிஞனே தவிர, அவனோட கூட்டாளியான நம்பள்ளாம் இங்கேதானே இருக்கோம்? அவன் கூட எல்லாச் சட்ட திட்டங்களையும் ரொம்பக் கண்டிப்பாய்த் தான் எழுதி வைச்சிட்டுப் போயிருக்கான். காரியத்திலே அது நடக்கிறப்போ எவ்வளவு சங்கடம் வருது, பாருங்க!"

வாழ்க்கையின் எழுதாத சட்டங்களை அனுபவத்தால் கரைத்துக் குடித்தாற் போன்று மளமளவென்று பேசிக் கொண்டு போனுர் மன்னுர்சாமி. பல்வேறு திறமைகளோடு அவருக்கு வாய்ச் சாதுரியமும் இருந்தது. மனிதர்களில் யாருமே யோக்கியர்களாகவும் நாணயமுள்ளவர்களாகவும் இருக்க முடியாது என்றும், அதனுல்தான் உலகத்தில் போலீஸ், கோர்ட்டு, குற்றச் சாலை முதலியவை இருக்கின்றன வென்றும் அவர் வாதமிட்டார்.

"இதோ, பாருங்க! காலம் மாறிப் போச்சுன்னு நம்பளும் மாறிக்கணும்னு அர்த்தமில்லே. காட்டிலே புலியைப் படைச்ச கடவுள்தான் மான் குட்டியையும் சேர்த்துப் படைச்சிருக்கான். புலி மானை அடிச்சுத் திங்கருப்பிலே, மனுஷனை மனுஷன் அடிச்சுத் தின்னுத்தான் இங்கே நல்லா வாழ முடியும். சந்தர்ப்பம் கிடைச்சவன் சந்தர்ப்பம் கிடைக்காதவனோட வயித்திலே அடிச்சுத் தீர வேண்டியதுதான்!"

"அடடா! நீங்க எவ்வளவு பெரிய விஷயங்களைத் தெரிந்து வைச்சிருக்கீங்க!" என்று பாராட்டினுர் குமரவேல்.

"முடிவாச் சொல்லிட்டேன்: அநுபவமில்லாதவங்கதான் அநுபவமுள்ளவங்களைப் பார்த்து மாறிக்கணும். உங்க பிள்ளைகிட்டே சொல்லி, பேசாமல் அவரை நம்ப வழிக்கு இழுத்துக்கிட்டு வாங்க. இல்லேன்னு இந்த உலகத்திலே அவர் ரொம்பக் கஷ்டப்பட வேண்டியிருக்கும். இன்னைக்கு நடந்த விஷயம் சின்ன விஷயம். ஊருக்குப் பொதுவான பள்ளிக்கூடம் எப்படியிருந்தால் அவருக்கு என்ன? திரும்பவும் 'ரிப்பேர்' வந்தால் மறுபடியும் செலவு செய்து பழுது பார்த்திட்டாப் போகுது. அவரோட சொந்தப் பணத்தையா அவர் கையை விட்டுச் செலவு செய்யப் போகிருர்? நீக்குப் போக்கா நடந்துக்கிட்டாருன்னு பணம் தன்னுலே அவரைத் தேடி வரும்னு சொல்லுங்க!"

குமரவேலை நப்பாசை பிடுங்கித் தின்றது. மன்னுர்சாமி உதிர்த்த ஒவ்வொரு சொல்லையும் அவர் பொன்மொழியாக ஏற்று மனப்பாடம் செய்து கொண்டார். ஆனல் இந்தப் பொன்மொழிகளை அவர் மகன் ஏற்றுக் கொள்வானு என்பதுதான் அவருக்குச் சந்தேகமாக இருந்தது.

விடைபெற்றுக் கொண்டு எழுந்தார் குமரவேல். எழுந்தவரிடம் ஓர் எச்சரிக்கையும் செய்து வைத்தார் மன்னுர்சாமி.

"நல்ல வேளை, நீங்க இங்கே வந்து சேர்ந்தீங்க. இல்லேன்னு, இந்த விஷயத்திலே ரெண்டுலே ஒண்ணு நடந்திருக்


ஸ்ரீ
ஸ்ரீநிவாஸ்
வாயில்
லான்
பிரிண்டட்
பாப்ளின்
மனதை வசீகரப்படுத்தும்
ஆடைகள்

கும். ஒன்னு, அவரை இந்த இடத்தை விட்டே மாத்தறதுக்கு வழி செய்திருப்பேன்; முடியலேன்னு என் தொழிலையாவது விட்டிருப்பேன். நான் ஒன்னும் கிள்ளுக்கீரையில்லே!"

ஆமாம்; அவருடைய தீமையைக் கிள்ளுக் கீரையைப்போல் பறித்தெறிந்து விட முடியாது. அது ஆழமாய் ஆணி வேர் விட்டு அவரைக் கொழுக்க வைத்திருந்தது.

அத்தியாயம் பதினெட்டு

நன்மைக்குப் பாதுகாப்பு

ஊருக்கு வெளியிலிருந்த பொது விடுதி மரக் கூட்டத்துக்கு மத்தியில் அமைதியானதோர் இடத்தில் அமைந்திருந்தது. செல்வரத்தினம் காரைக் கொண்டுவந்து வெளியில் நிறுத்திவிட்டுக் கைகால் கழுவிக் கொண்டு வந்தான். வேலைக்காரன் ஓட்டலில் எடுத்து வந்த சாப்பாடு தயாராக இருந்தது. செல்வரத்தினத்துக்கும் பசியெடுத்தது. ஆனால் ஊரிலிருந்து வந்த தன் தந்தையைவிட்டு விட்டு அவனுக்குச் சாப்பிட மனம் வரவில்லை. அவருக்காகக் காத்திருந்தான்.

அவர் எங்கு சென்றிருந்தார் என்பது அவனுக்குத் தெரியாது.

குமரவேல் வந்தவுடன் இருவரும் ஒன்றாகச் சாப்பிட உட்கார்ந்தார்கள். சற்று முன்பு நடந்த நிகழ்ச்சிகளை அறவே மறந்தவன் போல் அவரிடம் கல கலப்பாகச் சிரித்துப் பேசினான் செல்வரத்தினம். குடும்ப விஷயங்களையும் தாயாரைப் பற்றியும் ஆவலோடு விசாரித்தான். அந்த நேரத்தில் அவன் கடமை நினைவு கொண்ட உத்தியோகஸ்தனாகக் காட்சியளிக்கவில்லை. பாசமும் பணிவும் கொண்ட மகனாகவே அப்பொழுது தோன்றினான்.

ஓட்டல் சாப்பாடு தயாராகத்தான் இருந்தது. என்றாலும் அதைச் சுவையோடு சாப்பிட்டான் அவன். உணவு முடிந்தவுடன் இருவரும் சோபாக்களில் சாய்ந்து களைப்பாறினார்கள். திறந்த சன்னல்கள் வழியே இதமான வேப்ப மரக் காற்று வீசியது.

"செல்வம்! முந்திக்கு இப்ப நீ ரொம்பவும் இளைச்சுப் போயிட்டே. எத்தனை நாளைக்குத்தான் இப்படி ஓட்டல் சாப்பாட்டிலே காலந்தள்ள முடியும்?" என்று மிகுந்த கவலையோடு கேட்டார் குமரவேல்.

முன்பு இருந்ததை விடத் தான் இப்போது ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியோடும் இருப்பதாகக் கூறினான் செல்வரத்தினம். ஆபீஸ் அலுவல்களோடு வெளியிடங்களுக்கும் மேற்பார்வைக்குச் சென்று வருவதால் அந்த வேலை தனக்கு உற்சாகம் தருகிறதென்றான்.

அவனிடம் இரண்டு விஷயங்களைத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டியிருந்தது குமரவேலுக்கு. ஒன்று, அவர் சென்னையிலிருந்து புறப்பட்டு எதற்காக அவனைப் பார்க்க வந்தாரோ அது. மற்றொன்று, மன்னார்சாமியை அவர் சந்தித்துப் பேசி வந்த விவரம்.

முதலில், சென்னையில் தமக்கும் சித்திராவின் தமையனுக்கும் ஏற்பட்டிருக்கும் வியாபாரத் தொடர்புகளைப் பற்றிக் கூறினார். சித்திராவே தம்முடைய தொழிலில் பாதிப் பங்கு மூலதனம் போட்டிருக்கிறாள் என்பதையும் வெளியிட்டார். ஆனால் வேண்டுமென்றே முருகையன் அவர்கள் வீட்டில் இருக்கும் செய்தியை அவர் வெளியிடவில்லை.

-"அந்தப் பெண் சித்திரா இருக்காளே, அவளைப் பார்த்தால் வெறும் பெண்ணாகவே எனக்குத் தோணலே... மகாலட்சுமியே அவதாரம் எடுத்து வந்தாப்பிலே அவ முகத்திலே ஐசுவரியக் களை தாண்டவமாடுது!"

சித்திராவைப் பற்றி அவர் குறிப்பிட்டவுடன் ஆர்வத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தான் செல்வரத்தினம். அவனுக்குள்ள ஆவலைப் புரிந்து கொண்ட குமரவேல், "அந்தப் பெண்ணை நீ சமீபத்தில் பார்த்ததில்லையே?" என்றார்.

"இல்லையப்பா! வெகு நாட்களுக்கு முன்பு பார்த்ததுதான்."

அவளுடைய படிப்பு, திறமை, சாதுரியம் இவற்றை ஒவ்வொன்றாக விவரித்து விட்டு, "சித்திராகூட நீ ஏன் அவங்க வீட்டுக்கு வரதில்லேன்னு கேட்டது; கட்டாயம் அழைச்சுக்கிட்டு வர்றதாகச் சொல்லியிருக்கேன்" என்று சொன்னார்.

செல்வரத்தினத்தின் மனத்துக்குள் புதியதொரு நீர் ஊற்றுக் கொப்புளிப்பது போல் குளுமையான உணர்ச்சி பொங்கியது. அவன் உத்தியோகத்துக்கு வந்த பிறகு, தனிமையான வேளைகளில், தன் தனிமையில் ஏதோ ஒரு குறைபாட்டைக் கண்டிருக்கிறான். உழைத்துக் களைத்துத் தன் அறைக்குத் திரும்பும் போது அவனை ஆவலுடன் வரவேற்பதற்கு யாருமில்லை. காதல் என்கிற கற்பனைக் கனவுகள் அவனையறியாமலே அவனை இன்பத்தில் மிதக்கச்

செய்திருக்கின்றன. சித்திராவின் உருவம் அவன் கனவுகளில் அழுத்தமாகப் பதியவில்லைதான். ஏதோ ஒரு பெண்ணின் கற்பனை அடிக்கடி தானாகவே வந்து கொண்டிருந்தது. 'ஒரு வேளை அவன் சித்திராதானோ!' என்று இப்போது நினைத்தான்.

''செல்வம்! உனக்கும் வயசாயிடுத்து. சீக்கிரமாக ஒரு கல்யாண ஏற்பாடு செய்திட்டாத்தான் நல்லது.''

''உங்களுடைய விருப்பத்துக்கு நான் தடை சொல்லவில்லை அப்பா. ஆனால், சீக்கிரம் வேலையும் நிச்சயமாகி, உத்தியோக உயர்வும் கிடைக்கும் போல் தெரிகிறது. அப்போது செய்து கொள்ளுகிறேன்...''

''பார்ப்போம்!'' என்று எங்கோ நினைவாகப் பெருமூச்சு விட்டார் குமரவேல். ''சித்திரா எனக்கு மருமகளாகக் கிடைச்சா அது என் பாக்கியம்தான். ஆனால் அதுக்கு இப்பவேயிருந்து முயற்சி செய்யணும். நம்பளைவிடப் பெரிய இடமாயிருக்கிறதாலே அவ்வளவு சுலபமா விட்டுக் கொடுத்திட மாட்டாங்க!''

தம்முடைய மகனுக்கு ரோஷமூட்டுவதற்காக இப்படிச் சொல்லி வைத்தார் குமரவேல். அவர் எதிர்பார்த்தபடியே செல்வரத்தினமும் அதில் சற்றுச் சுறுசுறுப்புக் காட்டினான்.

''நாமும் அவர்களை விட எதிலும் குறைந்தவர்கள் இல்லையே! இன்னும் எதிர்காலத்தில் எனக்கு உத்தியோகத்தில் வளர்ச்சிக்கு வாய்ப்பு இருக்கிறது. எவ்வளவோ காரியங்களை வெற்றிகரமாகச் செய்ய வேண்டுமென்று ஆசை வைத்திருக்கிறேன் நான்'' என்றான்.

அவனுக்கும் ஆசைகள் இருக்கின்றன என்பதைக் கேள்வியுற்றவுடன் அளவற்ற ஆனந்தம் ஏற்பட்டது குமரவேலுக்கு.

''அப்பா! எனக்கு இந்த வேலை மிகவும் பிடித்திருக்கிறது. எதிர்காலத்தில் இந்த நாட்டுக்கே ஒரு புதிய உருவத்தையும், நாட்டு மக்களுக்குப் புது வாழ்வையும் கொடுக்கும் சக்தி படைத்த வேலை இது. ஒவ்வொரு புதிய கட்டடமும் உருவாகி முடிவதைப் பார்க்கும் போது, அதில் என் சிறு பங்கும் இருக்கிறதென்று நினைத்தால் எனக்கு எவ்வளவு பெருமை தெரியுமா?'' என்றான்.

முகத்தைச் சுளித்துக் கொண்டு உற்சாகமில்லாமல் தலையாட்டி வைத்தார் குமரவேல். செல்வரத்தினமோ மேலும் மேலும் தன் ஆசைகளைத் தொடர்ந்து கூறினான்.

''நாடு நம்முடையதாகி விட்டது. இப்போது மகத்தானதொரு புதுவாழ்வுப் போராட்டம் ஆரம்பமாகப் போகிறது. அதில் மக்கள் எல்லோரும் ஒன்று கூடி

உழைத்து நாட்டிலிருந்து வறுமையை விரட்டப் போகிறார்கள். எங்கு பார்த்தாலும் புதிய புதிய சாலைகள், சோலைகள், பள்ளிகள், கலை அரங்குகள் கட்டுவார்கள். பெரிய பெரிய நீர்த் தேக்கங்களும் அணைக்கட்டுகளும் ஏற்படுத்தி, ஒரு நெல் விளைந்த இடத்தில் ஒன்பது நெல் விளைவிக்கச் செய்வார்கள். புதிதாக விடுதலை பெற்ற வேறு சில நாடுகளில் இப்படி யெல்லாம் செய்துதான் வளம் கொழிக்கச் செய்திருக்கிறார்கள். இங்கேயும் அப்படிப்பட்ட திட்டங்கள் வரத்தான் போகின்றன. திட்டங்களைத் திறமையோடும் நேர்மையோடும் நிறைவேற்றுவதுதான் சிரமம். ஆனால் அந்தச் சிரமமான பணியில் என் பங்கைச் செய்வதற்கு நான் தயங்கப் போவதில்லை!''

உற்சாகத்துடன் செல்வரத்தினம் பேசப் பேசக் குமரவேலுக்கு அடி வயிறு பற்றி எரிந்தது.

''ஆமா, இவ்வளவு சிரமப்பட்டு நீ காரியத்தைச் செய்தா, அதனாலே உனக்குக் கிடைக்கப் போகிற லாபமென்ன?'' என்று கேட்டார் குமரவேல்.

''திறமைக்கும் நாணயத்துக்கும் தகுந்தாற்போல் பதவியும் உயரும்; பொறுப்பும் பெருகும். பிற்காலத்தில் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவு செய்து ஆயிரக் கணக்கான மனிதர்களை வைத்துக் கொண்டு வேலை செய்யக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும். எனக்கு மேலே உள்ளவர்கள் என்னை வாழ்த்துவார்கள். எனக்குக் கீழே வேலை செய்பவர்கள் சுறுசுறுப்பும் ஆனந்தமுமாகத் தங்கள் வேலைகளைச் செய்து முடிப்பார்கள். அவர்களுக்கும் அதிகமான ஊதியம் கொடுக்க முடியும்; வேலையும் சீக்கிரமாக முடிந்து விடும். பணச் சக்தியும் விரயமாகாது; மனித சக்தியும் விரயமாகாது!''

''வீணாய் மனக் கோட்டை கட்டிப் பார்க்கிறே மகனே, மனக் கோட்டை கட்டிப் பார்க்கிறே!'' என்று துடித்தார் குமரவேல். ''உன்னோட நாணயத்துக்கும் - திறமைக்கும் செல்லாக் காசுக்கு இருக்கிற மதிப்புக்கூட இருக்காதடா இந்த உலகத்திலே!''

''அப்பா!'' என்று வேகமாய்க் கத்தினான் செல்வரத்தினம். ''சத்தியத்தின் சக்தி எவ்வளவென்று உங்களுக்குத் தெரியாது அப்பா! சத்தியத்தோடு சோதனைப் போராட்டம் நடத்திய காந்தியின் நாடு இது.''

''இதோ பார்! இப்போ நான் போய் மன்னார்சாமியைப் பார்த்துப் பேசி விட்டுத்தான் இங்கே வந்தேன். நீ மட்டும் இங்கே சத்தியத்தைப் பத்திப் பேசிக்கிட்டிருந்தியோ, உனக்கு இந்த உத்தியோகம் நிலைக்காது. சத்தியத்தைக் காந்திகிட்டே விட்டுட்டு, உத்தியோகத்திலே புத்திசாலித்தனமா நடந்துக்க. புத்தியும் யுக்தியும் தான் சோறு போடும்!''

''என்ன? மன்னார்சாமியைச் சந்தித்தீர்களா?'' திடுக்கிட்டான் செல்வரத்தினம். ''நீங்கள் ஏன் அவரிடம் போக வேண்டும்? உங்களுக்கும் அவருக்கும் என்ன சம்பந்தம்?''

மகனுடைய கோபத்தைக் கண்டு வெலவெலத்துப் போனார் குமரவேல். அவன் கண்களில் தாண்டவமாடிய கடமை வெறி நடுநடுங்கச் செய்தது.

''மகனே! நீ என்னோட பிள்ளையடா! நீ என்னைவிட நல்லா வாழணும்கிற ஆசை தான் காரணம் நான் போனதற்கு!''

''அப்பா! நீங்கள் என்ன சொன்னாலும் என் கடமையில் நீங்கள் தலையிடுவது எனக்குப் பிடிக்காது. மன்னார்சாமி என்ற மனிதரோடு போகிற விஷயமில்லை இது. அவர் சுரண்டுகிறார் என்பது அவரிடம் வேலை பார்க்கும் எல்லோருக்கும் தெரிகிறது. நன்மைக்கும் சரி, தீமைக்கும் சரி, அதைச் சுற்றியுள்ள இடங்களில் பரவும் சக்தி உண்டு. இப்போது தீமை என்கிற தொத்துநோயை அவர் தொழிலாளர்களிடமும் பரப்பியிருக்கிறார். அவர்களுக்குப் பணத்தைச் சுரண்ட வழியில்லாததால் தங்கள் உழைப்பைக் குறைக்கிறார்கள். உழைப்பில் அலட்சியம், சலிப்பு, வெறுப்பு எல்லாமே தாண்டவமாடுவதை நான் கவனித்தேன். —ஊருக்குப் பொதுவான ஒரு நல்ல காரியத்தைச் செய்வதில் இவ்வளவு ஊழலும் அலட்சியமும் இருந்தால் நாம் என்றைக்கு உருப்படியாக வாழப் போகிறோம்? வாழ்க்கையின் கீழ் மட்டத்தில் உள்ள கோடானு கோடி மக்களுக்கு உற்சாகமும் ஊக்கமும் வேண்டுமென்றால், அதைத் தர்மத்தின் சக்தியால்தான் செய்ய முடியும். சமுதாயப் பயிரைக் கெடுக்கும் களைகள் இந்த மன்னார்சாமிகள்!''

''இதோ பார், தேன் எடுக்கிறவன் புறங்கையை நக்கிப் பார்க்காமல் இருப்பானா?'' என்றார் குமரவேல்.

''சட்டம் அவன் கையை வெட்டி விடும் என்று தெரிந்தால் ஏன் இருக்க மாட்டான்? தர்மத்துக்குப் பயப்படாதவனுக்கு வேறு என்ன வழி?''

தம் மகனை எப்படித் திருத்துவது என்று வழி தெரியாமல் தவித்தார் குமரவேல். இன்னும் சில நாட்கள் அவனோடு தங்கியிருந்து அவனுக்கும் பாதுகாப்பாக இருக்க விரும்பினார். தீமையின் வலிமைக்கு எதிராக நன்மைக்குப் பாதுகாப்பாக மற்றொரு தீமை ஒட்டிக் கொள்ளப் பார்த்தது. வெற்றி எந்தப் பக்கமோ! (தொடரும்)



திருப்பணி

வியார்ஜி

"கடவுளை நம்பினோர் கைவிடப்படார் தான்!" என்று தனக்குள் வேடிக்கையாகச் சொல்லிக் கொண்டான் கன்னையன்.

ஆனால் கன்னையன் அந்தக் கடவுளை 'ஏனோ தானோ' என்று அசிரத்தையாக ஒன்றும் நம்ப வில்லை. துணிந்து அவரையே மூலதனமாக வைத்துக் கொண்டு தொழிலில் இறங்கி விட்டிருந்தான் அவன்.

'அடடா! பிழைப்பதற்கென்று இப்படி ஒரு சுலபமான வழி இருக்கிறதென்று முன்பே தெரியாமற் போய் விட்டதே' என்பது தான் அவனது தற்போதைய வருத்த மெல்லாம்!

கன்னையன் முதலில் தன்னுடைய காரியம் 'அவ்வளவு இலகுவில் கைகூடும் என்று எதிர்பார்க்கவில்லை. அதற்கேற்றாற் போலவே ஆரம்பத்தில் அவன் முயற்சி செய்த இடங்களில் எல்லாம் அவனுக்குத் தோல்வியே ஏற்பட்டது.

கன்னையன் செய்ததெல்லாம் இதுதான். நாற்பது பக்கம் நோட்டுப் புத்தகம் ஒன்று வாங்கினான். 'சிங்கப்பூர் முடி திருத்தகத்'தின் உரிமையாளர் மைனர் சிங்காரத்திடமிருந்து ஒரு பழைய நியூஸ் பேப்பர் வாங்கி அதை நோட்டுப் புத்தகத்துக்கு அட்டையாகப் போட்டான்.

மஞ்சள் குழைத்து நோட்டுப் புத்தகத்தின் முதல் பக்கம் முழுவதும் பூசினான். நான்கு மூலைகளிலும் தடவினான். முதல் பக்கத்தின் நட்ட நடுவில் "ஓம்" என்று பெரிதாக எழுதி வைத்தான்.

தான் எப்பொழுதோ படித்த நோட்டீஸ் ஒன்றை ஞாபகப்படுத்திக் கொண்டு ஏறக்குறைய அதிலிருந்த மாதிரியே ஒரு துண்டுக் காகிதத்தில் எழுதிப் படித்துப் பார்த்தான்.

"இப்பவும் இந்தக் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கி எண்ணற்ற பக்த கோடிகளுக்கு அனுக்கிரகம் செய்து வரும் கன்னும்பட்டி முடக்குப் பிள்ளையார் கோயில் மிகவும் சேதமாகி விட்டிருப்பதால் மேற்படி கோயிலைப் புதுப்பிக்கும் திருப்பணிக்கு ஆஸ்திக மகா ஜனங்கள் தங்களாலான திரவிய சகாயம் செய்து முடக்குப் பிள்ளையாரின் அருள் கடாட்சத்துக்குப் பாத்திரராய் இகபர சுகாதிகளை அடைய வேண்டுமென்று கோரப்படுகிறார்கள். இப்படிக்கு—கன்னும்பட்டி ஆஸ்திக மகாஜனங்கள்."

இரண்டு மூன்று முறைதானே படித்துப் பார்த்ததில் அவனுக்கு மிகவும் திருப்தி ஏற்பட்டது. வாசகம் கனகச்சிதமாகத் தான் அமைந்து விட்டது.

ஆனால் அதில் ஒரு சிறிய சங்கடம் இருந்தது.

மேற்படி விஷயத்தைக் கன்னையன் நோட்டுப் புத்தகத்தில் தன்னுடைய கோழி கிளறுந் போன்ற கையெழுத்திலேயே எழுதுவதற்குத் தயாராக இல்லை. விஷயத்தின் பெருமைக் கேற்ப அதை எழுதும் கையெழுத்தும் சற்றுப் பெரிய மனிதத் தோரணையில் இருந்தால் தான் எல்லாம் சரிப்பட்டு வரும் என்று தோன்றியது.

அதற்கு யாரைப் பிடிப்பது? கன்னையன் அதிகமாக மூளையைப் போட்டுக் குழப்பிக் கொள்ள வில்லை. பத்திரம் எழுதும் மாணிக்க நாயக்கரைப் பிடித்தாற் போகிறது என்று எண்ணிக் கொண்டான்.

அப்படியே மாணிக்க நாயக்கரை அவருடைய வீட்டுத் திண்ணையில் வைத்துப் 'பிடிக்கவும்' செய்தான். ஒரு பக்கம் நூல் வைத்துக் கட்டிய மூக்குக் கண்ணாடியை நெற்றி மேட்டில் ஏற்றி விட்டுக் கன்னையனை நோட்டம் பார்த்து விட்டு, அவன் நீட்டிய காகிதத்தை வாங்கிக் கொண்டார் அவர்.



மாணிக்க நாயக்கர் அந்தக் காகிதத்தைப் படித்து முடிப்பதற்குள் கன்னையன் கையில் தயாராக வைத்திருந்த நோட்டுப் புத்தகத்தில் முதல் தாளை விட்டு விட்டு இரண்டாவது தாள் வரும்படி மடித்துப் புத்தகத்தை அவர் முன்பு நோகாமல் வைத்தான்.

மாணிக்க நாயக்கர் விஷயத்தை மனத்துக்குள் ஒரு முறை படித்து விட்டுப் பிறகு கன்னையனைப் பார்த்து, "இது என்னப்பா விவகாரம்?" என்றார்.

"ஏதோ நல்ல காரியம். உங்க கையினாலே எழுதினால் பொருத்தமாகவும் பெருமையாகவும் இருக்கும்னுதான் ...." என்று இழுத்தான் கன்னையன்.

மாணிக்க நாயக்கர் புன்சிரிப்புடன் எழுதிக் கொடுத்தார். "ஆமாம். எழுத்துக் கூலி முக்கால் ரூபாய் ஆகுமே" என்றார் நோட்டுப் புத்தகத்தை அவனிடம் நீட்டியபடி.

கன்னையன் முதலில் திடுக்கிட்டுத் தான் போனான். ஆனால் உடனே சமாளித்துக் கொண்டு, "அதுக்கென்னங்க. திருப்பணிக்கு நீங்க கொடுக்கிற தொகையிலே கழித்துக் கொண்டாப் போகிறதுங்க" என்று சொல்லி வைத்தான்.

"என்னது நான் கொடுக்கிற தொகையா? நல்ல ஆளப்பா நீ" என்று ஓர் அசட்டுச் சிரிப்புடன் தட்டிக் கழிக்கப் பார்த்தார்.

"அப்படிச் சொல்லக் கூடாதுங்க. மொத மொதல்லே உங்க பேர் இருக்கட்டுமுங்க" என்று பேனாவைத் திறந்து அவரிடம் நீட்டினான் கன்னையன்.

"என் கையெழுத்து ஒன்றும் வேண்டாம்.. இந்த எழுத்துக் கூலி முக்கால் ரூபாயை நீ தர வேண்டாம். அதுவே என் வகையாக இருக்கட்டும்...."

"பரவாயில்லீங்க. நீங்க கையெழுத்துப் போடுங்க. உங்கள் பேருக்கு முன்னாலே ரூபா ஒன்னுன்னு போட்டு விடுங்க. மெய்யாத்தாங்க! நீங்க ஒன்னும் மேலே தர வேண்டாம். சும்மா ரூபா ஒன்னுன்னு போடுங்க. அப்பத்தான் மத்தவங்களும் ரொம்பக் குறைக்காமப் போடுவாங்க."

'பரவாயில்லே! ஒரு ரூபா புண்ணியம் ஓசியில் வருகிறது' என்ற நினைப்புடன் மாணிக்க நாயக்கரும் ரொம்பவும் மகிழ்ந்து போய்க் கையெழுத்திட்டார்.

எத்தனையோ இடங்களில் ஏறி இறங்கி வாசாலகமாகப் பேசி ஒரு பொய்யை மெய்யாக்கி எப்படியோ இருபத்தைந்து ரூபாய் வரைக்கும் சேர்த்து விட்டான் கன்னையன்.

'அட! பைத்தியக்கார உலகமே!' என்று வாய் விட்டுச் சொல்லிக் கொண்டான். கன்னும்பட்டியாவது, முடக்குப்பிள்ளையாராவது? கன்னையனுக்கே இப்பொழுது தன்னுடைய பேச்சுத் திறமையிலும் கற்பனையிலும் அசாத்தியமான நம்பிக்கை வந்து விட்டது. அவனது வாய்த் திறமையோடு அவனது வேஷப் பொருத்தமும் நடிப்பும் நன்றாகத் துணைநின்றன.

சில்லறை நோட்டுக்களாகவும் நாணயங்களாகவும் இருந்த தொகையை இரண்டுபத்து ரூபாய், ஓர் ஐந்து ரூபாய் நோட்டுக்களாக மாற்றி வைத்துக் கொண்டான். இதைத்தவிர அவனுடைய சொந்தப்பணம் இரண்டு ரூபாய் வேறு இருந்தது.

நோட்டுப் புத்தகத்தை என்ன செய்வது? முதலில் கிழித்தெறிந்துவிடலாம் என்றுநினைத்தான். பென்சிலிலும், பேனாவிலும் எழுதப் பட்ட பலதரப்பட்ட கையெழுத்துக்களைப் பார்த்த போது அவனுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. கிழிக்காமல் சும்மா வைத்துக் கொண்டான்.

பஸ்ஸை விட்டு இறங்கியவன் உற்சாகமாக விசிலடித்துக் கொண்டு வந்தான். 'பங்க்' கடை ஒன்றின் அருகில் வந்தவன் பீடி வாங்குவதற்காக நின்றான். 'பீடி என்ன பீடி! சிகரெட்டே வாங்குடா ராஜா' என்று சொல்லிக் கொண்டே சட்டைப் பைக்குள்ளே கையை விட்டவனுக்குப் 'பகீர்' என்றது.

"இன்னா நாயினு. பிக்பாக்கெட்டா? அடப்பாவி! எவ்வளவு கோட்டை விட்டே? ஜாக்கிரதையா வைக்கக் கூடாது? நீ ஒரு 'ஐயோ பாவக் கிராக்கியா' 'இருக்கிறே பார்த்தா. ஒன்கிட்டே போய் வேலையைக் காட்டியிருக்கான் பாரு ஒருத்தன்! உம். போனாப் போவுது. நல்லபடியா சம்பாரிச்ச காசா இருந்தா எப்படியாவது வேறு ஒரு விதத்திலே ஒனக்கு வரும். பயப் படாதே நயினா!" என்று தேறுதல் சொன்னான் பெட்டிக் கடைக்காரன்.

'நல்லபடியா சம்பாரிச்ச காசு' என்ற தொடரைக் கேட்ட போது கன்னையனுக்குச் 'சுருக்' என்றது. அவனுடைய இரண்டு ரூபாயும் சேர்ந்தல்லவா பறி போய் விட்டது! இருந்தாலும் அவன் தன்னை 'ஒரு ஐயோ பாவக்கிராக்கி' என்று வர்ணித்ததை நினைத்ததும் அவனுக்குச் சிரிப்பு வந்தது. திருப்பணி நிதி திரட்டும் தோரணையிலேயே இருந்த கன்னையனது வேஷமும் நெற்றிக் குறியுமே அவன் கண்களை ஏமாற்றி விட்டன.

சேடி சன்னாசி, தான் பிக்பாக்கெட்' அடித்த தொகையை எண்ணிப் பார்த்தான். இருபத்தேழு ரூபாய்! பரவாயில்லே. வேட்டை அப்படி ஒன்றும் சோடை போகவில்லை என்று எண்ணிக் கொண்டான்.

ரூபாய் நோட்டைச் சட்டென்று மடித்து வைத்துக் கொண்டு நாலு புறமும் பார்த்தான். யாரும் அவனைப் பார்த்திருக்க முடியாது என்றாலும் சில சமயங்களில் யாராவது பின் தொடர்ந்து வந்து நிலைமையை எக்கச் சக்கமாக ஆக்கி விடுவதும் உண்டு.

பின்னாலே திரும்பிப் பார்த்தவனுக்குத் 'திக்' என்றது. யாரோ ஒரு சிவப்புத் தொப்பி இவனை நோக்கி வருவது போலிருந்தது.

சன்னாசி சமாளித்துக் கொண்டு எட்டி நடை போட முயன்றான். அதற்குள் அவன் பயந்ததற்கு ஏற்றவாறே பின்னால் யாரோ கையைத் தட்டிக் கூப்பிடும் சத்தம் கேட்டது. திரும்புவது பயனைத்துக்கு அறிகுறி என்று நினைத்தபடி தன்னை யாரும் கூப்பிடவில்லை என்ற பாவனையில் நடந்தான் சன்னாசி. தொடர்ந்து கையைத் தட்டும் சத்தம் அதிகரித்தது. அவனுடைய பெயரையே சொல்லி யாரோ கூப்பிடுவதும் கேட்டது.

சன்னாசிக்குத் தெரியும், அது யாருடைய குரல் என்று. போலீஸ்காரர் கந்தசாமியினுடைய குரல் தான் அது. மனிதர் மோப்பம்

பிடித்து விட்டுத்தான் வருகிறாரா? 'என்னடா! வம்பு தன்டாலிலே போய் மாட்டிக்கிட்டேனே' என்று அவனது உதடுகள் முணுமுணுத்தன.

நிமிட நேரத்துக்குள் ஏதாவது செய்தால் தான் உண்டு. அவன் நின்ற இடத்துக்கு நேரேயே ஒரு சிறிய பிள்ளையார் கோயில் அவனது கண்ணில் பட்டது. அதன் பக்க வாட்டுச் சுவரில் இருந்த மாடக் குழியில் எப்பொழுதும் திருநீறு நிறைந்திருக்கும் என்று அவனுக்குத் தெரியும்.

தற்போதைக்கு நோட்டுக்களை அந்தத் திருநீற்றிலே செருகி வைத்து விடுவது என்று தீர்மானித்தான். போலீஸ்காரர் கூப்பிட்டதற்காக நின்றது போலவும், கோயிலை எதேச்சையாகப் பார்த்ததும் தோப்புக் கரணம் போட்டுக் கும்பிடுவது போலவும் 'தோன்றட்டும்' என்று கும்பிடு போட்டான். சன்னாசி ஓர் எட்டில் மாடப் பிறையை அடைந்து கையை விட்டுப் பார்த்தான். அவன் துரதிர்ஷ்டம் அது அநேகமாகக் காலியாயிருந்தது. அதில் நோட்டுக்களை வைத்தால் தெரிந்துவிடும்.

வேறு என்ன செய்வது? அந்தச் சின்னஞ்சிறு கோயிலின் கதவு கம்பி போடப்பட்ட கதவு. அதில் எங்கேயாவது செருகி ஒளித்து வைக்கலாம் என்று பார்த்தால் ஒன்றும் வாட்டப்படாது போலிருந்தது. கதவின் உட்புறத்தில் கதவோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்த தரும உண்டி அவன் கண்ணில் பட்டது. அதில் காணிக்கை போடுபவர்கள் வெளியில் இருந்தே கம்பிகளின் இடைவெளி வழியாகக் கையை விட்டுப் போட முடியும்.

கடைசியில் கைக்கு எட்டியது வாய்க்கெட்டாது போலிருக்கிறதே! எல்லாவற்றையும் உண்டியில் போட்டு விட்டு அடியோடு 'பறி கொடுப்ப'தைத் தவிர வேறு வழியில்லையே?

போலீஸ்காரர் அருகில் நெருங்கி வந்து கொண்டிருந்தார். சன்னாசி மேலும் தாமதித்து மேலும் விஷப் பரீட்சை செய்ய விரும்பவில்லை. காரணங்கள் இரண்டு. ஒன்று கந்தசாமி கண்டிப்புக்காரப் பேர்வழி. இரண்டாவது அவன் 'உள்'ளே இருந்து 'வெளி'யில் வந்து இன்னும் இரண்டு மாதங்கள் கூடப் பூர்த்தியாகவில்லை.

தனது தலைவிதியை நொந்து கொண்டே இருபத்தேழு ரூபாயை — நோட்டுக்களை — கண்ணிமைப்பதற்குள் உண்டிக்குள் போட்டு விட்டு முகத்தில் சகஜ பாவத்தை வரவழைத்துக் கொண்டு விட்டான்.

மறுபடியும் மாடப்பிறையில் கையை விட்டுக் கொஞ்சநஞ்சம் மீதி இருந்த விபூதியை எடுத்து நெற்றியிலும் கழுத்துப் பட்டையிலும் பூசிப் பக்திப் பரவசத்தோடு நின்றான்.

போலீஸ் கந்தசாமி அருகில் வந்து கேடிகளைப் பார்க்கின்ற அவர்களுக்கே உரிய நிரந்தரமான சந்தேகக் கண்ணோடு சன்னாசியைப் பார்த்தார்.

''வணக்கம் வாத்தியாரே!'' என்றான் செயற்கையான தெம்புடன்.

''என்னடா சன்னாசி. ரொம்ப அலட்டிக்கிறேயே! என்ன விஷயம். பிள்ளையார் கோயிலாண்டே என்ன வேலை உனக்கு?'' என்று வேடிக்கையாகக் கேட்ட கந்தசாமி, கம்பிக் கதவுக்குப் பின்னாலிருந்த உண்டியைப் பார்த்து விட்டு ''என்னடா உண்டியைப் பேர்க்கலாம்னு பார்க்கிறியா? அதான் உன் மாதிரி 'கேடி'களுக்காகத்தான் எம்மாம் பந்தோபஸ்திலே வச்சிருக்கான் பார்த்தியா உண்டியை'' என்றார்.

''என்ன வாத்தியாரே, இப்படிச் சொல்லிட்டே! நீ கூப்பிடவே நின்னேன். அப்படியே புள்ளாரைக் கும்பிட்டுத் துன்னூறு இட்டுக்கினேன்'' என்றான் சன்னாசி.

போலீஸ்காரர் கந்தசாமி சன்னாசியையும் உண்டியையும் ஒரு முறை பார்த்து விட்டுக் கதவின் பிரம்மாண்டமான பூட்டை இழுத்துப் பார்த்தார்.

''அது போகட்டும். தீப்பெட்டி வச்சிருக்காயா? அதுக்குத்தான் கூப்பிட்டேன்'' என்று கந்தசாமி பேச்சை மாற்றியதும் சன்னாசிக்கு நிம்மதியாக மூச்சு வந்தது.

தீப் பெட்டியை அளவுக்கு மீறிய பணிவுடன் எடுத்து ஒரு குச்சியை உரைத்துக் கந்தசாமியின் வாயில் இருந்த சிகரெட்டைப் பற்ற வைத்தான் சன்னாசி.

கந்தசாமி புகையை ஒரு தரம் உறிஞ்சி விட்டு, ''உம். இனிமேயாவது குறியாஇருடா கழிதே. முதல்லே இந்த உண்டிகிட்டே இருந்து நகரு'' என்று கூறி நடந்தார்.

சன்னாசி கதவின் பின்னால் இருந்த பிள்ளையார் விக்கிரகத்தைப் பார்த்தான். 'அப்பாடா ஒரு கண்டத்திலிருந்து தப்பிச்சோம்' என்ற நினைவில் நன்றியுணர்ச்சியுடன் அவன் பிள்ளையாரைப் பார்த்துக் கன்னத்தில் போட்டுக் கொண்ட அதே நேரத்தில் அவன் மனத்தில் பிள்ளையார் மீது விசித்திரமான பொறாமையும் ஏற்பட்டது.

பிள்ளையார் எல்லாவற்றையும் மௌனமாகப் பார்த்து வஞ்சகமாகச் சிரித்துக் கொண்டிருப்பது போல் பட்டது சன்னாசிக்கு.



இழவி: நம்ம கோண்டு காசிக்குப் போயிருந்தானேல்லியோ, போன இடத்திலே உசிரை விட்டுட்டானாம்.
இழவர்: காசிக்குப் போனால் ஏதாவது ஒன்னை விடணும்னு பெரியவா சொல்லுவா. அதை அவன் விட்டுட்டானாக்கும்!



புதுமைக்கு

திருப்பனந்தாள் ஆதீனத்துத் தமிழ்க் கல்லூரி விரிவுரையாளர் திரு. சொ. சிங்காரவேலன் அவர்கள் புதுமைக்குப் பழமை எழுதுவதாகப் பாவித்து எழுதிய 22 கடிதங்கள் அடங்கிய நூல் இது. இந்த 22 கடிதங்களிலும் இலக்கிய, இலக்கணம், சமயம், கலை ஆகியவை தொடர்புடைய செய்திகளை நன்றாகவும் நயமாகவும் விளக்கியிருக்கிறார். இத்தகைய கடித முறைகளில் நேருக்கு நேர் பேசுவது போல் ஆற்றலுள்ளதாக அமைகிற சிறப்பு வாய்க்கும். இந்த நல்ல நூலிலும் அந்தச் சிறப்பு அமைந்துள்ளது.

ஆசிரியர்: திரு சொ. சிங்காரவேலன். வெளியீடு: சைவ சித்தாந்தக் கழகம், சென்னை–1. விலை ரூ. 1–75.

கோவலன் மாதவியால் மனம் இழந்தது ஏன்?

சிலம்பைப் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகள் நான்கும், இராமாவதாரத்தைப் பற்றிய திறனாய்வுக் கட்டுரைகள் நான்கும், பிற கட்டுரைகள் இரண்டும் இந்நூல் இலக்கியச் சிந்தனைகளை வளர்ப்பதாக அமைந்துள்ளது.

தர்மம் காத்ததாரை, — பிள்ளைப் பாசம் கட்டுரைகள் மிகவும்நயமாக அமைந்துள்ளன.

ஆசிரியர்: பி. என். நாச்சியப்பன், வெளியீடு: பொன்னழகம்மை நூலகம், கண்டனூர் ரோடு, காரைக்குடி. விலை ரூ. 1.

கட்டபொம்மன் கதைப் பாடல்

திரு நா. வானமாமலை அவர்கள் தென்றுச் சீமையில் வாழ்ந்து வருகிறவராகையால்கட்டபொம்மன் கதைப்பாடல்கள் பற்றிய ஆராய்ச்சியில் தோய்ந்து ஈடுபட்டுச் சிறந்த பாடல்களைத் தேடிச் சேகரித்து நூலாக்கும் வாய்ப்பு மிகுதியாய் அமைந்துள்ளது.

தோழர் வானமாமலை இந் நூலுக்கு எழுதியுள்ள முப்பத்திரண்டு பக்க முன்னுரை கருத்துக் கருவூலமாக அமைந்து பல அரிய உண்மைகளை விளக்குகிறது. நூலுக்கு ஒரு நுழை வாயிலாக அமைந்து உள்ளே இருக்கும் நாட்டுப் பாடல்களைக் கற்கத் துணை செய்கின்றன.

பிற்சேர்க்கையாக வந்துள்ள தீர்ப்பு முதலிய பகுதிகளும் நூலின் திறனை எடுத்துக் காட்டுவனவாக அமைந்துள்ளன. கட்டபொம்மனைப் பற்றிப் பலர் பலவாறு கூறும் கருத்துக்களையும் முன்னுரையில் சீர்தூக்கி ஆராய்ந்துள்ளார்; பல புதிய உண்மைகளைக் காரணங்களோடு நிறுவுகிறார். நல்ல பணியாக உருப் பெற்றிருக்கிற இந்த நூலைப் பாராட்டுகிறோம்.

ஆசிரியர்: நா. வானமாமலை, வெளியீடு: என். சி. பி. எச். பிரைவேட் லிமிடெட், நல்லதம்பிச் செட்டித் தெரு. சென்னை — 2, விலை ரூ. 3.

அறிவுரைக் கதைகள்

சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின் சிறு சிறு அறிவுரைக் கதைகள் இருபதைத் தமிழில் மொழிபெயர்த்து அளித்திருக்கிறார் இதன் ஆசிரியர். சிறு கதைகள் யாவும் நீதி போதனை நயமும் அறிவுரைக் கருத்துக்களும் கொண்டிருக்கின்றன.

மொழிபெயர்ப்பு: கி. வானமாமலை; வெளியீடு: ஆத்ம ஜோதி நிலையம், நாவலப்பிட்டி இலங்கை. விலை 65 சதம்.

பணவிடு தூது

சிறு பிரபந்தங்களாகிய நூல்களில் தூது என்பதும் ஒன்று. தூது நூல்களில் விந்தையான பொருள்களைத் தூதனுப்புவதாக எழுதப்பெற்ற பல நூல்கள் உண்டு. இவற்றில் பண விடு தூது என்பதும் ஒன்று. பழைய நூலாகிய இதனை மீண்டும் திரு அன்னுமலை அவர்கள் குறிப்புக்களுடனும், விளக்கங்களுடனும் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். வித்துவான் நாராயணசாமி அவர்களும் இந்தப் பதிப்புப் பணிக்குத் துணை செய்துள்ளார். இலக்கிய ஆர்வமுள்ள யாவரும் படிக்க வேண்டிய பிரபந்தம்.

பதிப்பாசிரியர்கள்: வலம்புரி அன்னுமலை, வித்துவான் க. நாராயணசாமி. அருணு பப்ளிகேஷன்ஸ், தியாகராயநகரம், சென்னை-17; விலை ரூ. 1–25.

செந்தமிழ்ச் சோலை

நாஞ்சில் கவிமணிதாசன் திருசி. ஆதிமூலப் பெருமாள் பல்துறைப் பொருளும் பற்றிப் பாடிய கவிதைகளின் தொகுதி இது. இந்தக் கவிதைகளையும் கவிஞரின் நல்லியல்புகளையும் பற்றிப் பல பெருமக்கள் பாராட்டி வாழ்த்துக் கூறியிருக்கிறார்கள்.

கடவுள் வணக்கம் (முருகன், நபிநாயகம், ஏக எல்லோரையும் வணங்குவது) இலக்கியம், இயற்கை, குழந்தை மொழி, உள்ளமும் உணர்வும், சமூகம், சமயம், தேசியம், பல்கலை ஆகிய எல்லாப் பொருள்களைப் பற்றியும் சிறப்புறப் பாடியுள்ளார் கவிமணிதாசன். சொந்த அனுபவங்களைப் புனைந்த பாடல்களும் நன்ருக இருக்கின்றன.

ஆசிரியர்: கவிமணிதாசன், இடைக்குமிடம் குணந்தாரான் பிள்ளை புத்தக வியாபாரம், கோட்டாறு, நாகர்கோவில், விலை ரூ. 2.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited. at the Kalki Press Kilpauk. Madras-10.
Managing Editor. T. Sadasivam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon